# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை7 வள்ளுவர் ஆண்டு2028 கார்த்திகை28 சனிக்கிழமை(13-12-1997) SANJEAVY-Regenerative Tamil Weekly சிகரம்:28

# தமிழ் - சிங்களக் கைதிகள் களுத்துறையில் கைகலப்பு

## இரு தமிழர், ஒருமுஸ்லிம் பலி; ஏழு பேர் ஆஸ்பத்திரியில்!

கொழும்பு, டிசம்பர் 13

களுத்துறைச் சிறைச்சாலையில் நேற்றுப் பிற்பகல் தமிழ் அரசியல் கைதிகளுக்கும் சிங்களக் கைதிக்ளுக்கும் இடையில் நடந்த கைகலப்பின் போது ஒரு முஸ்லிம் உட்பட மூன்று தமிழ்க் கைதிகள் அடித்துக் கொல்லப்பட்டனர்; படுகாயமுற்ற ஏழு தமிழ்க் கைதிகள் நாகொட ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நீண்ட காலம் கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த சுமார் 225 தமிழ்க் கைதிகள் தங்களுக்கு எதிராக உடன்நீதி மன்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் அல்லது தாங்கள் விடுவிக்கப்பட வேண்டும் எனக் கோரி சிறைச்சாலையில் பல்வேறு எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தியதும்—

அதனை அடுத்து அண்மையில் பலவந்தமாக அவர்கள் களுத்துறைச்சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்ததும் — தெரிந்தவையே.

அக்கைதிகள் அங்கு கொண்டு

(8 ஆம் பக்கம் பார்க்க)

### ரெலோ கண்டனம்

கொழும்பு, டிச. 13

களுத்துறைச் சிறைச்சாலை சம்பவத்தில் உயிரிழந்த தமிழ்க் கைதிகளின் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று ரெலோ செயலதிபர் எம். கே. சிவாஜிலிங்கம் கோரியுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து ஆழ்ந்த கவலையும், அதிர்ச்சியும் அடைந்துள்ளோம். இத்தகைய ஈனப் படுகொலைகளைக் கண்டிக்கின்றோம்.

இச்சம்பவம் குறித்து விசாரிக்க ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### விசாரணை நடத்த கோருகிறது ஈ. பி.டி.பி.

★ களுத்துறைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கவேண்டும்.

★ தவறிழைத்த சிறைச்சாலை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★ தமிழ்க்கைதிகள்மூவரின் படுகொலைக்கும் அரசு பதில் கூறவேண்டும்.

★ தமிழ்க் கைதிகளின் பாதுகாப்பை உத்தரவாதம் செய்யும் வகையில் வேறு

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திர தினத்துக்கு முன் கண்டி வீதி திறக்கப்படும்!

### அனுருத்த கூளுரை


கொழும்பு, டிச. 13

எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி சுதந்திர பொன்விழாக் கொண்டாட்டங்களுக்கு முன்னர் வவுனியா — யாழ்ப்பாணம் நெடுஞ்சாலையை கைப்பற்றுவதற்கு அரசு உறுதி பூண்டுள்ளது.

பதில் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த மேற்கண்டவாறு வெளிநாட்டுச் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

என்ன விலை கொடுத்தும் இந்தப் பாதையை அரசாங்

(8 ஆம் பக்கம் பார்க்க)



## மாவிட்டபுரத்தில் நேற்று பக்தர்கள்!

### பூஜையில் ஆயிரத்துக்கும் அதிகமானோர்

யாழ்ப்பாணம், டிச. 13

கடந்த ஏழு வருடங்களின் பின்னர் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் நேற்று மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் வழிபாடு நடத்தினர்.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குப்பின்னர் செல்ல முடியாத நிலையில் இருந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கு நேற்றுப் பக்தர்கள் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

நேற்றுக்காலை நடந்த கார்த்திகைத் திருவிழாவில் ஆண், பெண், குழந்தைகள் என்று கலந்து கொண்ட ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் அர்ச்சனை செய்தும், மாவிளக்கு இட்டும் தமது நேர்த்தி

(8 ஆம் பக்கம் பார்க்க)

### லாலு பிணையில்!

பட்னா, டிச. 13

ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஜூலையில் கைதாகிய முன்னாள் பீஹார் மாநில முதல்வர் லாலு பிரசாத் யாதவ் நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (உ-3)

## செய்திச் சாரம்

### 'வெற்றி உறுதி' 7 ஆம் மாதம் பூர்த்தி

வவுனியா, டிச. 13

வவுனியா — கிளிநொச்சி இடையே பாதுகாப்பான விநியோகப்பாதை ஒன்றைத்திறப்பதற்கான ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் 7 மாதங்கள் நிறைவு பெறுகின்றன.

கடந்த மே 13 ஆம் திகதி வவுனியா தாண்டிக்குளத்தில் இருந்து இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. (உ-21)

### இன்று போயா: கொழும்பில் தீவிர பாதுகாப்பு

கொழும்பு, டிச. 13

போயாதினமான இன்று கொழும்பில் தாக்குதல் நடத்தலாம் எனக்கருதி கொழும்பின் பாதுகாப்பு அதிகரிக்கப் பட்டுள்ளது.

வீதிச்சோதனைகள், சுற்றிவளைப்புக்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த இரு போயா தினங்களிலும் கொழும்பில் தாக்குதல்கள் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது (உ-21-3)

### சைக்கிள் குண்டு கண்டுபிடிப்பு

மட்டக்களப்பு, டிச. 13

மட்டக்களப்பு நகரில்நேற்று காலை 9-45 மணிக்கு சைக்கிள் குண்டொன்று படையினரால் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

பொதுச்சந்தை சுற்றாடலில் சந்தேகத்திற்கிடமான முறையில்சைக்கிள்ஒன்றுநிறுத்தப்பட்டிருந்தது. இதனை அவதானித்த வியாபாரிகள் பாதுகாப்புத் தரப்பினருக்கு தகவல் கொடுத்தனர். அதனையடுத்து அந்த இடத்துக்கு விரைந்த படையினரால் குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டது. (உ-21)

### குண்டு வெடிப்பு சிறுவன் காயம்

மட்டக்களப்பு, டிச. 13

மட்டக்களப்பு பழுகாமத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற குண்டு வெடிப்புச்சம்பவமொன்றில் 11 வயது சிறுவனொருவன் காயமடைந்தார்.

ஆர். லவிஸ்கரன்(வயது11) என்ற இச்சிறுவன் வீதியில் கிடந்த உருண்டை வடிவான பொருள் ஒன்றை எடுத்துத் தட்டிப்பார்த்த போது அது வெடித்து சிதறியதாகக் கூறப்படுகின்றது. (உ-21)

### மனநோயாளி சுடப்பட்டார்

மட்டக்களப்பு, டிச. 13

மட்டக்களப்பு பொது வைத்தியசாலை நோயாளி ஒருவர் நேற்று முன்தினம் நள்ளிரவு இராணுவத்தின் துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியானார்.

அந்தோனி சசிதரன் (21) என்ற இந்நோயாளி உளநோய் காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

வைத்தியசாலையிலிருந்து வெளியேறி அருகிலுள்ள இராணுவ முகாம் சுற்றாடலில் நடமாடிய போது சந்தேகத்தில் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-21)

### மாங்குளத்தில் குண்டு வீச்சு

வவுனியா, டிச. 13

'வெற்றி நிச்சயம்' யுத்த நடவடிக்கை பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை விமானத்தாக்குதல்கள் இடம் பெற்றன.

மாங்குளம் கிழக்கு, கனகராயன்குளம் வடக்கு பிரதேசங்களில் இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

விடுதலைப் புலிகளின் உணவு, மருந்துக் களஞ்சியங்கள் குண்டு வீச்சில் அழிக்கப்பட்டதாகவும்—

'பிக்கப்', ட்ரக், உழவுஇயந்திரம் போன்ற வாகனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும்—

இராணுவத் தரப்பு தகவல்கள் தெரிவித்தன. (உ-21)

### பூப்பறித்த பெண் சூட்டுக்கு இலக்கானார்

மட்டக்களப்பு, டிச. 13

மட்டக்களப்பு பிள்ளையாரடியில் நேற்றுக் காலை நவரெட்ணம் விஜயலட்சுமி (வயது 42)என்ற பெண்மணி பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தார்.

பொலீஸ் காவல் நிலையம் அருகில் வசிக்கும் மேற்படி பெண் அதிகாலை வழமை போல் வீட்டில் பூப்பறித்துக் கொண்டிருக்கையில் சூட்டுக்கு இலக்கானார்.

### தேர்தலில் கூட்டணி

சென்னை, டிச. 13

இந்தியாவில் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் தி. மு. கவும் தமிழ் மாநில காங்கிரஸும் கூட்டணியமைத்துப் போட்டியிடும்.

தமிழக முதல்வரும் தி. மு. க. தலைவருமான மு. கருணாநிதி மேற்கண்டவாறு தெரிவித்தார். (உ-3)

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை மாணவி

**செல்வி இ. காயத்திரி**

அவர்களின் அருமைத் தந்தையாரான

**இராசரட்ணம் இராஜதுரை**

அவர்களின் திடீர் மறைவையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**98 ஆம் ஆண்டு வர்த்தகப் பிரிவு ஆசிரியர்கள், மாணவிகள்.**

**யா / வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.** (51800)

# மரண அறிவித்தல்கள்

## இளையதம்பி சின்னையா

கரவச்சை அளவெட்டியைச் சேர்ந்த இளைப்பாறிய சப். இன்ஸ்பெக்டர் இளையதம்பி சின்னையா 12 - 12 - 97 அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்வநாயகி மற்றும் சாந்தநாயகி, தவராசா (கிராம உத்தியோகத்தர், அளவெட்டி மேற்கு), காலஞ்சென்ற குணரத்தினராசா, தேவராசா (ஹொலன்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம் (இளைப்பாறிய விவசாய போதனாசிரியர்), யோகமணி (அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற இரத்தினம், இராசையா (இளைப்பாறிய பிரதம லிகிதர், பொலீஸ் திணைக்களம்) காலஞ்சென்ற செல்லத்துரை (கோப்ரல் இலங்கை இராணுவம்) மற்றும் நாகராசா (அதிபர், மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுதர்சன், சுஜந்தன், சுஜன்யா, புருசோத், லதாங்கி, வரகுணன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13-12-97) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தகவல்:
சி. தவராசா
(மகன்)

கரவச்சை,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி. (51802)

## இராசையா பூரணம்

நல்லூர் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இராசையா பூரணம் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா - செல்லமுத்து ஆகியோரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், கோகிலலச்சுமி, அன்னலெச்சுமி, மகேந்திரன் (இலங்கை மின்சார சபை, (C. E. B) யாழ்ப்பாணம்), அரிச்சந்திரன், சந்திரமோகன், சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தாயாரும், பேரின்பநாயகம், சரஸ்வதி, சுப்பிரமணியம், ராகுலன், கமலவதி, சுகந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, சபாரத்தினம், அமிர்தரத்தினம் மற்றும் பொன்னுத்துரை, நடராசா, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இலக்கம் 34/2, கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக (13-12-97) இன்று சனிக்கிழமை காலை 10 00 மணியளவில் அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ மகேந்திரன்
(மகன்)

(51803)

## சின்னப்பு - கணேசன்
(புரட்சி கணேசன்)

அல்வாய் வடக்கு ஆலங்கட்டையைச் சேர்ந்தவரும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க முன்னாள் உபதலைவரும், சமூக சேவையாளருமான சின்னப்பு-கணேசன் வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

இவர் சோதிமுத்துவின் கணவரும், பிறேமாவதி, சபாரட்ணம், கனகரட்ணம், புஸ்பவதி ஆகியோரின் அன்புத்தந்தையும், மு. கந்தசாமி. ச. சந்திராதேவி, க. ஜெயமணிதேவி, கி. இராசதுரை ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நேற்றைய தினம் 12-12-97 மாலை நடைபெற்றன என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
மு. கந்தசாமி
(மருமகன்)

''திருவேரகம்''
அல்வாய் வடக்கு,
அல்வாய். (51794)

# புலிகளின் இலக்குகளாக தலைநகரில் 17 இடங்கள்

கொழும்பு, டிச 13

கொழும்பு நகரில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் இலக்குகளாக 17 இடங்கள் அமைந்துள்ளன என பாதுகாப்பு வட்டாரங்களுக்கு தகவல் கிடைத்துள்ளதாக 'திவயின' சிங்கள நாளிதழ் தெரிவிக்கிறது.

இதன்படி ரூபவாஹினி கூட்டுத்தாபனம், மத்திய வங்கி, ரெலிகொம் நிறுவனம், கொழும்புத் துறைமுகம், பொலீஸ் தலைமையகம், கடற்படைத் தலைமையகம், விமானப்படைத் தலைமையகம், இராணுவத் தலைமையகம், உறுகொடவத்த எண்ணெய்த் தாங்கிகள், களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையம், நாடாளுமன்றத் தொகுதி, ஜனாதிபதி மாளிகை, புளுமண்டல் வீதி எண்ணெய்த் தாங்கிகள், லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனம், ரத்மலானை விமான நிலையம், உலக வர்த்தக மையம் ஆகியன விடுதலைப் புலிகளின் தாக்குதல் இலக்குகளாக அமைந்துள்ளதால் இந்நிலையங்களுக்கு விசேட பாதுகாப்பை வழங்குவது குறித்து கொழும்பு நகரின் பாதுகாப்புக்குப் பொறுப்பான அதிகாரிகள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

இந்நிலைகள் மீது தாக்குதல்களை மேற்கொள்ள ஏற்கனவே 20 விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொழும்பு நகருக்கு வந்துள்ளனர் என நம்பப்படுகிறது. (ஐ-10)


**BARATHY**
சித்தங்கேணி
கணக்கீடு
**A/L 97**
மாணவர்களுக்கு அலகு ரீதியான துரித மீட்டல் வகுப்பு- அச்சடித்த பாடக் குறிப்புக்களுடன்
பங்குடமை முடிவுக் கணக்குகள்
ஆரம்பம்: 14-12-97
ஞாயிறு 11-00 மணி
ஆசிரியர்:
திரு. சதீஸ்
Note; கடந்த காலங்களில் மாணவர்கள் பெற்ற அதி உயர்ந்த பெறுபேறுகளே ஆசிரியரின் திறமைகளை மேலும் உறுதி செய்கின்றன. (49874)

**A/L 98**
கம்பனி
சனி — ஞாயிறு
ஆசிரியர்:
திரு.
வன்னியசிங்கம்
B. Com (Hons)
யாழ். நகரில் அன்றும் இன்றும் கணக்கியலுக்கு தனித்துவம் பெற்ற ஒரே ஒரு ஆசிரியர்.
**COLLEGE OF COMMERCE**
நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்
((51801)

ஆண்டு - 5
புலமைப் பரிசில்' - 1998
மாதிரிப் பரீட்சை- 6
14 — 12 — 1997
ஞாயிறு காலை 9 மணி
**புதிய நாவலர் கல்வி நிலையம்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(51804)


# 5 ஆம் ஆண்டு அஞ்சலிப்பூக்கள்

அமரர்

**சின்னையா இராசையா**

[ஓய்வுபெற்ற பிரதிப்பிரதேச முகாமையாளர், அரச மரக் கூட்டுத்தாபனம்]

மலர்வு: 21-08-1928 உதிர்வு: 09-12-1992

**திதி: 13-12-1997**

எம் உயிரே எம்மைப் பிரிந்து
இன்றோடு ஐந்தாண்டுகள்
சொந்தங்கள் அத்தனையும்
உம் இதயக் கோயிலன்றோ!
வந்தனைக்கும் பூச்சூடி
வானசத்தை நோக்கியழும்
சொந்தங்களைப் பிரிந்து
சொர்க்கத்தைச் சென்றடைந்தீர்!

திருமதி செ. இராசையா
[மனைவி]

ராணிக்கொட்,
7 ஆம் கட்டை,
சங்கானை. (49875)

உ

இளவாலை
மெய்கண்டான் மகா வித்தியாலய
நிறுவுநர்



வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களின்

## சிலை திறப்பு நிகழ்வும் நூற்றாண்டு விழாவும்

(பவளவிழா நிகழ்வு - 2)

தலைவர்:
சைவப்புலவர் சு. செல்லத்துரை
[அதிபர்]

காலம்: 1997 - 12 - 13 சனிக்கிழமை
காலை 9. 30 மணி [கார்த்திகைதீப நாள்]

இடம்: பாடசாலை ஏழூர் அரங்கு

முதன்மை விருந்தினர்:
திருமதி பத்தினியம்மா திலகநாயகம்
(வலி - வடக்கு பிரதேசச் செயலாளர்- மேலதிக அரசாங்க அதிபர்)

சிறப்பு விருந்தினர்கள்:
திரு. ஆ. கமலநாதன்
[பிரதிக் கல்விப் பணிப்பாளர்-தெல்லிப்பழைக் கோட்டம்)
திருமதி கிருபாசக்தி தர்மதாசன்
(நிறுவுநரின் திருமகள்)

நிறுவியவர் நினைவுப் பேருரை:
ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்
(ஓய்வுபெற்றஅதிபர்-உரும்பிராய், சைவத்தமிழ் வித்.)

சிலைவடித்த சிற்பி வை. சொக்கலிங்கம் அவர்களைக் கௌரவித்தலும் பரிசளிப்பு வைபவமும் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- பவள விழாச் சபையினர்

இளவாலை மெய்கண்டான் ம. வி.
இளவாலை. [49872]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னகுளம் சமரில் ஏற்பட்ட இழப்புகளால் வன்னி நடவடிக்கைகளில் பின்னடைவு!

வன்னியில் புதூருக்கு வட கிழக்கே — மன்னகுளம் பகுதியில் — கடந்த வாரம் நிகழ்ந்த கடுஞ்சமர் குறித்து தொடர்ந்து மேலதிக தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

மன்னகுளத்தில் படைத்தரப்புக்கு ஏற்பட்ட இழப்புகளை ஆராயும் இராணுவ ஆய்வாளர்கள், அங்கு களத்திருந்து நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ வெளியேற்றப்பட்ட அரசுத் துருப்புக்களின் தொகையை வெறும் எண்ணிக்கைக் கணக்கில் பார்த்தால் அது ஒன்றும் படைத்தரப்புக்கு பேரிழப்பு அல்ல என்கின்றார்கள். புலிகளின் இறுதிச் சரணாலயமாக இருக்கும் வன்னிப் பெருங்காட்டுக்குள் ஊடுருவுவது என்று அரச உயர் பீடம் தீர்மானித்த அன்றே இத்தகைய எண்ணிக்கைத் துருப்புகளின் இழப்புக்கும் சம்மதித்தாகி விட்டது என்றே கருத வேண்டும் என்கின்றார்கள் அவர்கள்.

பாதுகாப்பான தரை வழி விநியோகப் பாதையைத் திறக்கும் முயற்சிக்கு இத்தகைய எண்ணிக்கையில் துருப்புக்களைப் பலி கொடுப்பது தவிர்க்க முடியாதது என்பது அரசுக்கும் அரசுப் படைகளின் உயர் வட்டாரங்களுக்கும் நன்கு தெரிந்ததே.

இத்தகைய எண்ணிக்கை இழப்பை எதிர்பார்த்துத் தான் இந்த ஆபத்தான இராணுவ நடவடிக்கையை அவர்கள் ஆரம்பித்தார்கள்.

எனவே துருப்புக்களின் இழப்புப் பற்றிய எண்ணிக்கை அரசுத் தரப்புக்கு அதிர்ச்சி தருவதாக இருந்திருக்க மாட்டாது என்பது தான் பொதுவானகருத்து.

ஆனால் மன்னகுளம் சமரில் இழந்தது எந்தப் படையணியை, யாரை என்பது தான் அரசுத் தரப்புக்கு அதிர்ச்சி தருவதாக அமைந்திருக்கின்றது என்கின்றார் ஓர் ஆய்வாளர்.

மன்னகுளத்தில் பேரழிவைச் சந்தித்தது ஸ்ரீலங்கா இராணுவத்தின் இதயசக்தியாக விளங்கிய 53 ஆவது படையணி என்பதுதான் இராணுவத்தரப்புக்கு அதிர்ச்சி தரக் காரணம்.

திறமை, வீரம், உத்வேகம், மனோதிடம், சிறந்த பயிற்சி ஆகியவை மிக்க ஒரு படையணி முன்னணியில் தீரத்துடன் போராடி நகர்ந்து பிரதேசங்களைக் கைப்பற்ற, அதைத் தொடர்ந்து வரும் படையணி கைப்பற்றப்பட்ட பிரதேசத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பாதுகாப்பைப்பலப்படுத்தும். வன்னிச் சமரைப் பொறுத்த வரை ஸ்ரீலங்கா அரசுத் துருப்புகளின் பொதுவான உத்தி இதுவே.

இத்தகைய கொமாண்டோ படையினராகச் செயற்படக் கூடிய—திறமையான படையணி—ஸ்ரீலங்கா இராணுவத்தில் ஒன்றே ஒன்றுதான் இருந்தது.

முன்னர் 'Reserve Strike Force' (RSF) என அழைக்கப்பட்ட இந்தப் படைப் பிரிவு பின்னர் ஸ்ரீலங்கா இராணுவத்தின் சிறப்புமிக்க 53 ஆவது படையணியாகப் பரிணமித்தது.

1995 ஒகஸ்டில் புலிகளின் முற்றுகைக்குள்ளான முல்லைத்தீவு படைமுகாமுக்கு உதவி வழங்குவதற்காகவும் மீட்பு நடவடிக்கைகளுக்காகவும் இந்தப் படையணியின் இரண்டு பிளட்டூன்களே ஹெலி மூலம் முகாமை அண்டிய பகுதியில் தரையிறக்கப்பட்டன. அந்தப் பிளட்டூனில் இருந்த அறுபது படையினரும் வீரத்துடன் போராடிய பின்னர் களப்பலியானார்கள் என்பது வேறு விடயம்.

ஆனால் ஸ்ரீலங்கா இராணுவத்தைப் பொறுத்த வரை இந்தப் படையணியே எந்த ஆபத்தான யுத்த முனையிலும் உயிரைப் பணயம் வைத்து மனோதைரியத்துடன் களத்தில் குதிக்கும் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்.

இந்தப் படையணியின் துருப்புகளுக்கு கொமாண்டோப் பாணியில் எதிரியின் பிரதேசத்துக்குள் ஊடுருவி, எதிரியின் பலத்தை முறியடித்து, முகாம்களைத் தகர்த்து, பிரதேசங்களைக் கைப்பற்றுவது சம்பந்தமான சிறப்புப் பயிற்சிகள் அமெரிக்க இராணுவ நிபுணர்களால் விசேடமாக வழங்கப்பட்டிருந்தன.

1994 - 1995 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் யாழ். குடாநாட்டை அரச படைகள் கைப்பற்றிய போது முன்னணியில் நின்று அரசுத் துருப்புகளை வெற்றிப்பாதையில் இட்டுச் சென்றது இந்த 53 ஆவது படையணிதான்.

வன்னியில் தற்போது மேற்கொள்ளப்படும் 'வெற்றி உறுதி' நடவடிக்கையிலும் யுத்த முன்னரங்கத்தில் ஆபத்துகளை எதிர் கொண்டு களத்தில் தீரத்துடன் போராடி அரசுத்துருப்புகளைப் பொறுத்த வரை வன்னியில் அதன் முதுகெலும்பாக விளங்கியதும் இந்தப் படையணிதான்.

மன்னகுளம் பகுதியில் கடந்த 4 ஆம் திகதி நடந்த கடுஞ் சமரில் 53 ஆவது படையணியின் விசேட படைப் பிரிவுகள் (Special Forces), கொமாண்டோக்கள் (Commandos), வான்வழி பட்டாலியன் (Air mobile Battalions) போன்றவையே பேரழிவைச் சந்தித்திருக்கின்றன.

சாதாரணமாக இராணுவ பட்டாலியன் ஒன்றில் ஆயிரம் முதல் ஆயிரத்து இருநூறு துருப்புகள் இருப்பர். ஆனால் இராணுவத்துக்கு ஆள் பற்றாக்குறையை எதிர்நோக்கும் ஸ்ரீலங்காவில் பொதுவாக அறுநூறு முதல் எழுநூறு துருப்புகள் பட்டாலியனில் உள்ளனர்.

மன்னகுளம் சமரில் குறைந்தது ஒரு பட்டாலியன் துருப்புகளை அரசுப்படை இழந்திருக்கின்றது. சுமார் 250 பேர் பலி; நானூறு பேர் காயம்.

களத்தில் முன்னணியில் நின்ற ஒரு படையணி அழிந்தது அரசுத் தரப்புக்கு ஒரு பேரிழப்பு என்று கூறுவது மிகையாகாது.

## பாசுபதன்

இந்தப் படையணியைக் கட்டி எழுப்ப குறைந்தது ஆறு மாதங்களாவது தேவைப்படும். அதுவும் அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து திறமையான பயிற்சியாளர்களைத் தருவிக்க வேண்டியிருக்கும். அப்படி அவர்கள் உடனடியாக வந்தாலும் பயிற்சியளிப்பதற்கு — ஒரு சிப்பாய்க்கு பல லட்சம் ரூபா என்ற அடிப்படையில் — பயிற்சிச் செலவுகள் ஏற்படும்.

இத்தகைய முக்கிய படையணி இழக்கப்பட்டதால் — அப்படையணி மீளச் சீரமைக்கப்படும் வரை 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை தாமதிக்கப்படலாம் என்று கூறுகின்றார் ஓர் ஆய்வாளர்.

களத்தில் முன்னணியில் நின்று போரிட்டு முன்னேற மனோதிடமும், வீரமும், திறமையும் மிக்க ஒரு படையணி இல்லாவிட்டால் முன்னேறுவதற்கான படைநகர்வு என்பது மிகக் கஷ்டமான தொன்றாகவே இருக்கும்.

மன்னகுளத்தில் புலிகள் விரித்த வலையில் படைத்தரப்பு வீழ்ந்ததாக வெளியான தகவல்கள் வாசகர்கள் அறிந்ததே.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில்— வரவு— செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீடு தொடர்பான விடயம் நாடாளுமன்றக் குழு நிலை விவாதத்துக்கும் —

கடந்த ஐந்தாம் திகதி வரவிருக்கையில், அதற்கு முதல் நாள், நான்காம் திகதியன்று, மன்னகுளம் பகுதியில் புலிகள் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் அவர்களின் முகாம் மீது திடீர்த் தாக்குதல் நடத்தி, சுற்றி வளைத்து, அழிப்பதற்கு அரசுத் தரப்பில் திட்டமிடப்பட்டதாகவும் ஒரு தகவல் வெளியாகி உள்ளது.

மன்னகுளம் வெற்றி பற்றிய செய்தியுடன் பாதுகாப்பு அமைச்சு தொடர்பான விவாதங்களை நாடாளுமன்றத்தில் சந்திப்பது தங்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக இருக்கும் என்று அரசுத் தரப்புக் கருதியிருக்கலாம்.

ஆனால் படைத்தரப்பு ஒரு திட்டம்தீட்ட, புலிகள் அதற்கு வேறு வடிவம் கொடுக்க, நிலைமை தலைகீழாகி விட்டது.

அதனால் கடந்த ஐந்தாம் திகதி அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதங்கள் முடியும் வரை மன்னகுளம் சமர் பற்றிய செய்தி அமுக்கி வாசிக்கப்பட்டது; ஒரு சண்டை நடப்பதான தகவல்கள் கூட வெளியே கசிய விடப்படவில்லை.

4 ஆம் திகதி நிகழ்ந்த பேரழிவு பற்றிய செய்திகள் 6 ஆந் திகதிப் பத்திரிகைகளிலேயே வெளிவந்தன. அதுவும் அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் முற்பகல் முடிவுற்ற பின்பே— ஐந்தாம் திகதி மாலைக்குப் பின்னரே — கொழும்புப் பத்திரிகைகள் மற்றும் வெகுசனத் தொடர்பு சாதனங்களுக்கு தகவல்கள் வெளியிடப்பட்டன.

மன்னகுளம் அழிவும், அதனால் வன்னிப்படை நடவடிக்கைகளுக்கு ஏற்பட்ட பின்னடைவும் அரசாங்க உயர் மட்டத்திலும், பாதுகாப்பு உயர் வட்டாரங்களிலும் பெரும் அதிருப்தியைத் தோற்றுவித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வுத் திட்டத்தைக் காணும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் உட்பட பல உயர் அரச வட்டாரங்கள் படை நடவடிக்கைகளின் போக்குக் குறித்து தமது கவலையை வெளியிட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

★ ★ ★



புலிகளின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் முன்னேறும் 'வெற்றிஉறுதி' படையினர்



வன்னி விநாயகுளம், கரப்புக்குத்திப் பகுதிகளில் நிலைகொண்டிருந்த படையினர் மீது தாம் நடத்திய 'செய் அல்லது செத்துமடி - III' அதிரடித்தாக்குதலின் போது பெட்டிகளுடன் கைப்பற்றிய ஆயுதங்களைப் புலிகள் வாகனங்களில் ஏற்றியிறக்குகின்றனர்.




## வன்னியில் மழை; பாதிப்புறுவது யார்?

வன்னிப் பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அங்கே பெரும் நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

கடந்த வருடங்களை விட இந்த வருடம் தொடர்ந்து மழை பெய்து வருவதாலும் — இன்னமும் தொடர்ந்து மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாலும் நீண்டகாலமாக சரியான திருத்த வேலைகள் செய்யாத குளங்களின் அணைக்கட்டுகள் உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே உடையார்கட்டு குளம், வன்னேரிக்குளம் என்பன உடைப்பெடுத்துள்ளன. தொடர்ந்து நீர்மட்டம் மேலேறி வருவதால் பல குளங்கள் உடைப்பெடுக்கும் நிலையே காணப்படுகின்றது.

இவ்வாறான ஒரு நிலை ஏற்படுவதை தடுக்கும் முகமாக இரணைமடு குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டு மேலதிக தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. ஆயினும் வெளியேறும் நீரைவிட குளத்தில் தொடர்ந்து சேரும் நீர் அதிகமாக இருப்பதால் வான் கதவுகள் மேலும் திறந்து விடப்பட்டு உள்ளது. இப்போது 6 அடி உயரத்துக்கு நீர் வான் பாய்கிறது.

அதேபோல முத்தையன் கட்டு குள நீரேந்துப் பிரதேசங்களிலும் தொடர்ந்து மழை பெய்து வருவதால் முத்தையன்கட்டு குள நீர்மட்டம் இருபது அடியாக உயர்ந்துள்ளது. இக்குளத்தில் ஆகக் கூடிய நீர் மட்டம் 22 அடியான போதிலும் நீண்ட காலம் சரியாகப் பராமரிக்கப்படாத குளத்தின் பாதுகாப்புக்கருதி நீர் மட்டத்தை 20' அடியாக பேண முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே வலது, இடது கரை துரிசுகள் திறந்து விடப்பட்டுள்ளன. மேலும் நீர் அதிகரித்தால் வான் கதவுகளும் திறந்து விடப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு நீர் திறந்து விடப்பட்டால் இடம்பெயர்ந்து பேராறுப் பகுதியில் குடிசைகள் அமைத்து தங்கியுள்ள அனைவரும் பாதுகாப்புக்கருதிவேறு இடங்களுக்கு வெளியேறுவது நல்லது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் பேராறுப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்களில் பெருமளவானவர்கள் வேறு இடங்களில் தற்போது தற்காலிமாக குடி

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பெரிய இரும்புப்பெட்டி (Iron save) (திண்டுக்கல் பெட்டி) ஒன்று குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1, நாவலர் றோட், பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். (51669)

### இராசி பலன்

சோதிடஞானி சண்முகரத்தினம் — மாஸ்ரர் எழுதிய 98 இல் வியாழன், சனி மாற்றப் பலாபலன் நூல் எங்கும் விற்பனையாகின்றது. எங்களிடமும் கிடைக்கும். ரூபா 13. கோபால், கோண்டாவில், தயாளன் கோண்டாவில். (51725)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக் கோழி (புறோயிலர்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: No 317B. நாவலர் றோட், யாழ்ப்பாணம். [51777]

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. ஒரு கிலோ 140/-, தொடர்பு: இல. 40. கோயில் வீதி, யாழ்ப்பாணம் (சுத்தம் செய்து கொடுக்கப்படும்). [51365]

இறைச்சிக் கோழி (புறோயிலர்) இறைச்சிச் சேவல் விற்பனைக்குண்டு. A.M.T. ஸ்ரோர்ஸ் (சிறிகடை), தபாற்கட்டைச் சந்தி, அரியாலை. (51774)

புறோயிலர் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: R S K. கோழிப்பண்ணை, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். விலை 1 கிலோ கிறாம் 130/- (51283)

இறைச்சிக் கோழி புறோயிலர் (Broiler) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [51773]

இறைச்சிக் கோழி புறோயிலர் (Broiler) விற்பனைக்குண்டு. (சுத்தம் செய்து கொடுக்கப்படும்). தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் (சின்னக்கடைக்கு அருகில்.) [51778]

### ஆங்கிலக் கல்வி 98

பேச்சு O/L Distinction, Credit பெறுபேறுடைய (ஆண்டு 6 – 10 உட்பட) ஆரம்ப அறிவு இல்லாதவர்க்கும் கற்பிக்கப்படும். ஆசிரியர், 85 சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [51762]

### MATHS - 98

புலமைப்பரிசில் வகுப்பிலிருந்து O/L வரை கணித பாடத்தில் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் சித்திப் புள்ளி அடையாதவர்களுக்கும் 32 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடைவதற்கு கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி (51702)

## வெங்காயம் விலை உயர்வு

மரக்கறி வகைகளுடன் வெங்காயத்தின் விலையும் அதிகரித்துக் காணப்படுகிறது. ஒரு கிலோ வெங்காயம் 45 ரூபாவாகப் பொதுச் சந்தைகளில் விற்பனையாகிறது.

கடந்த சில வாரங்களாகத் தொடர்ந்து மழை பெய்வதே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது. (ஐ-154)

### மணப்பெண்கள் தேவை

உள்ளூர் அரச உத்தியோகத்தர்கள் பதினைந்து பேருக்கு, வியாபாரிகள் ஏழு பேருக்கு கல்வியுள்ள அழகான மணப்பெண்கள் தேவை. நேரடித் தொடர்பு: காலையில் மட்டும் தொடர்பு: முத்துக்குமாரு செல்லப்பா, புன்னாலைக் கட்டுவன் தெற்கு. (51681)

### மரம்

மலைவேம்பு, சர்க்கரை வேம்பு, பலா, ஆசனிப்பலா, நெல்லி, கரிசிலாங்கண்ணி, வேப்பம் பிண்ணாக்கும் விற்பனையாகிறது. -மில்க்வைற் (சி/2333)

### மணமக்கள் தேவை

பட்டதாரி சகோதரங்களுக்கு மாற்றாகவும், பெண் அபபோதிக்கர், பெண் டாக்டர்கள், பெண் கணக்காளர்கள், ஆசிரியர்கள், வெளிநாடு சென்று மணம் முடிக்க விரும்பும் மணமக்கள் தேவை. தொடர்பு: நேரில் (காலையில்) முத்துக்குமாரு செல்லப்பா, புன்னாலைக் கட்டுவன் தெற்கு. (51682)

### கோழி மருந்து

14-12-97 ஞாயிற்றுக்கிழமை குஞ்சுகளுக்கான கம்புறோ 1 ஆவது, 2 ஆவது மருந்துகள் வழங்கப்படும். மற்றும் பவுல்பொக்ஸ் (ஊசி) மருந்துகளுக்கும் பதிவு செய்து கொள்ளவும், எம்மிடம் குஞ்சுகள் எடுத்தவர்கள் வந்து பெற்றுக்கொள்ளவும். "மல்லிகாபதி" மானிப்பாய். [51790]

## உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் [வ/து]

## முக்கிய அறிவித்தல்

### வாக்காளர் இடாப்பு முடுதலும் கிளைக்குழுத் தேர்தலும்

சங்கத்தின் வாக்காளர் இடாப்பு 31 . 12 . 97-ந் திகதியுடன் மூடப்பட்டு அதனடிப்படையில் கிளைக் குழுத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

ஒருமுழுப் பங்கின் பெறுமதி ரூபா 100 ஆகும். ரூபா 100-ற்கு குறைவான பங்குப் பெறுமதியை கொண்டுள்ளோர் மீதிப் பெறுமதியைக் 31 . 12 . 97 -ற்கு முன் செலுத்தி தமது பங்கினை பூரணமாக்கிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சி. கணபதிப்பிள்ளை, தலைவர்  
செ. சிவபாதசுந்தரம், செயலாளர்.  
(சி/2317)

## நீங்கா நினைவில் 6-ம் மாதம்



### திருமதி மரியம்மா எட்வேட் பிறின்ஸ்

(இளைப்பாறிய ஆசிரியை, யா / கன்னியர்மடம் ம.வி.)

நினைக்க நினைக்க மனம் உருகுதே வாடி  
நித்தமுனை மறவாச் சிந்தையினாலே  
அனைத்திலும் அன்புருவாய் அமர்ந்தவளே!  
புத்தியை ஊட்டிப் பண்பினைக் காட்டி  
பாசத்தின் வீச்சின் அணைத்தாயே!  
உங்களைத் தேடித்தவிக்கின்றோம் தாயே!  
எமைத் துணையின்றி ஏங்க வைத்தாயோ?  
உங்கள் ஆன்மா இறைவனில் தஞ்சம் புகுந்ததையிட்டு  
நிறைவடைகின்றோம்.

உங்கள் நினைவில் வாழும்:  
கணவன், பிள்ளைகள்  
மருமகன், பேரப்பிள்ளைகள்

23, சுவாட்ஸ் லேன்,  
யாழ்ப்பாணம். (51781)

## வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

சகல விதமான கறுப்பு வெள்ளை, கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள். அவற்றின் உதிரிப்பாகங்கள் (I. C) அன்ரனா, பூஸ்ரர்கள், வயர், 10, 20, 30, 40. 50 வாற்ஸ் சூரிய ஒளி மின்கலங்கள் (SOLAR) கசியோ, சீக்கோ, சிற்றிசன் கைக்கடிகாரங்கள், சுவர், மேசை மணிக்கூடுகள் அவற்றுக்கான பற்றறிகள், மின்சாதனப் பொருள்கள், அன்பளிப்பு அழகு சாதனப் பொருள்கள் ஆகியவற்றை நியாய விலையில் பெற்றுக் கொள்ள

இன்றே நாடுங்கள்.

## நியூ சிற்றி ரேடர்ஸ்

135, கஸ்தூரியார் வீதி,  
யாழ்ப்பாணம். (51632)

மீண்டும் யாழ். நகரில் ...

## ஓட்டோ சப்பிளையர்ஸ்

லாண்ட்மாஸ்டர்-குபோட்டா, யன்மார்  
நீர் இறைக்கும் இயந்திரம் -  
வில்லியஸ், றொபின், வூல்சிலி  
ஸ்ரீராம் ஹொண்டா  
என்பனவற்றின் உதிரிப்பாகங்களும்,  
போர்-சிலிவுகளையும்  
மொத்தமாகவும் சில்லறையாகவும்  
பெற்றுக்கொள்ள:

## ஓட்டோ சப்பிளையர்ஸ்

266A, ஸ்ரான்லி வீதி,  
யாழ்ப்பாணம்.  
(றெயில்வே கடவைக்கு அருகில்)

கிளை:  
வீல் ரூவர்ஸ், நல்லூர். (51745)

## முதலாம் ஆண்டு நினைவு நாள்

மலர்வு: 03 — 06 — 1914



உதிர்வு: 25 — 11 — 1996

### திருமதி கந்தையா தங்கம்மா

(குப்பிளான்)

திதி: பூரணை 13-12-97

ஆண்டு ஒன்று சென்றாலும் தங்கள் அன்பும், பாசமும் எங்கள் மனதை விட்டு நீங்காது.

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பிள்ளைகள்,  
பேரப்பிள்ளைகள், மருமக்கள்.

க. தளையசிங்கம்.  
உருப்பிராய் தெற்கு. (51779)

## ஆனந்தா புத்தாண்டு நாளேடு - 1998

★ நாளாந்தம் ஆங்கில, தமிழ் திகதிகள் - திதி, நட்சத்திரம், யோகம் முதலிய வாக்கிய பஞ்சாங்கக் குறிப்புகள் விசேட தினக்குறிப்புகள்

★ ஒரு முகக் கலண்டர், அஞ்சல் கட்டண விவரம். அரச வங்கி, வர்த்தக விடுமுறைகள், பெரியார் நினைவு தினங்கள், புதிய வாய்பாடுகள் முதலிய சிறப்பம்சங்கள்.

★ மற்றும் முகவரிகள், கொடுக்கல் வாங்கல்கள் குறித்து வைப்பதற்கான பக்கங்கள்.

★ இது கலண்டருக்கு கலண்டர், டயறிக்கு டயறி — புதிய, புத்தக வடிவில் புத்தாண்டு நாளேடு!

★ உயர்தர வெள்ளைக் கடதாசியில் இரு வண்ணங்களில் அச்சிடப்பெற்று, மூவண்ணத்தில் ஆர்ட் மேலட்டை அணிந்தது.

**இத்தனைக்கும் ஒரு பிரதியின் விலை ரூபா 30/- மட்டுமே!**

விற்பனையாளர்களும், தமது விலாச விளம்பரங்களை அச்சிட்டு அன்பளிப்புச் செய்யவிரும்பும் வர்த்தகரும் உடனே தொடர்பு கொள்க:

**ஆனந்தா புத்தகசாலை 226, காங்கேசன்துறைச்சாலை, யாழ்ப்பாணம்.** (சி-2305)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திர விரிவுரை

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இன்று சனிக்கிழமை திருமூலர் திருமந்திர விரிவுரை நடைபெற உள்ளது. இவ் விரிவுரை பிரதி போயா தினங்களில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

## மன்னாரில் இருவர் கைது

விடுதலைப் புலிகளுக்கு வள்ளங்களில் பொருள்களைக் கொண்டு செல்வதில் ஈடுபட்டிருந்தனர் என்று கூறப்படும் இருவரை மன்னாரில் பொலீஸார் கைது செய்ததாக இலங்கை வானொலி தெரிவித்தது.

மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள், எரிபொருள்கள் என்பன இந்த வள்ளத்தில் இருந்து கைப்பற்றப்பட்டன என்றும் இவற்றின் பெறுமதி 1 லட்சம் ரூபாவுக்கும் அதிகம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-9)

உ

வீரபத்திரர் துணை

## சாரையடி பத்திரகாளி காம்பிகா சமேத வீரபத்திரசுவாமி கோயில்
## மகா கும்பாபிஷேகம்

நிகழும் ஈசுர வருடம் கார்த்திகைத் திங்கள் 29 ஆம் நாள் [1997—12—14] ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணி முதல் காலை 8.20 மணி வரையிலான சுபவேளையில் நடைபெறும்.

மகா கும்பாபிஷேக பிரதம குரு:

''சிவாகம சித்தாந்த ஞான தேசிகபானு''
''பிரதிஷ்டாலங்கார சித்தாந்தஸாகரம்''

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர் (J. P.)**

பிரதமகுரு: ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில், வல்வெட்டித்துறை.

தலைவர்: அகில இலங்கை சைவக்குருமார், அர்ச்சகர் சபை.

**ஆலய பரிபாலன சபையினர்**

(சி/2336)

## சுகாதாரக் கருத்தரங்கு

நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் திட்டத்தின் கீழ் யாழ். மாநகரசபை சுகாதாரத் தொண்டர்களுக்கான அடிப்படைச் சுகாதாரக் கருத்தரங்குநாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் எதிர் வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை வரை தினமும் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-30)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 01 — 07 — 1925

இறப்பு: 13 — 11 — 1997

### அமரர் நாகலிங்கம் சிவஞானம்

எமது பாசமுள்ள அப்பாவே!
ஆருயிர்த் தெய்வமே!
ஓடி மறைந்ததே எம் கனவுகள்
எமக்கு வாய்விட்டுக் கதற வார்த்தைகள்
இல்லையப்பா
இறுதிவரை எங்களுடன் இணைந்திருப்பீர்...

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சீரணிச் சந்தி,
சண்டிலிப்பாய். (51769)

உ

சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான ஈசுர வருடம் கார்த்திகை மாதம் 29 ஆம் நாள் (14 - 12 - 97) ஞாயிற்றுக்கிழமை காலை 7 - 45இற்கும் 8 - 30 மணிவரையுள்ள பிரதமை திதியும், மிருகசீரிட நட்சத்திரமும், சித்த யோகமும், தனுலக்கினமும் கூடிய சுப முகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
**முரளி**
(இயந்திர இயக்குநர்)
நியூசிலாந்து
அவர்களுக்கும்

எமது புத்திரி
**திருமலர் செல்வம்**
அவர்களுக்கும்

வல்வை ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில், வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வர சுவாமி துணை கொண்டு திருமணம் நிகழ இருப்பதால் அத்தருணம், தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

டாக்டர் க. ஆனந்தவேல்
திருமதி ஜெயராணி ஆனந்தவேல்,
தெணியம்பை,
வல்வெட்டித்துறை.

திருமதி
சந்திரகாந்தி அப்பாச்சாமி
காட்டுவளவு,
வல்வெட்டித்துறை.

(இருவீட்டார் அழைப்பு) (51755)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை நீர்வேலி
## கேள்வி அறிவித்தல்

### கோப்பாய் மத்திய சந்தைக் கட்டடத்தில் அமைந்துள்ள இல 01-11 வரையிலான கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமை

01 - 01 - 1998 ஆம் ஆண்டிலிருந்து எமது சபைக்குச் சொந்தமான (முன்னர் உரும்பிராய் கமநலச் சேவை நிலையம் அமைந்திருந்த) கட்டடத்தில் கோப்பாய் மத்திய சந்தை இயங்கவுள்ளது என்பதை பொதுமக்கள் கவனத்திற்கு அறியத்தருகின்றேன். மேற்படி மத்திய சந்தை இயங்கத் தொடங்கிய பின்னர் சந்தைக்கு ஒருமைல் சுற்றாடலில் எவ்விடத்திலும் மரக்கறி, மீன் வியாபாரம் செய்வது அனுமதிக்கப்படமாட்டாது என்பதை பொது மக்கள் கவனத்திற்கு அறியத்தருகின்றேன்

1. கோப்பாய் மத்திய சந்தையில் அமைந்துள்ள 11 கடைகளிலும் வியாபாரம் செய்யும் உரிமைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து 31-12-1997-ந் திகதி நண்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணியளவில் திறந்து பரிசீலிக்கப்படும்.
2. கேள்விப் பத்திரங்கள் 29-12-1997ஆந் திகதி பிற்பகல் 2.00 மணிவரை கேள்விப்பத்திரக் கட்டணமாக 150/-ம் மீளளிப்புச் செய்யப்படும் கேள்வி வைப்புப் பணமாக 2,000/-ம் செலுத்துபவர்களுக்கே வழங்கப்படும்.
3. நிரப்பப்பட்ட கேள்விகள் குறிக்கப்பட்ட தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக விசேட ஆணையாளர், வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி என முகவரியிடப்பட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் கடைகளுக்கான கேள்வி எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது இச்சபையின் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போடப்படுதல் வேண்டும்.
4. கடைகளைத் தெரிவு செய்யும் முன்னுரிமை கூடிய கேள்வி அடிப்படையில் வழங்கப்படும்.
5. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்ட பின் கடையைப் பொறுப்பேற்காது விடின் அவரது கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
6. ஒருவர் ஒரு கேள்விக்கு மேல் சமர்ப்பிக்க முடியாது.
7. மேற்படி கடைகளில் கீழ்வரும் வியாபாரங்கள் செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.
   அ) தேநீர்க்கடை/சாப்பாட்டுக்கடை
   ஆ) மீன்/இறைச்சி/கருவாடு/மரக்கறி வகை/ மதுபானம் விற்பனை செய்தல்.
8. கேள்விகளை ஏற்றுக் கொள்ளவோ, நிராகரிக்கவோ சபைக்கு பூரண அதிகாரமுண்டு.
9. ஒவ்வொரு கடையின் ஆகக் குறைந்த கேள்வித் தொகை 25,000/-
10. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை இவ் வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

**கதிரவேலு கேதீஸ்வரன்**
விசேட ஆணையாளர்.

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
12 - 12 - 1997 (சி/2335)

## நினைவஞ்சலி

2 ஆவது



### மயில்வாகனம் தனராஜா
(ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்கள ஓவசியர்)

தோற்றம்: 10—04—1914
மறைவு: 05—12—1995
திதி: 13—12—1997

9 ஆவது



### சிவஞானமணி தனராஜா

தோற்றம்: 03 01—1918
மறைவு: 03—12—1988
திதி: 24—12—1997

எமது குடும்பத்துக்கு ஒளிர்வூட்டி எங்களைப் பாசத்துடன் வளர்த்த பப்பா, அம்மா ஒளிவிளக்காய் எங்கள் உள்ளத்தில் என்றும் ஒளிர்வீர்களாக.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

30, விதானையார் வீதி,
சுண்டுக்குளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னகுளம் சமரில்...

(மூன்றாம் பக்கத் தொடர்)
சைகளை அமைத்து தங்கி வருகின்றனர். அக்கராயன் குளம் தவிர ஏனைய சகல குளங்களும் நிரம்பிப் பாய்கிற நிலையில் டல இடங்களிலும் குளங்களின் கரைகள். வான் பாயும் பரப்புகளை அண்டிய பிரதேசங்கள்,போன்றவற்றில் இடம் பெயர்ந்தவர்கள் பெருமளவில் தற்காலிக குடிசைகளை அமைத்து தங்கி வருகின்றனர்.

தொடர்ந்து மழை பெய்து —குளங்களின் அணைக்கட்டுகள் உடைத்தால் — உயிர், சொத்து சேதங்கள் அதிகளவில் ஏற்பட்டு விடலாம் என்ற அச்சத்தில் வன்னிப் பகுதியின் நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் பகீரத முயற்சிகளை மேற்கொண்டபடி இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. போக்குவரத்து, தொலைத்தொடர்பு சிக்கல்களுக்கு மத்தியிலும் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ஒரு முறை குளங்களின் நீர் மட்டம் நீர்ப்பாசன திணைக்களத்தின் தலைமைப் பணிமனைகளுக்கு அனுப்பப்பட்டு பொறியியலாளர்களால் பரிசீலிக்கப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளை பற்றி தீர்மானிக்கப் படுவதாகவும் அறிய வந்தது.

இதே வேளையில் நீண்ட பல வருடங்களின் பின் தாராளமாகப் பெய்த மழையினால் மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்த விவசாயிகள் முகங்களில், தொடர்ந்து பிடித்திருக்கும் மழையால் கவலை படிய ஆரம்பித்து விட்டது. பயிர்செய்யப்பட்டு 45 முதல் 50 நாட்களான நிலையிலுள்ள நெற்பயிர்கள் மழை நீரில் மூழ்கிக்கிடக்க— நீண்ட நாள்களின் பின் அரசாங்கத்தால் அனுப்பிவைக்கப்பட்ட ரீ.பீ எம். உரத்தை உரிய நேரத்தில் பயிர்களுக்கு இட்டு பயிர்களைத் தேற்றிவிடலாம் என்றஎண்ணத்தில் தொடர்ந்தும் இடியாக இறங்கியிருக்கிறது இடியுடன் கூடிய மழை. குஞ்சுமோட்டை, கோடாலிக் கல்லு பகுதியில் பயிர்கள் மழை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. அதே வேளை பயிர்கள் மடிச்சுக்கட்டி, கொக்கு வெள்ளை போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டு இருக்க — அதனை தடுக்கக் கூடிய கிருமி நாசனிகளை தட்டுப்பாட்டுக்கு மத்தியில் அதிக விலை கொடுத்து வாங்கி வைத்திருந்தும் — பயிர்களுக்கு அவற்றை அடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அடித்தால் மழை வெள்ளம் பயிரைக் கழுவி கிருமி நாசினியைச் செயலிழக்கச் செய்து விடும்.

அங்கு இடம்பெயர்ந்து வாழும் அகதிகளின் நிலையோ எழுத்தில் வடிக்க முடியாதது. தற்காலிகமாக அமைத்த குடிசைகள் காற்றினாலும், மழையினாலும் பிய்ந்து தொங்கிக் கொண்டிருக்க — வெளியே மழை தூறிக்கொண்டிருந்தால் - வீட்டிற்குள்ளும் மழை பெய்யும் நிலையில் - நிலம், சேறும் சகதியுமாகி — ஒதுங்கக்கூட, சிறுகுழந்தைகளை உறங்க வைக்கக்கூட இடமில்லாத நிலையில் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். நோய்கள் அவர்களை ஆட்டிப் படைக்கின்றன. ஒட்டுசுட்டான் பகுதியில் சுவர் இடிந்து விழுந்து 1½ வயதுக் குழந்தை ஒன்று பரிதாபமாக இறந்து விட்டது.

வன்னியின் பெரும்பாலான வைத்தியசாலைகள் நோயாளர்களால் நிரம்பி வழிகின்றனவாம். மலேரியா, வயிற்றுளைவு போன்ற நோய்கள் மக்களை ஆட்டிப் படைக்கின்றன. புதுக்குடியிருப்பில் 4பேர் மலேரியாவினால் இறந்து விட்டனர்.

இவைகளுக்கு மத்தியில் படையினரின் ஷெல், குண்டுத் தாக்குதல்கள். எங்கே, எப்போது என்ன நிகழும் என்று தெரியாத நிலையில் உயிரைக் கையிலே பிடித்த படி வாழும் மக்கள் திடீரென ஷெல் விழுந்தால்—கிபிர் குண்டு வீசினால் —கைக் குழந்தைகளையும் தூக்கிக் கொண்டு கொட்டும் மழையில்—எங்கே போவது என்று தெரியாமல் — ஒவ்வொரு பாடசாலைகளாக. கோயில்களாக 'இடமிருக்கிறதா? தங்கலாமா?'—என்று விசாரித்தபடி அலைவது கவலைதரும் காட்சிகள்...........

பெரும்பாலான— அகதிகள் தஞ்சமடைந்திருந்த — பாடசாலைகள் பலவற்றினுள்ளே வெள்ளம் தஞ்சமடைந்திருப்பதால் மக்கள் வீதியில் வேறிடம் தேடி அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

தற்போது 'வெற்றி உறுதி' படையினரின் ஷெல் தாக்குதலுக்கு அடிக்கடி உள்ளாகும் பிரதேசம் வன்னிக்குளம், வவுனிக்குளம் பகுதிகள் தான். எனவே அந்தப் பகுதி மக்கள் கையிலே கிடைத்த பொருள்களுடன் மழை நீரில் குளித்தபடி ஓட்டமாக ஓடி அலையும் காட்சி தற்போது சாதாரணமாகிவிட்டது.

இவ்வாறு மக்கள் அல்லற்பட்டுக்கொண்டிருக்கும் அதே வேளையில்,வெற்றிஉறுதி நடவடிக்கை மூலம் முன்னேறிய படையினர் படும் அவலம் படு மோசமானது. மழைநீர் பாயும் பகுதிகளில் மிதிவெடிகளுக்குப் பயந்து காலடி எடுத்து வைக்க அஞ்சிய துருப்புகளுக்கு இப்போது புதுப் பிரச்சினையாக பாம்பு, கொடுக்கான், பூரான் ஆகியவை கிளம்பியிருக்கின்றன. புலிகளுக்கும் இதேபிரச்சினை தான். கடந்த வாரத்தில் ஒரு போராளி பாம்பு தீண்டி இறந்து போனதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிரசெங்கண்மாரி,மஞ்சள்காமாலை வருத்தங்களும் படையினரை ஆட்டிப்படைக்கின்றன. நிலத்துக்குக்கீழான பங்கர்களில் வெள்ளம் புகுந்து பாதுகாப்புக்கு அச்சுறுத்தும் அதேவேளை- படையினரால் துப்புரவு செய்யப்பட்ட பகுதிகளிலும் துணிவுடன் நடமாடமுடியாத நிலை. கடந்த மாத பிற்பகுதியில் வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட மிதிவெடி ஒன்றுகாவலரணுக்குப் பக்கத்தில் ஒதுங்கிய போது அதில் கால் வைத்த சிப்பாய் ஒருவர் காலை இழந்தார்.

அதுமட்டுமல்லாமல் சேறும் சகதியுமான நிலப்பரப்பில் முன்னேறுவதற்கு கனகரக வாகனங்களை பயன் படுத்த முடியாத நிலை வேறு. ஏற்கனவே முன்னேறிய கரிப்பட்ட முறிப்புப் பகுதியில் பல இராணுவ ட்ரக்குகள், ஜீப்புகள் மட்டுமல்லாமல் செயினில் இயங்கும் டாங்கிகள் கூட மீட்க முடியாதளவிற்கு புதைந்து கிடக்கின்றனவாம்.

அண்மையில் மன்னகுளம் பகுதியில் தாக்குதலில் ஈடுபட்ட படையணிக்கு மழை, வெள்ளம், சேறு, சகதி காரணமாகவே கனரக வாகனங்களின் உதவியைச் சரிவர வழங்க முடியாமல் போனதாகவும் —

அப்படையணி பேரழிவைச் சந்தித்ததற்கு இந்த இக்கட்டும் ஒரு காரணம் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறு நீண்ட காலத்தின்பின்னர் வன்னியில்பெய்த்துக் கொட்டும் மழை யுத்தத்தில் ஈடுபடும் இருதரப்புக்கும் ஒரு புறத்தில் நன்மையாகவும் மறுபுறத்தில் தீமையாகவும் அமைந்திருக்க ...

வன்னியில் சிக்கிக் கொண்டிருக்கும் அப்பாவி மக்கள் மாத்திரம் இப்படிக் கொட்டும் மழை நன்மைக்கா, தீமைக்கா என்று தெரியாமல் அந்தரிக்க ...

கடும் மழை மட்டும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

★ ★ ★

## ஜனாதிபதியின் லண்டன் பயணம்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வார முற்பகுதியில் திடீரென லண்டன் சென்றார். அவர் லண்டன் செல்லவிருந்தது பற்றியோ சென்றது குறித்தோ தகவல் ஏதும் கசியக் கூட விடப்படவில்லை.

அவரின் லண்டன் பயணம் குறித்து யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் உதயனில் அடுத்த நாள் ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

அச்செய்தி பற்றி அறிந்த கொழும்பின் பிரபல செய்தியாளர் ஒருவர் உதயனில் வெளியான செய்தி தவறு என்று காலையில் அடித்துக் கூறினார். ஆனால் மாலை

(7 ஆம் பக்கம் பார்க்க)


# கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்குரிய

## இ. இராஜதுரை

(லக்கி பென்சி கவுஸ்
உரிமையாளரும், பத்திரிகை விற்பனையாளரும்)

எம்மை விட்டுப்பிரிந்ததையிட்டு மிகுந்த மன வேதனை அடைகின்றோம். மேலும் அவருடைய ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்திற்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இருபாலை வர்த்தகர்கள்,
இருபாலை.

(51782)



# எம் நெஞ்சமதில் நீங்கா நிலைபெற்றிருக்கும் 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி பொன்னுத்துரை நேசம்மா

எமை வாழ்விக்க மண்ணில்: 16 — 4 — 1918
எமை வாழ்வித்து விண்ணில்: 13 — 12 — 1993

கல்வின் எழுந்தது கலை அருவி — ஒரு
கம்பன் வடித்தது தமிழ் அருவி — இரு
கண்கள் சொரிவது நீர் அருவி — இன்
சொல்லில் வருவது சுவை அருவி — நற்
சொந்தங்கள் தருவது துணை அருவி — எம்
அன்னையவள் பொழிந்ததோ அன்பருவி — அது
நம் நெஞ்சம் நிறைந்த நினைவருவி.
அன்பெனும் அழியாத ஜோதி நீ தாயே — இவ்
உலகினில் இணையாரும் இல்லாததோர் கற்பகமே
இன்றும் உன் சொற்பதமே வாழ்கின்றோம்
என்றும் நின் அடி பணிந்தும் நினைந்தும்

வாழ்ந்திடுவோம்.
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அரசடி லேன்,
சங்கானை:

(51752)



உ
சிவமயம்

# திருமண திருமுகங்கள்





அல்வாய் மாறாபுலம்
விநாயகர் தேவஸ்தானகுரு
முத்து நாகேந்திரசர்மா
தம்பதிகளின் புத்திரன்

## திவாகரசர்மா

அவர்கட்கு

யாழ். ஆத்திசூடி
விநாயகர் தேவஸ்தானகுரு
தாணுவாசுதேவக்குருக்கள்
தம்பதிகளின் புத்திரி

## ஜெயப்பிரபா

அவர்களை

நிகழும் மங்களகரமான கார்த்திகை மாதம் 27 ஆம் நாள் 14—12—1997 (ஞாயிறு) நாளை காலை 7.46 மணிமுதல் 8.30 மணிவரையிலுள்ள சுபமுகூர்த்தத்தில் யாழ்/ கலட்டி எச்சாட்டி மாரியம்மன் தேவஸ்தானத்தில் வைத்து கன்னிகாதான பாணிக்கிரகண திருமாங்கல்ய தாரணம் செய்ய விநாயகர் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசமேதராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுபம்.

இங்ஙனம்:
தாணு வாசுதேவக்குருக்கள்
சுசீலாதேவி தம்பதிகள்.

யாழ். கலட்டி
பிள்ளையார் கோயிலடி.

(51664)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்றாண்டுகளைக் கடந்தும் முதிராத நினைவுகள்



### செல்வன் வல்லிபுரம் விஜயரட்ணம்
(■■■பு)

மலர்வு: 02 - 07 - 1974 உதிர்வு: 18 - 11 - 1994

திதி: 13 – 12 – 1997

காலத்தின் கதவுகள் மெல்லத் திறந்தது
கோலச் சுடர் விட்டு ஒளி மலராய்... நீ
கனியாகக் காண்பதற்குக் காலன் விரும்பவில்லை!
துன்பந் துளிதான் உன் உயிர் தாங்காது என்று
குளிர்நீரில் குளிக்க வைத்துக் கூட்டிச் சென்றுவிட்டான்
ஆனால்
துன்பம் தாங்காமல் துடிக்கிறதே எம்மிதயம்
கார்த்திகைத் திங்களதில் கனவாய் மறைந்திட்ட நீ...
இல்லை
நீ கலையவில்லை இன்னும் வாழ்கிறாய்
ஆண்டுகள் மூன் றென்ன மூவாயிரம் கழிந்திடினும்
நேற்று எம்முன் இருந்தது போல் தோன்றுதப்பா!
காலத்தின் கன்னத்தில் வழிந்தோடும் கண்ணீரை
காயவைக்க நீ வரும் நாள் எப்போ?

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அப்பா, சகோதர சகோதரிகள்,
அத்தான்மார், மருமக்கள், உறவினர்.

மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(51797)

---

### 31 ஆம் நாள்
## நினைவுப் பிரார்த்தனையும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



### கா. கணபதிப்பிள்ளை

மண்ணில்; 12 – 08 – 1922 விண்ணில்: 14 – 11 – 1997

வீட்டுக் கிருத்தியம்: 14 – 12 – 1997 ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணி

இராமாவில் கந்தனோடு இரண்டறக் கலந்திட
எம் கண்ணீர்ச் சரங்களோடு புஷ்பங்களையும் தூவி
ஆத்ம உயர்வுக்காய் மன்றாடி...
ஆசிகள் கேட்டு அஞ்சலித்து நிற்கிறோம்.

அன்னாரது இறுதிக் கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும் உதவிகள் பல புரிந்தோருக்கும், வெளியூர்களிலிருந்து அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் நன்றிகள் கூறுவதுடன் நாளைய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

— குடும்பத்தினர்

"கங்கா போட்டோ"
மீசாலை வடக்கு,
மீசாலை.

(51694)

---

## கண்காட்சி

யாழ்ப்பாணம், டிச. 13

யாழ். பிரதேச செயலக தையல் பயிற்சி நிலையத்தின் ஏற்பாட்டில் நாளையும் நாளை மறுதினமும் தையல் பயிற்சிக் கண்காட்சி புனித ஜோன் பொஸ்கோ பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

நாளை காலை 9.30 மணிக்கு யாழ். பிரதேச செயலர் து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் அரச அதிபர் க. சண்முகநாதன் கண்காட்சியைத் திறந்து வைப்பார்.

சிறப்பு விருந்தினராக முன்னாள் யாழ். பிரதேச செயலரும், யாழ். பல்கலைக்கழக பதிவாளருமான க. குணராசா பங்குபற்றுவார்.

(உ-3)

## தென்னங்கன்று விநியோகம்

யாழ்ப்பாணம், டிச. 13

மானிப்பாய் கோயிற்பற்று லயன்ஸ் கழகத்தினரால் இன்று காலை 9.00 மணிக்கு மானிப்பாய் ஆலடிச் சந்தியில் உள்ள கழக அலுவலகத்தில் வைத்து இலவசமாக தென்னங்கன்றுகள் வழங்கப்படவிருக்கின்றன.

(உ-3)

## கார்த்திகை விளக்கீடு இன்று

யாழ்ப்பாணம், டிச. 13

குடா நாட்டில் முருகன் ஆலயங்கள் தவிர்ந்த ஏனைய ஆலயங்களில் இன்று சர்வாலய தீப திருவிழாக்களும், சொர்க்கப்பானை எரிப்பும் இடம்பெறும். வீடுகளிலும் இன்று திருக்கார்த்திகைத் தீபங்கள் ஏற்றப்படும். (உ-3)

## மன்னகுளம்...

(ஆறாம் பக்கத் தொடர்)

யில் அவரே தொலை பேசியில் தொடர்பு கொண்டு அத்தகவல் சரியானதே என்று ஊர்ஜிதப்படுத்தினார்.

கொழும்பின் பிரபலசெய்தியாளர்களைக் கூட நம்ப வைக்க முடியாத அளவுக்கு ஜனாதிபதியின் லண்டன் பயணம் பற்றிய தகவல் இரகசியமாக வைக்கப்பட்டிருந்ததாம்.

அந்த இரகசிய விஜயத்தின் பின்னணி என்ன என்பதை தெளிவாக அறிந்து கொள்ள முடியவில்லை.

ஆனால் அவரின் லண்டன் பயணம் குறித்து செய்திகள் வெளியாகியதை அடுத்து—

தம்முடைய மகளுக்கு ஏற்பட்ட சுகவீனத்துக்கு லண்டனில் சிகிச்சை அளிக்கவே அவர் அங்கு சென்றதாக ஒரு 'பரகசியம்' முதலில் வெளியிடப்பட்டது.

ஆனால் —

தமது மகள் யசோதராவின் உயர்கல்வி சம்பந்தமாகவே ஜனாதிபதி லண்டன் சென்றதாக தற்போது தகவல்கள் வெளியாகியிருக்கின்றன

தமது மகளுக்கு லண்டன் மருத்துவக் கல்லூரியில் அனுமதி பெறுவதற்காக மேலும் சில நாள்கள் ஜனாதிபதி லண்டனில் தங்கியிருப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி அங்கு எந்தவொரு அரசியல் தலைவர்களையும் சந்திக்கமாட்டார் எனவும் —

வேறு நிகழ்ச்சிகள் எவற்றிலும் கலந்துகொள்ள மாட்டார் எனவும் — தெரிவிக்கப்படுகிறது.

லண்டன் மருத்துவக் கல்லூரியில் அனுமதி பெற ஜனாதிபதியின் மகள் யசோதரா நேர்முகப் பரீட்சை ஒன்றுக்குத் தோற்ற வேண்டும். இந்த நேர்முகப் பரீட்சைக்குப் பின்னரே ஜனாதிபதி நாடு திரும்புவார் எனவும், அவர் எப்போது நாடு திரும்புவார் என்பதை தற்சமயம் உறுதிபடக் கூறமுடியாது எனவும் [illegible] சாளர் ஒருவர் தெரிவித்தார்.

★

## பெண் பொலீஸ்; ஒருவர் தெரிவு

யாழ்ப்பாணம், டிச 13

றிசேர்வ் பெண் பொலீஸார் சேவைக்கு ஆள்களைத் திரட்டும் வகையில் யாழ்ப்பாணத்தில் கடந்த இரு தினங்கள் நடந்த நேர்முகப்பரீட்சைக்கு ஒரே ஒருவர் தோற்றினார். அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மருத்துவ சோதனைக்கு நேற்று உட்படுத்தப்பட்ட அவர் விரைவில் பயிற்சிக்கு அனுப்பப்பட இருப்பதாகப் பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(உ-3)

## அதிரடி அரங்கு

ஜேர்மன் உதவித் திட்டத்தின் கீழ் யாழ். போதனா ஆஸ்பத்திரிக்கு புதிதாகக் கிடைத்த 'எக்ஸ்ரே' கருவி ஒன்று நீண்ட நாள்களாகத்திருத்தப்படாமல் கிடப்பது குறித்து இதே பத்தியில் ஏற்கனவே பிரஸ்தாபித்திருந்தோம்.

வலிகாமம் இடம்பெயர்வுடன் இடம்பெயர்ந்து மீண்டும் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்ட அந்தக் கருவியைப் பொருத்தி செயற்பட வைப்பதற்கு காலத்துக்குக் காலம் முயற்சிகள் எடுக்கப்பட்டதும் தெரிந்ததே.

கருவியைப் பொருத்துவதற்கு முதலில் அதில் தேர்ந்தவர்கள் இல்லை என்றார்கள்; தேர்ச்சி பெற்றவர்கள் கொழும்பில் இருந்து வந்த பின்னர் அக்கருவியைப் பொருத்துவது தொடர்பான வழிகாட்டிப் புத்தகம் (CATALOGUE) இல்லை என்றார்கள்.

அதன் பின்னர், கடந்த வாரம் இந்த இயந்திரத்தைப் பொருத்துவதற்காக ஜேர்மன் பொறியியலாளர் ஒருவரும் இலங்கைப் பொறியியலாளர் ஒருவரும் யாழ். வந்தனர்; கருவியைப் பரிசீலித்தனர்; அடுத்த நாளே திரும்பிச் சென்று விட்டார்கள்.

இயந்திரம் பொருத்தப்படாமைக்கு இப்போது புதுக்காரணம் கூறப்படுகின்றது. எக்ஸ்ரே இயந்திரத்தைப் பொருத்தி இயங்க வைப்பதற்குத் தேவையான உதிரிப்பாகங்களில் சில குறைவாக உள்ளனவாம். அதாவது சில உதிரிப் பாகங்கள் காணாமற் போய்விட்டனவாம்.

வலிகாமம் இடம்பெயர்வின் போது பொருள்களை பல இடங்களுக்கும் ஏற்றி இறக்கிய சமயம் இவை காணாமற் போயிருக்கலாம் என்கின்றார் ஆஸ்பத்திரி நிர்வாக அதிகாரி ஒருவர்.

எக்ஸ்ரே இயந்திர உதிரிப்பாகங்கள் காணாமற் போனது குறித்து ஓர் 'எக்ஸ்ரே' விசாரணை நடத்த வேண்டிய நிலை இப்போது!

★ ★ ★

யாழ்ப்பாணம் வழமைக்குத் திரும்புகின்றது என்கின்றார்கள். ஆனால் பொதுமக்களின் அத்தியாவசிய பாவனைக்குரிய வீதிகளைப் பராமரிப்பதில் மட்டும் இன்னும் மந்த நிலையே காணப்படுகின்றது.

இடம்பெயர்வு காலத்தில் யாழ். நகரத்தில் வீதிக்குக் குறுக்காக அணை கட்டப்பட்ட இடங்களில் அணைகள் அகற்றப்பட்டும் இன்னும் பள்ளமாகவே கிடக்கின்றன. இத்தகைய சில இடங்களில் புதிதாக தார் போடப்பட்டாலும் அந்த இடங்கள் இன்னும் பள்ளமாகவே காணப்படுகின்றன; மழை காலத்தில் இந்தப் பள்ளங்களில் விழுந்து எழும்பும் பாதசாரிகள், வாகனங்களில் செல்வோர் ஆகியோரின் கதி அதோ கதிதான்.

உதாரணத்துக்கு நாவலர் வீதிக்கும் அரசடி வீதிக்கும் இடைப்பட்ட கஸ்தூரியார் வீதித் துண்டை — சுமார் அரைகிலோ மீற்றர் தூர வீதியை — எடுத்துக் கொள்ளுங்கள். மூன்று இடங்களில் வீதிக்குக் குறுக்கே பெரிய பள்ளங்கள். வீதியில் முக்கிய ஒழுங்கைகள் வந்து ஏறும் இடங்களில் காணப்படும் இப்பள்ளங்களினால் மக்கள் படும் அவலம் சொல்லிமாளாது.

தட்டாதெரு வழியாக யாழ். நகருக்கு வருவோர், பாடசாலை மாணவர்கள் மற்றும் மாலையில் கலட்டி வழியாக நகரை விட்டு வெளியேறுவோர் அதிகம் பாவிப்பது இந்த வீதியையே.

இவ்வாரம் காலையில் பாடசாலைக்கு சீருடை அணிந்து வந்த மாணவன் ஒருவன் இப்பள்ளத்தில் விழுந்து உடுப்பில் சேறும், சகதியும் தேய்த்துக் கொண்டு காலில் காயத்துடன் வீடு திரும்பியதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இது வீதியா? அல்லது விதியா?

மக்கள் யாழ். நகரை விட்டு வெளியேறும் கலட்டிப் பகுதியில் படையினரின் காவலரண் அமைந்துள்ள பாதையிலும் மக்கள் சேறு சகதிகளை தாண்டிக் குதித்து, விழுந்து நடக்க வேண்டியுள்ளது. இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட போது உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. உறுதி நிறைவேற்றப்படுமா?

★ ★ ★

இது பரீட்சைக் காலம். அண்மையில் தொழில் நுட்பம் சார்ந்த துறையுடன் சம்பந்தப்பட்ட ஒரு நிறுவனத்தில் நடந்த சம்பவம் இது.

நிறுவனத்தின் மேல்மாடியில் மாணவர்கள் பரீட்சை எழுதிக் கொண்டிருந்தனர். சில விரிவுரையாளர்கள் மேற்பார்வை செய்து கொண்டிருந்தனர்.

தேர்வு முடிந்ததும் மண்டபத்தை விட்டு வெளியேற முயன்ற பரீட்சார்த்திகளுக்கும், விரிவுரையாளர்களுக்கும் 'ஷொக்'! தமது கடமை நேரம் முடிந்ததும்— பரீட்சை முடிவதற்கு முன்னரே— நிறுவன சிற்றூழியர்கள், மேல்மாடியில் பரீட்சை நடந்து கொண்டிருக்க கீழேயுள்ள கதவுகளைப் பூட்டி திறப்பை எடுத்துக்கொண்டு போய்விட்டிருந்தனர். பரீட்சை முடிந்ததும் எவரும் மண்டபத்தை விட்டு வெளியே வரமுடியாத நிலை.

கடைசியாக ஒரு மாணவன் ஜன்னல் வழியாக வெளியே குதித்து, சம்பந்தப்பட்ட திறப்புகள் வைக்கப்படும் விரிவுரையாளரின் வீட்டிற்குச் சென்று அவரை அழைத்து வந்து 'சிறையிருந்த' மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் விடுவித்தார்!

- மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகருக்கு செல்ல கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், டிச. 13

காரைநகரில் வசிப்பவர்களுக்கு என காரைநகர் கடற்படையினரால் வழங்கப்பட்ட விசேட அடையாள அட்டையை வைத்திருப்பவர்கள் மட்டுமே இனிமேல் எந்த நாள்களிலும் காரைநகர் செல்ல முடியும். ஏனையோர் வாரத்தில் மூன்று நாள்கள் — செவ்வாய், வியாழன், சனி ஆகிய தினங்களில் மட்டுமே காரைநகர் செல்ல அனுமதிக்கப்படுவர். இக்கட்டுப்பாடு நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

காரைநகரைச் சொந்த இடமாகக் கொண்டு — ஆனால் தற்போது வேறு இடங்களில் வசிப்பவர்கள் கூட — இனிமேல் வாரத்தில் மூன்று நாள்களே அங்கு செல்லமுடியும். (உ-9)

## அல்வாயில் மோதல்

வடமராட்சியில் நேற்று முன்தினம் மாலை அல்வாய்ப் பகுதியிலேயே மோதல் சம்பவம் இடம்பெற்றது; வதிரியில் அல்ல என்றும் தெரிவிக்கப் படுகின்றது.

இம் மோதலில் இரு படையினர் காயம் அடைந்தனர்; இரு புலிகள் உயிரிழந்தனர் என்று அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது. (உ-3)

# திருகோணமலையிலும் வதிவிடக் கட்டுப்பாடு

திருகோணமலை, டிச. 13

திருகோணமலையில் ஆறு மாதங்களுக்குக் குறைவான காலம் வசிப்பவர்கள் மாதம் ஒரு தடவை பொலீஸ் நிலையத்தில் ஆஜராக வேண்டும் என பாதுகாப்புத் தரப்பினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு மாதங்களுக்குக் குறைவாக வசிப்பவர்களுக்கு பாதுகாப்பு அடையாள அட்டை வழங்கப்பட மாட்டாது.

அவர்கள் மாதம் ஒரு தடவை பொலிஸ் நிலையத்தில் ஆஜராகி தமது வதிவிடத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கே செல்வதற்கு கப்பல் பயணத்தை எதிர்பார்த்து திருகோணமலையில் தங்கியிருப்பவர்களும் இத்திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படுகின்றார்கள். (உ-21)

# அம்பாறையில் 'ராகிங்'!

பகிடிவதைக்குள்ளாக்கப்பட்டதால் பாதிப்புற்ற நிலையில் அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் துசாரகளு விஜேசிங்க கண்டி பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பகிடிவதைக்குள்ளாக்கப்பட்டதால் சிறுநீரகம் பாதிக்கப்பட்ட நிலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அவர் சிகிச்சை பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக அம்பாறைப் பொலீஸார் 21 மாணவர்களை விசாரணை செய்துள்ளனர்.

இந்தத் தொழில் நுட்பக்கல்லூரியைச் சேர்ந்த மேலும் 22மாணவர்கள் இது தொடர்பாக விசாரிக்கப்படவிருப்பதாக பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [உ-3]

## வடக்கே வர மறுத்த

# 75 டாக்டர்களுக்கும் பதவி விலகல் கடிதம்

கொழும்பு, டிச. 13

வடக்கு — கிழக்கு மாகாண வைத்தியசாலைகளில் சேவையாற்ற மறுப்பு தெரிவித்துள்ள 75 தென்னிலங்கை டாக்டர்களுக்கும் பதவி விலக்கல் உத்தரவு அளிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு இதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளது.

மேற்படி டாக்டர்கள் வடக்கு — கிழக்கில் சேவையாற்ற விதித்த நிபந்தனைகள் அமைச்சினால் ஏற்கப்படாமல் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இவர்கள் அண்மையில்தான் தமது உள்ளக பயிற்சி முடித்துக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-21)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் அன்னையிடம்:

27 — 12 — 1930

விண்ணில் இறைவனிடம்:

13 — 12 — 1993

### திருமதி சச்சிதானந்தம் மங்களேஸ்வரி

(முன்னாள் ஆசிரியர்)

திதி: 30 — 11 — 97

ஆண்டு நான்கு சென்றது ஆனாலும் மாறவில்லை துயரம்
மீண்டும் நீர் வருவீரோ எம்மிடம் தெரியவில்லை விவரம்
மாண்ட காலம் வரைக்கும் எமக்கில்லை துயரம்
ஆண்டவனிடம் இரந்து கொண்டு அருள்வீரோ வரம்!

உங்கள் நினைவுடன் வாழும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
(மங்களா குடும்பம்).

ச. ஆனந்தகிருபன் (மகன்)
மங்களா அழகுசோலை,
கண்டி வீதி, சாவகச்சேரி.

(51788)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் கடந்த இருமாத காலமாக இடம்பெற்று வந்த அலுவலக முகாமைத்துவம் அடிப்படைக் கற்கை நெறி தொகுதி 5 இன் நிறைவு நாளும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று காலை 10.00 மணிக்கு பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொண்டு கற்கை நெறியில் பங்குபற்றியோருக்குச் சான்றிதழ்களை வழங்குவார். (உ-3)

## றெலோ...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த உயிரிழப்புகளுக்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்க வேண்டும். 83 வெலிக்கடை கொலைப்பாணியில் தமிழ்க் கைதிகளை அரசாங்கம் கொல்ல முயற்சிக்கின்றதா என்ற சந்தேகம் இப்போது எழுகிறது — இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (உ-21-3)

## மாவிட்டபுரத்...

(முதலாம் பக்கத் தொடர்)

களை நிறைவேற்றினர்.

விசேடபூசைகளைபிரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்களும், சு. து சுந்தரமூர்த்திக் குருக்களும் நடத்தினர்.

யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ள வடமாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவரும், அத்தியாவசிய சேவைகள் நாயகமுமான சோமபால குணதீர, யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் சகிதம் அங்கு சென்று ஆலய பகுதிகளைப் பார்வையிட்டார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர் மாவை சேனாதிராசாவும் நேற்று ஆலயத்துக்கு சென்று இருந்தார்.

அங்கு அவர் மக்களுடன் கலந்துரையாடினார் (உ-3)

## தமிழ்-சிங்கள...

(முதலாம் பக்கத் தொடர்)

செல்லப்பட்ட பின்னர் அங்கிருந்த சிங்களக் கைதிகளுக்கும் அவர்களுக்கும் இடையில் முறுகல் நிலை நிலவியதாகக் கூறப்படுகின்றது.

நேற்று மதியம் உணவு வேளை கைதிகள் சிறைச்சாலைக்குள் திறந்து விடப்பட்ட சமயம் இருதரப்புக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு, அது முற்றி, கல்லெறியாகி பெரும் கைகலப்புச் சண்டையில் முடிந்ததும்—

சிங்களக் கைதிகள் கதிரைக் கால்களை முறித்து எடுத்தும் விறகுகள், கல், பொல்லுகள் கொண்டும் தமிழ்க்கைதிகளை செம்மையாகத் தாக்கியதாகக் கூறப்பட்டது.

சிறைச்சாலை உள் வீதியில் இச் சம்பவங்கள் நிகழ்ந்தன.

சிறைச்சாலையைச் சூழ பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் தலையிட்டதை அடுத்து நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டது.

மருதலிங்கம் தர்மலிங்கம் (வயது 24 — யாழ்ப்பாணம்) சண்முகராஜா சிவநேசன் (வயது 28—யாழ்ப்பாணம்), எம். எஸ். ஜபார் (அட்டாளைச் சேனை) ஆகியோரே உயிரிழந்த கைதிகளாவர். (உ-3-21)

## வாழைக்குற்றிகள் விற்பனைக்கு

இன்று நடைபெற உள்ள கார்த்திகை விளக்கீட்டை முன்னிட்டு நேற்று யாழ். நகரப் பகுதியில் வாழைக்குற்றிகள் விற்பனை செய்யப்பட்டன.

யாழ். நகரப் பகுதியில் வாழைக் குற்றிகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் வியாபாரி ஒருவர் தள்ளு வண்டி ஒன்றில் வாழைக் குற்றிகளை கட்டி ஒரு குற்றி 15 ரூபா விதம் விற்பனை செய்ததைக் காண முடிந்தது.

திருக்கார்த்திகை தினத்தில் வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகள் முன்பாக வாழைக் குற்றி நட்டு அதில் தீபமேற்றுவது வழக்கமாகும். [ஐ-9]

## யானை அட்டகாசம்

ஒட்டுசுட்டான், புளியங்குளம், அலகரை பகுதியில் யானைக் குட்டி ஒன்று கிணற்றில் விழுந்ததை அடுத்து அக்குட்டியின் தாய் கிணற்றை அண்டிய வீதிகளையும் பயிர்களையும் அழித்து நாசமாக்கியுள்ளது. (உ-164)

## 4 பொலீஸார் காயம்

வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வவுனியா — யாழ்ப்பாணம் வீதியில் அரசினர் பண்ணைக்கு முன்பாக நேற்றுக் காலை 6.40 மணியளவில் படையினர் பயணம் செய்த பஸ் ஒன்று விடுதலைப் புலிகளின் கிளைமோர் தாக்குதலுக்கு இலக்கானது.

இத்தாக்குதலில் 4 பொலீஸார் காயமடைந்தனர்.

இத்தாக்குதலில் ஐந்து மாடுகளும் இறந்தன.

அதேநேரம் — குருமன்காடுப் பகுதியில் பொலீஸாரின் துப்பாக்கி தற்செயலாக வெடித்ததில் ஆட்டோ சாரதி ஒருவர் காயமடைந்தார். (உ-3-9-21-164)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 09 — 06 — 1920



உதிர்வு: 13 — 11 — 1997

### திருமதி கிருகாம்பிகை கனகையா

எமது குடும்பத்தலைவியின் மரணச் செய்தி கேட்டு விரைந்து வந்து எமக்கு ஆறுதல் கூறிய அன்பு நெஞ்சங்களுக்கும், அவரின் மரணச்சடங்கில் பங்கு கொண்டோருக்கும், இரங்கற் செய்திகள் அனுப்பியோருக்கும், பத்திரிகை மூலம் தமது அஞ்சலிகளைத் தெரிவித்தவர்கள், மலர்வளையங்கள் சாத்தியோர் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவியோருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னார் திடீரென சுகவீனமுற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை அவருக்கு சிகிச்சை யளித்த யாழ். போதனா வைத்தியசாலை 2 ஆவது விடுதி வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் மற்றும் பல வழிகளிலும் உதவிய ஏனைய வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளை அன்னாரின் மறைவின் 31 ஆம் நாளில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

37, முதலியார் ஒழுங்கை,
நாவலர் வீதி,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம்.

(சி-2334)


எமது புதிய வெளியீடு!

முரளி, ரோஜா நடித்த
ரோஜா மலரே
அருண்பாண்டியன், ரோஜா நடித்த
கடவுள்
ஒறிஜினல் வெளியீடு!

1. ஆறிலிருந்து அறுபது வரை.
2. சரஸ்வதிசபதம்
3. பூந்தோட்டக் காவல்காரன்
4. கடல் மீன்கள்

K. பாலச்சந்தரின்
★ கையளவு மனசு தொடர் நாடகம்

ஓடியோ C.D வெளியீடு
★ மனசுக்குள் வரலாமா
★ ரயில்வே கூலி
★ விடுகதை

வீடியோ C.D வெளியீடு
★ பாசமலர்
★ என் கடமை
★ காதல் ஓவியம்
★ ரத்தக் கண்ணீர்

சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/2345)


## சுதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்)

கம் கைப்பற்றி 50 ஆவது சுதந்திர தினத்துக்கு முன் வடக்குக்கும் தெற்குக்கும் இணைப்பை ஏற்படுத்தும்.

இந்தப் பாதை திறக்கப்பட்டபின் வடக்குக்கு தரை மார்க்கமாகப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படும்.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை கடந்த மே மாதம் ஆரம்பித்ததில் இருந்து அச்சமரில் ஆயிரம் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்; மூவாயிரம் படையினர் காயமடைந்தனர்.

இந்த உயிரிழப்பு மற்றும் சேதம் அதிகமாக இருந்த போதும், அது போரின் தேவையான பகுதியாக எதிர்பார்க்கப்பட வேண்டியது தான்.

— இவ்வாறு அவர் மேலும் கூறினார். (உ-3-9-8)

## விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்)

சிறைச்சாலைகளுக்கு அவர்களை மாற்ற வேண்டும்.

ஈ.பி.டி.பி. யாழ். அமைப்பாளர் வி.கே. ஜெகன் மேற்கண்டவாறு அறிக்கை ஒன்றில் கோரியுள்ளார்.

83 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் நடந்த சம்பவத்தை ஞாபகப்படுத்தும் காட்டு மிராண்டிச் செயலாக இந்தச் சம்பவம் அமைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ-8)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13-12-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
# சஞ்சிகை

13 - 12 - 1997 சனிக்கிழமை

நியாய விலை! அதிவிசேட தரம்!!
இதன் மகிமை, சுத்தமான பசுநெய் சேர்க்கப்பட்டு சுகாதார முறைப்படி அதிவிசேடமாகத் தயாரிக்கப்பட்டதால், பல்லாயிரக்கணக்கான மக்களின் விருப்பத்தைப் பெற்றுக்கொண்டது.

**மல்லிகா மிக்சர்**

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள;
சி. தெய்வீகராஜா
மல்லிகா ஸ்ரோர்ஸ், மானிப்பாய்.
யாழ். நகரில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்;
சிறி சக்தி ஸ்ரோர்ஸ்
இல. 310 A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-2270)

## கருத்துக் கலசம்

மயூரா

### உயிர்ப்பிப்போம்!

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் முன்மாதிரியான வைபவம் ஒன்று நடத்தப்பட்டிருக்கிறது.

க. பொ. த பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மதகுருமார், அதிபர், ஆசிரியர், பெற்றோர் ஆகியோரைவீழ்ந்து வணங்கி, அவர்களின் ஆசியையும் வாழ்த்தையும் பெற்றுக்கொண்ட பின்னர், அனுமதி அட்டைகளை பெற்றுச் சென்ற சிறப்புமிகு நிகழ்வையே இங்கு குறிப்பிடுகிறோம்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது எமது பண்பாட்டு விழுமியத்தை எடுத்து இயம்பும் தாரகமந்திரம்.

இளம் வயதில், மாணவப் பருவத்தில், பிள்ளைகள் தமது வழிகாட்டிகளாக, வழி நடத்துநர்களாக, வாழ்க்கைக்கு இட்டுச் செல்பவர்களாக தாய் — தந்தையரையும், மதகுருவையும், கல்வி புகட்டும் ஆசானையுமே கொள்வது எமது முந்தையநெறி; மரபு.

தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை. தந்தை சொல்மிக்க மந்திரமில்லை. குரு பக்தி தெய்வபக்தி.— இவை போன்ற பல முதுமொழிகள் முன்சொன்ன முத்தரப்பினரும் இளவயதினரால் எவ்வாறு ஏற்றிப் போற்றப்பட்டார்கள் என்பதற்கான சான்றுப் பதிவுகளாகும்.

இவர்களை மட்டுமன்றி மூத்தோர்களை, கல்விமான்களை, நற்றொண்டர்களை எல்லாம் கனம் பண்ணி, மரியாதை செலுத்திய இளவல்கள் வாழ்ந்த காலத்தில் அறமும் தர்மமும் தழைத்தோங்கி நாடு நற்றவம் கண்டது.

ஆனால் இன்றைய இளம் சமுதாயம், நற்குணம் நற்பண்பு, நல்வழி என்பன எவை என்றே தெரியாமல் வாழும் நிலை வந்திருக்கிறது.

ஓர் இடைச்சந்ததி திருத்த முடியாத அளவுக்குத் தாழ்ந்து போனது கவலைக்குரியதே. எனினும் அதனால் வளரும் புதிய சந்ததியையும் அவ்வழி தொடர்ந்து செல்ல அனுமதிக்கலாகாது; தடுக்க வேண்டும். அதற்கான ஆக்கபூர்வமான செயற்பாடுகள் தேவை; பயிற்சிகள் இன்றியமையாதவை.

ஓர் இனத்தின் தனித்துவம் அதன் மொழியால், பிரதேசத்தால் மட்டும் பேணப்படுவது அல்ல. மத, கலை, கலாசார, பண்பாட்டுப் பாரம்பரியங்கள், சமூக நெறிகள், நீதிகள், வாழ்வியல் தர்மங்கள் என்பனவும் அழியாது பேணப்பட வேண்டும்; பேணி வளர்க்கப்பட்டு சந்ததிக்கு சந்ததி கைமாற்றம் செய்யப்பட வேண்டும்.

எமது சமூகச் சிறப்பையும், கீர்த்திகளையும், மேன்மையையும் மீண்டும் உயிர்ப்பித்து, புத்தெழுச்சி கொள்ளச் செய்வது இம்மண்ணில் வாழும் ஒவ்வொருவரது பொறுப்பும் தட்டிக் கழிக்கக் கூடாத கடமையுமாகும்.

## கனவுகளும் காவியங்களும்

உலகத்தின் அமரகாவியம் ஒவ்வொன்றுமே ஒரு கனவின் கவிதை வடிவம். ஒவ்வொரு மனிதனும் மனித இனத்திற்குப் பொதுவான வாழ்க்கைப் படிநிலைகள் ஒவ்வொன்றையும் கடந்து வரும்போது ஓர் அமர காவியம் காட்டுகின்ற உள்மனப் போராட்டத்தைக் களம் கண்டு மீண்டுவர வேண்டி இருக்கிறது. இது பரிணாம விதி. கனவுகளைப்பற்றி இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அறிவியல் பார்வையில் முதல் நூல் எழுதிய சிக்மண்ட் ஃப்ராய்ட், கனவுகளுக்கும் உலகப் புகழ் பெற்ற காவியங்களுக்கும் உள்ள ஆழமான, அழுத்தமான தொடர்பைக் கண்டறிந்து விளக்கிவார்.

அவர் வாழ்க்கைச் சூழலின் மூன்றாவது படிநிலையில் நிகழும் போராட்டத்தை — அதன் காவியக் கருவை — கனவுகளின் எதிரொலியாகக் கண்டு விளக்கி இருக்கிறார். ஆனால் அவர் இதையே தான் உருவாக்கிய உளப் பகுப்பாய்வியல்(Psychoanalysis) என்னும் மனநல சிகிச்சை முறையின் மையக் கருத்தாகக் கொண்டு விட்டார். இதனால் அவர் எல்லாக் கனவுகளையும் இதன் வழியே பார்த்து விளக்க முற்பட்டார். மேலும் வாழ்க்கை முழுவதும் மனிதனின் எண்ணங்கள், நடத்தைப் பாங்குப் (Behaviour Patterns) போராட்டங்கள் — வெற்றி தோல்விகள் — எல்லாவற்றையும் இதன் வழி பார்த்தால் சிக்மண்ட் ஃப்பராய்டின் உளப் பகுப்பாய்வியல் மனிதனை — அவன் ஆசாபாசங்கள் எல்லாவற்றையும் — ஒரு நிராசையுள்ள குழந்தையின் வெளிப்பாடாகக் கொண்டது.

ஃப்ராய்டின் புதுமை நோக்கு, துணிவு, ஆழம், அறிவாற்றல் இவற்றால் ஈர்க்கப்பட்டு அவரிடம் பயின்ற யூங் (Jung) அவர் வழியில் பின்னால் வந்த மெலனிக்லெய்ன், ராங்க், எரிக்சன் போன்றவர்கள், வாழ்க்கைச் சூழலில் ஃப்ராய்ட் மையம் கொண்ட பருவத்திற்கு முன்னும் பின்னும் உள்ள படிநிலைகளை ஆராய்ந்து கண்டறிந்து நிறுவி இருக்கிறார்கள். இவர்களில் எரிக்சன் மனித வாழ்க்கைச் சூழலை எட்டுப் படிநிலைகளாகக் காட்டுகிறார்.

### முதல் படி நிலை

இதில் முதல்படிநிலை பிறப்பிலிருந்து சுமார் ஒரு வயது வரையானதாகும். இந்த நிலையில் குழந்தை தன்னைச் சுற்றியுள்ள உலகிடம் அடிப்படையான நம்பிக்கை — இந்த உலகம் உறுதியாகத் தீங்கு பயப்பது அல்ல என்ற நம்பிக்கை (trust) — பெறலாம்; அல்லது, அதன் அனுபவங்கள் துன்பமும் ஆபத்தும் நிறைந்ததாக இருந்தால் அதற்கு உலகின் மீது தீராத அவநம்பிக்கை (mistrust) ஏற்பட்டு விடலாம். இந்த நிலையில் உலகைப் பற்றிக் குழந்தை கொள்ளும் எண்ணம் எளிதில் அழித்து மாற்றி எழுதிவிட முடியாததாகி விடுகின்றது. ஆனால், சில குழந்தைகளுக்கு இத்தகைய வன்மையான அனுபவங்கள், எதனாலும் கலக்கம் அடையாத சமநிலையையும் உறுதியையும் பக்குவத்தையும் கொடுக்கக்கூடும்.

### கண்ணனின் உறுதி

பெற்றோர்கள் சிறையில் அடைக்கப்பட்டு, முன்பிறந்த எழுவரும் உடனுக்குடன் கொல்லப்பட்டு, அதன் தாக்கம் பெற்றோர்களை வாட்ட வாட்ட, உலகில் பிறந்து 'குவா' என்று குரல்கொடுக்கு முன் கம்சனால் கொல்லப்பட இருந்த கண்ணனின் உறுதியும் சமநிலையும் இதற்கு எடுத்துக்காட்டு. இயற்கை தாண்டிய அற்புதங்களை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் பாகவதம், கண்ணனின் இந்த நம்பிக்கை — அவநம்பிக்கை கடந்த ஒரு மனநிலை எவ்வாறு வந்தது என்பதை அறிவியல் ஒப்ப உணர்த்தும் ஒரு காவியமாகும்.

### இரண்டாவது படிநிலை

இரண்டாவது படிநிலை சுமார் ஒரு வயதிலிருந்து மூன்று வயது வரை. இந்த நிலையில் குழந்தை எழுந்து, நடந்து தானாக இயங்கத் தொடங்குகிறது. அது சீரான தன்னிச்சை (autonomy) நோக்கி வளர வேண்டும். சூழ்நிலைக் கோளாறுகளின் காரணமாக அதற்கு எதிர்த்திசையில் ஐயமும் வெட்கமும் (doubt and shame) ஆளுமையின் அடித்தளத்தில் ஊன்ற, அது புரண்டு விடலாம்.

### மூன்றாவது படிநிலை

மூன்றாவது படிநிலை மூன்று வயதிலிருந்து நான்கு அல்லது ஐந்து வயது வரை. இந்த நிலையில்தான்தொடங்காற்றும் திறன் (initiative) தவறினால் குற்ற உணர்வு (guilt) கொண்டு முடங்குதல் என்ற இருதுருவங்கள் ஆளுமை வளர்ச்சிக்குக் கரைகளாக உள்ளன. இந்த நிலையில்தான் சிக்மண்ட் ஃப்ராய்ட் 'மையம்' கொண்டார். இந்த நிலையில் ஏற்படும் போராட்டம் அதனால் விழும் உள்ளச்சிக்கலு (complex)க்கு ஃப்ராய்ட் "இடிபஸ் உளச்சிக்கல்" (Oedipus Complex) என்று பெயரிட்டார். இதற்குக் காரணம் இந்த சிக்கல் உலகப் புகழ்பெற்ற அமர காவியங்களில் ஒன்றான 'இடிபஸ் ரெக்ஸ்' (Oedipus Rex) கிரேக்க காவியத்தை ஒத்திருப்பதே ஆகும்.

இக்காவியத்தின் தலைவன் விதிவசத்தால், தன்னையும் மீறி, தன் தாயும் தந்தையும் யார் என்று அறியாமல், தந்தையைக் கொன்று தாயையே மணந்து கொண்டு நெடுநாள் அரசாள்கிறான். உண்மை தெரியவரும் போது வரை முறைகளை மீறியதற்காக தன்மேல் கோபமும் [illegible] கொள்கிறான்.

### சிறுவருக்குள்ள சிக்கல்

தாயைத் தனக்கு மட்டுமே உரியவளாகவும், தாயுடன் தனக்குள்ள அந்நியோன்யமான ஒரு தனி உறவில் குறுக்கிடும் தந்தையைத் தனக்குப் போட்டியாகவும் நினைப்பது உலகில் பிறந்த ஒவ்வொரு சிறுவனும் முதலில் கொள்ளும் நிலைப்பாடு. இதைப் பெற்றோர் புரிந்து கொண்டு, உணர்ந்து, மதித்து நடந்தால் அவர்களுக்கும் குழந்தைகளுக்கும் உள்ள உறவு சீராகவும், சிறப்பாகவும், நிலையாகவும் இருக்கும். தவறினால் எளிதில் அவிழ்த்து நேர் செய்ய முடியாத சிக்கலை விளைவிக்கும். மனித உறவுகளில் முதலில் வீட்டிற்குள் விழும் இந்தச் சிக்கல் பின்னால் அந்தச் சிறுவனின் வெளி உலக உறவுகளிலும் ஆசிரியர், மேலதிகாரி, அரசு, அதிகாரச் சின்னங்கள், சமுதாய அமைப்புகள் — தவிர்க்க முடியாமல் குறுக்கிட்டு வாழ்க்கையைச் சீர்குலைக்கும்.

மோகனுக்கு ஒரே கனவு — அதுதான் வாழ்வில் அவன் நினைவுக் கெட்டிய முதல் கனவும் கூட. அது திரும்பத் திரும்ப அவரது முப்பது வயது வரையிலும் வந்து கொண்டிருந்தது. தோளில் துப்பாக்கி தொங்க நிற்கும் ஒரு சிறப்புக் காவல் படை வீரன் தன் தந்தையின் இரு கைகளையும் வெட்டி, அவர் நொண்டியாக அவர் ஊரில் கை உடைந்த ஐயனார் கோவில் சிலைபோல நின்று கொண்டிருக்கிறார்.

நான்கு அல்லது ஐந்து முறைகள் இந்தக் கனவு வந்தபோது அதன் பொருளைத் தேட, கடைசி முறை அதன் ஆணிவேர் தென்பட்டது. அதற்கு முந்தைய முறைகளில் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு பகல் எச்சத்தோடு தந்தையின்பால் மோகனின் மனதில் ஊறிப் போய் இருந்த வெறுப்பு தோய்ந்து இருந்தது. வரிசையில் பின்னால் வந்த கனவுகள் ஒவ்வொன்றும் அவர் வாழ்க்கையில் முந்தைய பகுதிகளில் தந்தையால் மோகனுக்கு நிராசை ஏற்பட்ட சம்பவங்கள் நினைவுக்கு வந்தன. ஒவ்வொன்றிலும் காயம் சிறிது; ஆனால் துன்பம் பெரிது.

### அறியாப்பருவத்தில் நிகழும் அசம்பாவிதம்

இந்தக் கனவுத் தொடர்களின் வேர்க்காரணம் கடைசி கனவின் பொருளைத் தேடும்போது வெளிப்பட்டது. பெற்றோர் கூடலை, அறியாக்குழந்தைகள் பார்த்துவிடும் அசம்பாவிதம் — ஆங்கிலத்தில் இதற்கு trauma of the primal scena என்று பெயர். அறியாக்குழந்தைக்கு இது மாபெரும் அசம்பாவிதம். ஆனால் உலகெங்கும் [illegible]நாடம் பல இடங்களில் சர்வ சாதாரணமாக நடந்துவிடுகிறது. குழந்தைவளர்ந்து குமரனாகி, இளைஞனாகி, மணமுடித்து, தானும் ஒரு தந்தையாகும்போது, பாரதியாரைப்போல, "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே" என்று அன்பும் பாசமும் பொங்க, அவர்கள் தான் வளர்ந்து உயர பட்ட துன்பங்கள், செய்த தியாகங்கள், முழுமனிதனாக நின்றபோது கொண்ட நிறைவு, பெருமிதம் இவற்றை எண்ணி நெஞ்சம் நெக்குருகும் பக்குவம் வரும்; வர வேண்டும். ஆனால் அறியாப்பருவத்தில் குழந்தையின் பிஞ்சு உள்ளத்தில் ஓர் ஆழமான காயமாகப் பட்டுவிட்டால் வளரும் பருவங்கள் முழுவதும் — ஏன் உரிய முறையில் ஆறாவிட்டால் வாழ்க்கை முழுவதுமே — ஊமைக் காயமாக



மனவலியைக் கொடுத்துக் கொண்டே இருக்கும். அக்காயத்தின் மீது ஏதாவது அன்றாட சம்பவங்கள் நெருடினால் வலி அதிகமாகும்! அது கனவுகளாக முனகும்; உலகின் மீது — தந்தை, ஆசிரியர், மேலதிகாரி, அரசு அதிகாரிகள் என்ற உறவின் மீது — அர்த்தமற்ற ஆத்திரமாக வெடிக்கும். அல்லது மனம் திணறும்; குமைச்சலாக அழுத்தும்.

எரிக் எரிக்சன் என்ற உளப் பகுப்பாய்வியல் வல்லுநர் மகாத்மா காந்தியின் வாழ்விலும் இந்த இடிபஸ் சிக்கல் தோன்றி அவர் அக வாழ்வில் ஒரு முக்கிய இடம்

(11 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் அரசின் முடிவின் உள்நோக்கம் என்ன?

## உள்ளும் புறமும் — குறுமுனி

அரசாங்கம் திடீரென அறிவித்த உத்தேச யாழ்ப்பாண உள்ளூராட்சித் தேர்தலுக்கு வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட காலம், எதிர் வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது; இன்னும் இரண்டு நாள்கள் இருக்கின்றன.

ஆனால் இங்கு ஒரு தேர்தல் நடைபெறப்போகிறது என்ற பரப்பரப்போ, 'கம்பலோ' தென்படவில்லை. தேர்தலா, இந்த நேரத்தில் அதுவும் ஒரு தொல்லையா என்று கேட்கும் நிலையிலேயே மக்கள் உள்ளனர்.

தமிழ் அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில் தீர்க்கமான முடிவு எதுவும் இல்லாமல் பிடிகொடாமல் செயனாற்றி வருகின்றன; பேசி வருகின்றன.

வயதில் மூத்த தமிழர் விடுதலைக் கூட்டணி, தேர்தலை ஒத்திவைக்குமாறு அரசாங்கத்தைக் கேட்க முடிவு செய்துள்ளது. இது குறித்து இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக கட்சியின் முக்கிய கூட்டம் நாளை கொழும்பில் நடைபெற உள்ளது.

யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடத்தக்கூடிய சூழ்நிலை இப்போது இல்லை. அதனையும் பொருட்படுத்தாது அரசாங்கம் நடத்துமானால் தேர்தலில் போட்டியிடுவோம் அல்லது அது குறித்துத் தீர்மானிப்போம் என்று கூறும் நிலையிலோ ஏனைய தமிழ்க் கட்சிகள் கடைப்பிடிக்கின்றன.

ஈ.பி.டி.பி. கட்சி மட்டும் இதற்கு விதிவிலக்காகத் தேர்தலில் போட்டியிட ஆயத்தமாகி வருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியோ தேர்தலை ஒத்திவைக்குமாறு அரசாங்கத்திடம் கோருவதெனத் திட்டவட்டமாகத் தீர்மானித்து விட்டது.

### ஒரு கல்லில் இரு மாங்காய்களை வீழ்த்தும் உத்தி

அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகள் இவ்வாறிருக்க, சிவில் நிர்வாகத்தரப்பில் இங்கு உள்ளவர்களும் தேர்தல் நடத்துவதற்கான ஆயத்தங்களு'டன் இல்லை.

உள்ளூராட்சித் தேர்தல் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள விடயம், இங்குள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பத்திரிகையைப் படித்துத் தான் தெரியும்! தேர்தல் நடத்தக் கூடிய அடிப்படையான தேவைகள் உள்ளனவா என்பது குறித்து ஒரு சொல் தானும் இங்குள்ள அதிகாரிகளிடம் கேட்கவில்லை: முன் கலந்தாலோசனை எதுவும் நடத்தப்படவில்லை.

நாங்கள் சொன்னால் அவர்கள் செய்ய வேண்டியது தானே என்ற ''திமிருடன்'' கொழும்பில் இருந்து வேட்பாளர் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் திகதி விபரம் அறிவிக்கப்பட்டது.

இதே வேளை, அமைதியான தேர்தலை இங்கு நடத்துவது தங்களுக்கு இயலாத காரியம் என்று யாழ் அதிகாரிகள் கொழும்பு உயர் பீடத்தின் காதில் போட்டு விட்டதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

கள நிலைமைகள் இப்படி இருக்கையில் —

தேர்தல் நடத்துவது என்ற முடிவை அரசாங்கம் திடீரென மேற்கொண்டது ஏன் என்ற கேள்வி தமிழ் மக்களிடையே பெரிதாக எழுந்துள்ளது.

யாழ்ப்பாண நகரில் அமைதியான, நியாயமான நீதியான தேர்தல் ஒன்றை நடத்த முடியாது என்பது அரசாங்க உயர் பீடத்தினருக்கும், அவர்களை அண்டிய அதிகாரிகளுக்கும் தெரியாததொன்றல்ல. எனினும் தேர்தலை நடத்துவதற்கு அரசு திடீர் முடிவு எடுத்தமைக்கு அதனைப் பொறுத்த வரையில் தக்க காரணங்கள் உண்டு என அறியப்படுகிறது.

### முதலாவது காரணம்

யாழ்ப்பாணத்தில் திடீர் உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவதற்கு அரசு முடிவு செய்ததற்கு, சர்வதேச மன்னிப்புச் சபை நவம்பர் மாதம் 27 ஆம் திகதி இலங்கையின் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து வெளியிட்ட அறிக்கையே முதலாவது பிரதான காரணம். இது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கைதாகி காணாமற் போன சுமார் 600 பேரில் அனேகமாக எல்லோரும் கொல்லப்பட்டிருக்கலாம் என்று சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்த அறிக்கை பாரபட்சமானது என்றும் காணாமல் ஆட்கள் போவது தொடர்பாக அரசுக்கு எதிராக வெளியான செய்திகளைச் சரியாகப் பரிசீலனை செய்யாமல் மன்னிப்புச் சபை அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது என்றும் இலங்கை அரசு அப்போது தெரிவித்திருந்தது.

எனினும் சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கை அரசாங்கம் குறித்துப் பாதகமான கருத்துக்களை, பாதிப்புகளை உண்டாக்கும் என்பதனை அரசு சரியாக உணர்ந்து கொண்டது.

அதாவது உலக நாடுகள் குறிப்பாக இலங்கைக்கு உதவி செய்யும் நாடுகள், யாழ்ப்பாணத்தின் புனரமைப்புக்கு நிதி உதவி வழங்க விருப்பம் தெரிவித்திருந்த நாடுகள், அரசாங்கத்தை கீழே வைத்துப் பார்க்கப் போகின்றன; நிதி உதவி வழங்குவதற்கு அவை பின்நிற்கலாம் அல்லது உதவியை நிறுத்தி விடலாம் என்ற அச்சம் அரசுக்கு வந்துவிட்டது.

எனவே உதவி வழங்கும் நாடுகள் மத்தியில் தனக்கு உண்டாகக் கூடிய அவப்பெயரைப் போக்குவதற்கான தந்திரமான உத்தியே யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் திடீர் முடிவு.

அமைதியோ அமைதியில்லையோ, நீதியோ நீதியில்லையோ, நியாயமோ நியாயமில்லையோ குடாநாட்டின் மீது தேர்தல் ஒன்றைத்

(XI ஆம் பக்கம் பார்க்க)

# கனவுகளும்.....

(முதலாம் பக்கத் தொடர்)

பெற்று இருந்ததை மகாத்மா காந்தி பற்றி அவர் எழுதிய 'Gandhi's Truth: the Origins of Militant Non - Violence" என்னும் நூலில் குறிப்பிட்டு இருக்கிறார்.

### குழந்தை மேல் தந்தைக்கு வரும் கோப உணர்வு

குழந்தைகளுக்குப் பெற்றோர்களுடன் உறவில் சிக்கல் தோன்றுவது போல பல தந்தைமாருக்கும் பிறக்கும் குழந்தையின் மீது பொறாமையும், கோபமும் தோன்றுவது உண்டு. மனிதன் காட்டுமிராண்டியாக இருந்த காலத்தில், புதிதாகப் பிறந்த குழந்தையை அதிலும் முதல் குழந்தையை கொன்று தின்று விடுவது உண்டு என்பதற்கு மானுடவியல் ஆதாரங்கள் உள்ளன. பிறக்கும் குழந்தை தன் வாரிசு, தன் பரம்பரை தொடர்ந்து விளங்க வந்த உயிர் என்ற பெருமை பொங்கும் எண்ணம் ஒரு புறமும், அது தன் சகாக்களுக்குப் போட்டியாகும் என்ற அருவை ஒரு புறமும், அதை வளர்த்து ஆளாக்க வேண்டிய சுமை பற்றி கவலை ஒரு புறமும். இதைக் கட்டிக் காக்க ஒரு தலைமுறைக் காலம் தான் தன் சுதந்திரத்தை இழந்து, தளைப்பட்டு விட்டோம் என்ற விசனம் ஒரு புறமும், அடுத்த தலைமுறையின் வரவு தன் தலைமுறையின் முடிவை அறிவிக்கும் முதல் மணி என்ற அச்சம் ஒரு புறமும் தோன்றி ஒரு சேர உள்ளத்தில் பீறிடும். இவை ஒரு மனிதன் தந்தை நிலையை எய்தும் போது ஒரு சிக்கலை ஏற்படுத்தும். இந்தச் சிக்கலை உரிய முறையில் புரிந்து உணர்ந்து கொண்டு அவன் அதைத் தாண்டி வர வில்லையானால் அந்த கணவனுக்கும் மனைவிக்கும், அந்த தந்தைக்கும் அவன் சேய்களுக்கும் உள்ள உறவு சீராக இருக்காது.

அமெரிக்காவில் ஸாயஸ் என்ற உளவியல் அறிஞர் முதன் முதலில் தந்தையாகப் போகும் ஆண்களின் கனவுகளை அவர்கள் மனைவியர் கருத்தரித்து, கருவின் மூன்று வளர்ச்சிப்படி நிலைகளில் (90 நாள்கள், 168 நாள்கள் 245 நாள்கள்) ஒவ்வொன்றிலும் இருவார காலம் அவர்கள் கண்ட கனவுகளின் விவரங்களைச் சேகரித்து, அவற்றின் அடக்கப் பொருளை ஆய்ந்த போது கருவுறுதல், தந்தை — சேய் உறவு, குழந்தை பிறத்தல் பற்றி இவர்களுக்குக் கனவுகள் வருகின்றன என்று கண்டார்.

பலருக்குத் தன்னுடைய தந்தையைப் பற்றிய கனவுகளும் வருவதுண்டு என்று ஸாயஸ் கண்டிருக்கிறார். ஒருவருடைய தந்தை ஒரு நல்ல தந்தையாக இருந்திருந்தால் இவர் அந்த வாழ்க்கைப் படி நிலையை எட்டும் போது ஆழ்மனக் குழப்பங்கள் குறைவாக இருக்கும். தம்மிடையே வரும் குழந்தையை மனமார ஏற்று அன்பு செலுத்தி, வளர்த்து ஆளாக்கும் பொறுப்பும் பக்குவமும் விரைவில் வரும்.

ஒருவருடைய சிறு குழந்தைப் பருவம் தனிமையும், துன்பமும், கொடுமையும் நிறைந்ததாக இருந்தால் — அவரது மற்றைய பருவங்கள் எவ்வளவு இனிமையும் வளமையும் கொண்டிருந்தாலும் — அவருக்குத் தன் குழந்தை பிறக்கும் போது ஓர் ஆழ் மனக் குழப்பமும், மனித வாழ்க்கை [illegible] விரக்தியும் ஏற்படும். இந்தத் தருணத்தில் பலர் மனைவியையும் குழந்தையையும் விட்டு விட்டு, சொல்லாமல் ஓடி விடுவதுண்டு. மேல் நாடுகளிலும் கூட இது நிகழ்வது பற்றி ஆதாரங்கள் உள்ளன.

### சித்தார்த்தன் கதை

நெடுநாள் பிள்ளை வரம் வேண்டி, கருவுற்ற தாய் பல்லக்கில் பேறு காலத்திற்கு தன் பிறந்த வீடு நோக்கிச் செல்லும்போது வழியிலேயே பிறந்த இளவரசன் அவன். அவன் பிறந்ததால் தான் விரும்பிய எல்லாமே கிடைத்தன என்று பூரித்து தன் மகனுக்கு சித்தார்த்தன் என்று பெயரிட்டான் தந்தை சுத்தோதனன். சித்தார்த்தன் பிறந்த ஏழாவது நாள் அவன் தாய் மாயாதேவி இறந்தாள். அவனுக்குச் சுமார் ஒன்றரை வயது இருக்கும் போது அரசன் தங்கக் கலப்பை கொண்டு உழும் பருவத்தைத் தொடங்கி வைக்கும் விழா நடக்கும் வேளையில் சித்தார்த்தனை எல்லாரும் ஒரு நாவல் மரத்தடியில் தனியே விட்டு விட்டு விழா காணச் சென்று விட்டனர்.

சித்தார்த்தன் தாயில்லாக் குறை தெரியாமல் இருக்க தந்தை சுத்தோதனன் முப்பத்தி இரண்டு தாதியரை அமர்த்தினான். பருவத்திற்கு ஒரு மாளிகையுடன் இசை, நடனம், கூடி, மகிழப் பெண்கள் என்று சுத்தோதனன் தன்மகன் துன்பம் என்றால் என்னவென்று அறியாதவாறு அரண் இட்ட ஓர் இன்ப சாம்ராஜ்யத்தில் வளர்த்து வரச் செய்தான்.

நாளை பொழுது புலர்ந்தால் சித்தார்த்தன் மகுடம் சூடி அரசனாக வேண்டும். [illegible] சாக்காடு [illegible] ஏன்!'' என்று அன்னை உறுத்திக் கொண்டிருந்த கேள்வி அன்றிரவு அவன் உள்ளத்தில் விசுவரூபம் எடுத்தது. அப்போது அவனுக்கு மகன் பிறந்த செய்தி அருகிலிருந்த மனைவியின் மாளிகையிலிருந்து வந்தது. ''அவனை ராகுலன் (பந்தம்) என்று கூறுக'' என்று சொன்ன சித்தார்த்தன் இவ்வாழ்வைத் துறந்து வெளியேறினான். ஆறு ஆண்டுகள் தன் கேள்விக்கு விடை தேடி அலைந்தான். ஒரு நாள் ''உலகில் எல்லாமே அழியக்கூடியவை. ஆசையே இவ்வுலகில் துன்பத்திற்குக் காரணம்.'' ஆம், ''உலகே மாயம், வாழ்வே மாயம். உலகில் நாம் காணும் சுகமே மாயம்'' என்று தன்னைத் தோண்டி ஞானம் கண்டு புத்தனாக பரிணமித்தான். இது காவியம்.

### தாயில்லாப் பிள்ளைகள்

இதுவரை இந்தக் காவியத்தில் தலைமுறை தலைமுறையாக நாம் தவறவிட்டு விட்ட உளப்பகுப்பாய்வியல் உண்மை ''சித்தார்த்தன் ஒரு தாயில்லாப் பிள்ளை'' என்பதே. பிரெஞ்சு அறிஞர்களான பாஸ்கல், ரூசோ, ரஷ்ய எழுத்தாளர் டால்ஸ்டாய், பிரிட்டிஷ் தத்துவஞானி பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் இவர்கள் எல்லாம் தம் குழந்தைப் பருவத்திலேயே தாயை இழந்தவர்கள். பின்னால் இவர்களது இவ்வாழ்க்கை உறுதியாக இல்லை.

இவ்வாறு சிறு வயதில், தாயை இழந்தவர்களுக்கு அல்லது தாயின் அன்பு கிடைக்காதவர்களுக்கு (இதற்கு ரவீந்திரநாத் தாகூரையும், மகான் அரவிந்தரையும் உதாரணமாகக் கூறலாம்) உலகைத் துறந்துவிட வேண்டும் என்ற எண்ணம் அவ்வப்போது வரும். முதல் குழந்தை பிறக்கும்போது இது கடுமையாக இருக்கும். ஏனெனில் எல்லா ஆண்களுக்குமே அப்போது மனைவியையும் குழந்தையையும் துறந்து விடவேண்டுமென்ற எண்ணம் ஆழ்மனத்தில் தோன்றும் என்பதற்கு மானுடவியல் (anthrpology) உளப்பகுப்பாய்வியல் ஆதாரங்கள் இருக்கின்றன. மேலை நாடுகளில் இது வரிசைத் தொடர் திருமணங்கள் (Serial Mariage) என்ற ஒரு வடிவத்தில் நிகழ்கிறது என்று கூறலாம்.

மனைவியின் பிரசவத்திற்கு முன்னால் இவர்களுக்கு கொந்தளிக்கும் கடல், பரந்த பாலைவனம், குருடர்களின் முடிவில்லாத ஊர்வலம், சமீபத்தில் கண்ணில் பட்ட துன்பமான காட்சிகள், தான் ஓரங்கட்டப்படுவது போன்ற சம்பவங்கள், காட்சிகள், குற்ற உணர்வு, தன்னுடைய மரணம் இவை கலந்த கனவுகள் வரும். சிலருக்கு கடவுள் உருவங்கள் இப்பருவத்தில் கனவில் வரலாம்.

இவ்வாறு வாழ்க்கைச் சுழலின் ஒவ்வொரு படிநிலையிலும் மொழிகடந்து, இனம் கடந்து, காலம் கடந்து நிற்கும் கருப்பொருள்கள் ஒரே அமைப்புருவம் கொண்ட (isomorphic) கனவுகளாக பலர் மனத்திலும் தோற்றம் கொள்கின்றன. அவை படைப்பாற்றலில் வல்ல ஒரு கவிஞன் மனத்திலும் தோன்றி நிற்கும்போது அமர காவியங்களாக உருப் பெறுகின்றன. இந்தக் காவியங்கள் பின்வரும் தலைமுறையினர் எல்லாம் தங்கள் தனிக் கனவுகளையும் அவற்றின் வழியே தங்களையும் கண்டு புரிந்து கொள்ள உதவுகின்றன.

ஆம், ''இதை வாழ்ந்து பார்த்தவர் ஆயிரம், அதில் நாமும் இன்னொரு காவியம்!''

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலரா! வரமுன் காப்போம்!

கடந்த இரண்டு மாதங்களாக செய்தியாக உலா வந்த ஒருவிடயம் இந்த இரண்டு கிழமைகளிலும் பலரது வாயிலும்—குறிப்பாக சுகாதாரசேவையுடன் சம்பந்தமானவர்களின் ஒவ்வொரு செயற்பாட்டிலும்—முக்கியமாக பேசப்படும் அம்சமாக மாறிவருகிறது.

அதுதான் 'கொலரா'' எனும் வாந்திபேதி நோய். 'எயிட்ஸ்', கொள்ளை நோய்' என்பன எவ்வாறு நாம் கேட்ட கணத்திலேயே திகைப்படையவைக்கும் வரலாற்றை கொண்டுள்ளனவோ அது போலவே கொலரா நோயும் தனக்கென ஒரு வரலாறு கொண்டதாகும்.

இந்நோய்க்கு உகந்த சீதோஷ்ண, தரை அமைப்பும், நெருக்கமான மக்கள் தொகையும் இந்திய உபகண்ட நாடுகளில் சாதகமாக காணப்படுவதால் அதி உச்ச நோய்ப்பரம்பல் உள்ள நாடுகளாக இவை உலக வரைபடத்தில் இடம் பிடித்துள்ளன.

1982 இல் பங்களாதேஷில் கொலரா பல உயிர்களைக் காவுகொண்டது.

### இலங்கையில்

தற்சமயம் புத்தளம், குருநாகல், கம்பஹா மாவட்ட சுகாதாரசேவை அலுவலக பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களிலும் காலி, பதுளை ஆகிய தென் மாவட்டங்களிலும் இந்நோய் பரவியுள்ளது. பத்துப் பேர்வரை இந்நோய்க்கு பலியாகிவிட்டார்கள்.

இந்தியாவிலிருந்து திரும்பிய நால்வர்தான் இந்நோயை இங்கு காவிவந்துள்ளவர்கள் என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

முன்பு1988—89 காலப் பகுதியில் கோமாரி நோய் இந்தியாவிலிருந்து வடக்கு கிழக்கில் பரவியது நினைவிருக்கலாம்.

கொலரா என்றால் என்ன? நோய்ப்பரவல் இல்லாத இடமொன்றில் ஐந்து வயதுக்கு மேற்பட்டவர்களில் சடுதியாக கடுமையான வயிற்றுப்போக்கும், மரணமும் சம்பவித்தால் கொலரா பற்றி சிந்தித்தல் வேண்டும். எவ்வாறாயினும் வயிற்றோட்டம், வயிற்றுளைவு என்பனவும் வேறுபடுத்தி அறிய முடியாத நோய் முகத்தைக் காட்டலாம். ஆய்வுகூடத்தில் நோயாளியின் மலம், வாந்தி போன்றவற்றை நுணுக்கு காட்டியின் கீழ் பரிசோதிப்பதன் மூலம் நோய்க்கு மூலகாரணியான பக்டீரியாவை உறுதிப்படுத்தலாம்.

### நோயியல்

கொலரா வானது விபிறியோ கொலரே (Vibrio Cholerae) எனும் கண்ணுக்கு புலப்படாத பக்டீரியாவினால் ஏற்படுகிறது. இது காற்புள்ளி (Comma) வடிவமுடையது. விபிறியோ பக்டீரியா உணவுக்கால்வாய் தொகுதியை வாய் மூலமாக சென்றடைந்து பாதிப்பை ஏற்படுத்துகிறது. கிருமிகள் சிறுகுடலின் உட்பரப்பில் பெருக்கமடைகின்றன. இதற்காக சில மணி நேரம் முதல் ஐந்து நாள் வரை எடுத்துக் கொள்கின்றன. இது நோயரும்பு காலம் ஆகும். கிருமிகள் சிறுகுடலை துளைத்து உட்செல்வதில்லை. இவை சுரக்கின்ற நச்சுப்பதார்த்தம் (Exotoxin) குடல் அகவணிக் கலங்களில் குறிப்பிட்ட சிலவகை அனுசேப தொழிற்பாடுகளை பாதிப்பதால் கலங்களிலிருந்து நீரும், உப்பும் (கனியுப்பு) சேர்ந்த காரத்தன்மையான திரவம் குடலுக்குள் வெளியேறி சேருகின்றது. இதனால் வயிற்றுப் போக்கு ஆரம்பிக்கின்றது; கடுமையான நீர், உப்பு இழப்பு ஏற்படுகிறது. உடலால் இயன்றவரை நீராகாரம் உள்ளெடுக்கப்படினும் நீரிழப்பு மிதமிஞ்சி விடுவதுமுண்டு.

விளைவாக உடலின் நீர், கனியுப்பு சமநிலை குழப்பமடைந்து, சிறுநீரகம் செயலிழக்கும் அபாயம் வரை தொடரலாம்.

### அறிகுறிகள்

கடுமையான வயிற்றோட்டம். இதன் போது வயிற்றில் நோவு அல்லது குத்து இருப்பதில்லை. தொடர்ந்து வாந்தி சடுதியாக ஆரம்பிக்கும். வயிற்றோட்டம் ஆரம்பத்தில் மலமாக போகும். பின்னர் சோற்று கஞ்சி போன்ற திரவமாக தொடரும். இதனை அவதானித்தால் அதில் தெளிவான திரவமும், குடல் அகவணிச் சிதைவுகளும் காணப்படும். கடுமையான நீர், கனியுப்பு இழப்பினால் உடல் வாடிச் சோர்கிறது. கண்கள் உட்குழிவடையும்; கன்னம் பள்ளமடையும்; வாய், நாக்கு உலரும். சிறுவர்களில் உச்சி (Fontenelle) பள்ளமடையும்.

கை, கால் குளிர்ந்து போதல், உடலின் தோலை இழுத்தால் அதில் சுருக்கம் ஏற்படுதல், தசைப்பிடிப்பு ஏற்படுதல் மற்றும் குருதி அழுத்தம் குறைவடைதல், நாடித்துடிப்பு உணரப்பட முடியாதளவுக்கு குறைதல், வெளியேறும் சிறுநீரின் மொத்த அளவு குறைவடைதல் என்பன பொதுவான அறிகுறிகளாகக் காணப்படலாம்.

வெளியேறிய நீரும், உப்புக்களும் உடனடியாக ஈடுசெய்யப்படாவிடின் சில மணி நேரத்துக்குள்ளாகவே இறப்பு நிகழலாம். நோயால் பாதிக்கப்பட்டவர் மேற்கூறிய எல்லா வகை அறிகுறிகளையும் நிச்சயமாகவும், உச்சமாகவும் கொண்டிருப்பார் என்பதற்கில்லை. கிருமிகளைக் காவிக்கொண்டு ஆனால் வெளிப்படையான அறிகுறிகளைக் காட்டாது நடமாடும் பேர்வழிகள் நோயைப் பரப்புவதில் மிகுந்த பங்கெடுத்துக் கொள்கிறார்கள்.

### சிறுவர்களில்

உடல் அமைப்பில் [illegible] கள் வயது வந்தவர்களிலும் பார்க்க அதிகளவு நீரினை உடற்கூறாக கொண்டுள்ளார்கள், இவர்கள் நோய்த் தாக்கத்துக்கு உட்படும்போது அதிகளவில் பாதிப்பு ஏற்படுகிறது. மேலதிகமாக இரத்தத்தில் கல்சியக்குறைவு, நீர் கனியுப்பு விகித மாற்றம், உடல் முழுவதுமான தசை இறுக்கம், குருதியில் குளுக்கோஸ் அளவு குறைதல், காய்ச்சலும் வலிப்பும் என்பன ஏற்படுகின்றன. அத்துடன் சிறுவர்களில் இறப்பு வீதம் கூடவாகும்.

இந்நோயினால் பீடிக்கப்பட்ட சிறுவர்களில் இறப்பு வீதம் 15. வயது வந்தவர்களில் ஐந்து வீதம்.

### கிருமிகள் பரவும் வழிவகைகள்

நோயாளியின் மலம், வாந்தி தொடர்பு அல்லது வெளிக்காட்டப்படாத நோய்க்காவிகள் மூலம் கிருமிகள் வெளியேறுகின்றன. இவை உணவு வகைகளை, நீர்நிலைகளை, தொடர்புடையவர்களின் தொடுகை மற்றும் பிழையான சுகாதார நடைமுறைகளால் சென்றடைகின்றன.

விபிறியோ கிருமி நன்னீரில் இரண்டுவாரமும், உப்பு நீரில் எட்டு வாரமும் வாழக் கூடியது.

தொற்று ஏற்பட்ட நீர், குடிநீர் மூலமும், ஈ மொய்த்த உணவு வகைகளாலும், நோய் தொற்றிய நன்கு சமைக்காத — உணவுகளாலும், காய்கறிகளாலும், பழ வகைகளாலும், அசுத்தமான கைகளால் உணவு தயாரித்தல், பரிமாறல், உண்ணல் போன்றவற்றினாலும் நோய்க்கிருமிகள் பரவுகின்றன. ஓடுள்ள கடல் உணவுகள் மூலமும் நோய் பரவலாம்.

### நோயாளியைப் பராமரித்தல்

யாருக்காவது நோயின் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக உங்கள் பகுதி பொது சுகாதார பரிசோதகரிடம் அல்லது குடும்ப நல மாதுவிடம் அறிவித்தல் வேண்டும். நோயாளியை அருகில் உள்ள வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.


-கா. ரஞ்சன்-
(4 ஆம் வருடம்,
யாழ் மருத்துவ பீடம்.)


இரவு வேளைகளில் அல்லது வைத்தியசாலைக்கு செல்ல முடியாத சூழ்நிலைகளில் நோயாளியை வீட்டில் தனிமைப்படுத்தி பராமரிப்புச் செய்தல் வேண்டும்.

பராமரிப்பின் பிரதான இலக்காக உடலில் இழக்கப்பட்ட நீர், உப்புக்களை மீளவும் வழங்குதல் மூலம் நீர்—கனியுப்பு சமநிலையையும் சுற்றோட்டத்தையும் இயல்பு நிலையில் பேணுதலாக இருக்க வேண்டும்.

எவ்வளவு விரைவாக சிகிச்சையை ஆரம்பிக்கின்றோமோ அந்தளவிற்கு விரைவான குணமடைய வாய்ப்புண்டு.

வாந்தி அதிகம் உள்ள நோயாளிக்கு வாய்மூலம் அல்லாத வேறு வழிகளிலும் திரவ இழப்பை ஈடுசெய்தல் வேண்டும். (நாளங்களில் ஊசி மூலம்) வாந்தி நின்றதும் அரை லீற்றர் மணித்தியாலத்திற்கு என்ற வீதத்தில் திரவம் உள்ளெடுக்க வேண்டும். இது நோயாளியைப் பொறுத்து மாறுபடலாம். வாய் மூலம் கொடுப்பதற்கு "ஜீவனி" என்ற பெயரில் மருந்துக் கடைகளில் விற்பனையாகும் உப்பு பதார்த்தத்தைக் கொதித்தாறிய நீரில் முறைப்படி கலந்து கொடுக்கலாம். வீடுகளில் அரை தேக்கரண்டி சாதாரண உப்புப், நாலு தேக்கரண்டி சீனி ஆகியவற்றை ஒரு பைந்து கொதித்தாறிய நீரில் கலப்பதன் மூலம் ஜீவனியை ஒத்த பானத்தைத் தயாரிக்கலாம்.

மேலும் பொரியரிசி நீர், தேசிக்காய்த் தண்ணீர், இளநீர், சுட்டாறிய நீர் என்பனவும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப வழங்கலாம்.

உப்புக்கலந்த அரிசிமாவுக் கஞ்சி வெளியேறும் திரவத்தைக் குறைக்க உதவும்.

சிறுவர்கள், வயோதிபர், குருதிச் சோகையுடையோர், இதய வியாதி உள்ளவர்களுக்கு ஈடுசெய் திரவங்கள் வழங்கும் போது, தேவைக்கு அதிகமாய் வழங்கப்படுவதால் ஏற்படும் பாதிப்புக்களை தடுக்க கவனமெடுத்து,

(X ஆம் பக்கம் பார்க்க)

# வைத்திய சஞ்சீவி

# வயிறு கோபம் கொள்கிறதா?

''வாங்கோ! வாங்கோ! இருங்கோ!''

''கேள்விப்பட்டன். என்ன சுகமில்லை?''

''வயித்திலை புண்''

'ஐயையோ! பெரிசா எங்கை பாப்பம்?''

''வெளியிலை இல்லை உள்ளுக்கை'' 'அல்சர்' சரியாகச் சொன்னால் 'பெப்டிக் அல்சர்' ......'' மாஸ்ரர் சொன்னார்,

''வயித்துக்குள்ளை புண்ணெண்டு என்னெண்டு தெரியும்?''

''சொல்லுறன்பொறுங்கோ முதலிலை..., செல்லம் இஞ்சை வா...! மாமாவுக்குச் சொல்லு. இவள் என்ரை கடைசி செல்லம்...''

செல்லம் சொன்னாள்.

''உணவுப்பாதை அப்படி ஒன்றும் சிக்கலானதல்ல! வாய்க்குள் தள்ளப்படுகின்ற

## நோயற்ற வாழ்வு - 7

இடியப்பம் எனும் என்ற உணவுக்குழாயின் சுருக்கங்களோடு நெஞ்சைக் கடந்து, வயிற்றுள் — அதன்ற — இரைப்பையை அடைகிறது. இரைப்பை உணவை தாமதப்படுத்தி கூழாக்கி முன் சிறுகுடல், சிறுகுடல் வழியாக பெருங்குடலுக்கு அனுப்ப அது பயணத்தை தொடர்ந்து குதத்தை வந்தடைகிறது. அதற்கிடையில் இடியப்பம் கூழாகி அக்குவேறு ஆணிவேறாக புரதம், இலிப்பிட்டு [illegible] பக்குவப்படும்.

''காணும், செல்லம் போய்ப்படி. தம்பி! டேய் ராசா, இஞ்சை வா...வயித்திலை புண் எப்பிடிவருகுது எண்டு சொல்லு...இது கடைசிக்கு மூத்தது!...'' செல்லம் போக ராசன் வந்தான்.

வயிற்றில் புண் என்டால் இரைப்பையிலோ அல்லது இரைப்பையோடு தொடர்பான முன்சிறுகுடலிலோ இருக்கின்ற புண்தான். வாய்க்குள் சில நேரங்களில் "அவிவது" போல வயிற்றுள்ளும் புண்ணாக்கும். வாய்க்குள் உமிழ்நீர் சுரப்பதுபோலவே இரைப்பையினுள்ளும் குடலினுள்ளும் சில சுரப்புகள் உணவை சமிபாடடையச் செய்வதற்காக இரப்பை, குடல். சுவர்களினால் சுரக்கப்படுகின்றன இதில் அமிலச் சுரப்பும் புரதத்தை சமிபாடடையச் செய்கிறபெப்சின் என்ற சுரப்பும் அடங்கும் இரைப்பைச் சுவரும் குடற்சுவரும் புரதத்தாலான" பச்சை''இறைச்சிகள்தானே! எனவே அமிலத்திலிருந்தும் பெப்சினிலிருந்தும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள அவை சீதம் என்ற ஒரு பாகுப்படலத்தை சுரந்து உட்சுவர்களின் பூசிக்கொண்டிருக்கின்றன.

''இந்தக் கவசம் நலிவுற்ற சந்தர்ப்பங்களில் இரப்பையால் சுரக்கப்படுகின்ற சுரப்பே அதை அழிக்கின்ற—வேதனை தருகின்ற—துரோகத்தனம் நிகழ்கிறது. இதற்கு அமில, பெப்சின் சுரப்பிகள் கூடுதலாய்ச் சுரப்பதும் ஒரு காரணமாகின்றது''.

''சரி தம்பி காணும்... பவனம்! பவனம்!''

''வேண்டாம் மாஸ்ரர்... நீங்களே சொல்லுங்கோ''

''அதுக்கில்லை பவனம் 'பாக்' குக்குள்ளை மிக்சர் கிடந்தது. கொண்டா சிதம்பரத்துக்கு''

''வேண்டாம். எனக்கும் கொஞ்சநாளா வயிற்று வலி. இப்ப இதைச் சாப்பிடக் கூடுதோ எண்டு பயமாய்க் கிடக்குது''

வயிற்று வலி அல்சரின் அறிகுறி. வயிறு ஒரு கூடை. ஈரல், குடல் போன்றவை தவிர சிறுநீரகங்கள், பித்தப்பை, மண்ணீரல் என நிறைய அயிட்டங்கள் அங்கே இருக்கின்றன. அதற்கேற்றாற் போல இனிச தினிசான வலிகளும் இருக்கின்றன.


அ. கிருஷ்ணேந்திரன்
(யாழ். மருத்துவ பீடம்)


உணவோடு தொடர்பாகவே அல்சர் வலி வருகிறது. சிலருக்கு சாப்பிட்ட உடனேயே வலிக்கும். சிலருக்கு சாப்பிட்டு சில மணித்தியாலங்களின் பின் வலிக்கும். இது இரைப்பைப் புண்ணா சிறுகுடல் புண்ணா என்பதைப் பொறுத்தது. இரைப்பைப் புண்காரர் பெரும்பாலும் பால்.முட்டைகளைத்தான் சாப்பிடக் கூடியதாக இருக்கும். மற்ற உணவுகள் வலியைத் தரும். சிறுகுடல் புண்ணுக்கு அடிக்கடி உணவை உள்ளெடுக்காவிட்டால் வலி வரலாம். வலி வயிற்றின் மேல் நடுப்பகுதியில்தான் அனேகம் ஏற்படும். சிலரில் வாரக்கணக்கில் மாதக் கணக்கில் நிலைத்து நிற்கும் சமியாடின்மையும் வாய்வுக் கோளாறாகவும் தோன்றும். நெஞ்செரிவும் இருக்கலாம். வாந்தி, வாந்தியுடன் சமியாடடைந்த இரத்தம் கோப்பி நிறத்தில் செல்லலாம்; மலத்துடனும் அவ்வாறு இரத்தம் வெளியேறலாம். இது

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமயத்தை வென்றவர்கள்!

பகுதி III

தேங்காய் பிடுங்க வந்தவன் மரத்துக்கு இரண்டு தேங்காய் கூலி கேட்டானாம். ஏற ஒன்று, இறங்க ஒன்று. ''ஒன்று மட்டும் தருவேன். ஏறிப்பிடுங்கு! இறங்குவது பற்றி எனக்குக் கவலை இல்லை.'' என்றானாம் வீட்டுக்காரன்.

இமயமும் அப்படித்தான். பாதி அலுவல் முடிந்தது. கிரகோருக்கு இனி இறங்குவதும் சுலபமான காரியம் அல்ல. ஆனால் மனதில் ஒரு தெம்பு. இமயம் கண்டேன் என்ற திருப்தி.

இறங்கிவரும் வழியில் பிற குழுவினர் முன்னணியில் ஏறிக்கொண்டிருந்தனர். பாதாளத்தில் முகில்கள் தவழ்ந்து மலையை மோதிக்கொண்டிருந்த அக்காட்சி நெஞ்சினைத் திகிலடைய வைத்தது. ஏறும்போது எண்ணம் முன்னே சென்றதால் பாதாளம் புரியவில்லை. பயங்கரம் தெரியவில்லை.

புதிதாக மரத்திலோ ஏணியிலோ ஏறுபவர்கள் இறங்கும் போதுதான் தொடை நடுங்குகிறார்கள்.

இவன் குழுவில் முதலில் சந்தித்தவன் ஏறிக்கொண்டிருக்கும் அண்டிதான். அவனிடம் தனது ஒட்சிசன் வால்வை சிறிதுமூடி விடும்படி கேட்டான் கிரகோர். ஒருசிறு சேமிப்பு உத்தி அது. மூடி விட்டதும் தெம்பு பிறக்கத் தொடங்கியது. உற்சாகமாக இறங்க முடிந்தது அதிசயமே!

மேலும் சற்று இறங்கவும் ஒப்பந்தக்காரர் ஹோல் ஒரு பெண்ணை ஏற்றிவிட படும் கஷ்டம் பரிதாபமாக இருந்தது. இவளை வாழ்த்துவதில் உற்சாகம் காட்டினாலும் இம்முறை ஹோலின் குழு ஒட்டுமொத்தமாக பார்த்தால் எதையும் சாதிக்கவில்லை என்றே கூறலாம். காசு கொடுத்து மலை ஏற வந்த ஆசை பனியையும் காலைவாரி விட்டது.

> பூப்போல விழுந்து குவிந்து வழியும் பனிமலர்கள் ஆபத்தானவை. அந்தப் பனித் தூறல் திடீரென எழுபது நொட்ஸ் வேகத்தில் பொலப் பொலவென பனிக்கட்டி மழையாகப் பிடித்துக் கொண்டது.

> பன்னிரண்டு நாள்கள் கழித்து அந்த மலையேறும் வழிகாட்டி நிபுணனின் சடலம் பனிப்படலத்தில் விறைத்திருக்கக் காணப்பட்டது.

### ஒட்சிசன் பற்றாக்குறை

ஒட்சிசன் தீர்ந்து தவிக்கும் போதுதான் கிரகோருக்கு விபரீதம் புரிந்தது. அண்டி வால்வை மூடுவதற்குப் பதிலாகத் திறந்துவிட்டான். படுபாவி. அதுதான் தெம்பு கூடியதற்கும் காரணம் ஆகி விட்டது. இனி மரணப் போராட்டம்தான். இந்நேரம் ஏறும் பலருக்கும் ஒட்சிசன் முடியும் தறுவாய் அல்லவோ என்று அவன் நினைத்தான்.

சென்றதடவை 300 அடிகளால் கோட்டை விட்ட ஹான்சென் பாவம். அடுத்ததாக ஏறிக்கொண்டிருந்தார். தொடர்ந்து வேகமாக இறங்கிட எத்தனிக்கும் கிரகோரின் கடிகாரம் 3.00 மணியை காட்டவும் — 400 அடி நேரடி உயரத்தில் உச்சி இருக்கவும், பனி தாண்டி மேலே ஏறிக்கொண்டிருக்கவும், பனிமழை தொடங்கி விட்டது. பூப்போல விழுந்து குவிந்து வழியும் பனிமலர்கள் ஆபத்தானவை தான்.

கிரகோர் மரணப்போராட்டத்துடன் ஒரு நிலையத்தை இறங்கி அடைந்ததும் ஓர் ஒட்சிசன் சிலிண்டரைப் பிடுங்கிப் பொருத்திக் கொண்டபின்தான் மூச்சுவிட முடிந்தது. இனிப் பிழைத்து விடலாம் என்ப

**மு. சிவநேசன்**

நம்பிக்கை பிறந்தது.

திடீரென 70 நொட்ஸ் வேகத்தில் பொலபொலவெனப் பனிக்கட்டி மழை பிடித்துக் கொண்டது. மேலே சென்றவர்கள் பலரின் நிலைமை தெரியவில்லை. இருள் கௌவத் தொடங்கியது. வழியில் ஏற இறங்க வழியின்றி தவித்தவர்களுக்கு உதவி செய்ய இவனது ஒட்சிசன் தட்டுப்பாடு இடம் கொடுக்கவில்லை: இனி விடிந்தபின்தான் அவர்களைப் பற்றிக் கவலைப்படலாம்.

நேரக்கணிப்பு பிழைத்து விட்டதால் அனைவருக்கும் தேவையான அளவுக்கு ஒட்சிசன் கையிருப்பு இல்லை என்றே கூறலாம். எனவே காலம் தாழ்த்தாமல் தொடர்ந்து இறங்கி அடுத்த மட்டத்துக்கு வருவதும்கூட மேலே நிற்பவர்களுக்குச் செய்யும் உதவிதான். இல்லாவிட்டால் மீண்டும் இவனுக்கே சிலிண்டர்கள் தேவைப்படும் நிலைமை.

அதேவேளை திரும்பாமல் மேலே தவிப்பவர்களை காக்கும் தெம்பு வேறு எவரிடமும் இருப்பதாகத் தென்படவில்லை. அதே வேளை மேலும் ஒருசிலர் உச்சியை எட்டிவிட்டுத்திரும்பிக்கொண்டிருந்தமை அதிசயம் தான்.

(XI ஆம் பக்கம் பார்க்க)



# பகைவனுக்கருளிய பண்புடைய நெஞ்சம்

'பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே!' என்று பாடினான் மகாகவி பாரதி.

நம்மை அழிக்க நினைப்பவனுக்கும் நாம் அன்பு காட்டுவதுஎன்பது எத்தனைஉயரிய பண்பு? இதை இந்தத் தமிழ் மண்ணில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஒரு மன்னன், தன் ஜீவ இலட்சியமாகக் கொண்டிருந்தான்.

அவன் — திருக்கோவிலூரை ஆண்ட மலையமான். மலையமானின் வாள் வலியும், தோள்வலியும் பகைவர்களைச் சொப்பனத்திலும், நடுங்கச் செய்யும் ஆற்றலுடையவை. ஆனால் மலையமான், வாளெடுத்துப் போரிட்டு தென்பெண்ணை ஆற்றினை ஓர் இரத்த நதியாக ஆக்கிவிட எப்போதும் விரும்புபவனல்ல.

அவனுடைய ஆட்சி, அறம் சார்ந்த ஆட்சி, அருளாட்சி! 'அன்பே சிவம்' என்பதனை உயிர் மூச்சாகக் கொண்டவன் மலையமான். இதை, அவனை எதிர்த்து நாற்படையும் திரட்டிவந்து நாலைந்து முறை தோற்றோடிய பகையரசன் முத்தநாதனும் அறிவான்

★ ★ ★

மலையமான் அன்று மதிய அன்னம் புசித்தபின், களைப்பு நீங்க தந்தக் கட்டில் சற்றே சயனித்திருந்தான். மென்துகில் போர்த்த பஞ்சணையில் அரசமாதேவி மலையமானின் அருகமர்ந்து அவரது வீரக்கழலடிகளை இதமாகப்பிடித்துவிட்டுக் கொண்டிருந்தார்.

அப்போதுதான் சிவனடியார் ஒருவர் மன்னனைப் பார்க்க வந்திருப்பதாக அரசரின் மெய்க்காவலன் தத்தன் வந்து தகவலறிவித்தான். மன்னன் உடனே அவரை உள்ளேவர அனுமதிக்குமாறு கூறிவிட்டு, மஞ்சத்திலிருந்து எழுந்து தாமும் அடிகளை வரவேற்று உபசரிக்க சித்தமானான்:

மெய்த்தவமேனியராய்பூசு வெண்ணீறு ஒளி துலங்க வந்த சிவனடியார் ''மன்னா! முன்னம் ஒரு போது உம்தலைவர் ஈசன், ஓர் ஆகமநூலை [illegible] துண்டு. அது மிகப் பழைய நூல். ஆதி ஆகமமான அந்நூலை உமக்கு வாசித்தளிக்கவே நான் வந்திருக்கிறேன். முறைப்படி அதை நீ என்னிடம் பாடம் கேட்க வேண்டும். உன்கவனம் சிதையாதிருக்க நீ மட்டுமே என்னுடன் தனித்திருக்கவேண்டும். இப்போதே பாடம் கூறி, அந்நூலை உனக்களிக்க [illegible] நான் திரும்பவேண்டும்!'' [illegible] தலைவர்.

'சித்தம் போக்கு சிவம் போக்கு' என்று அவர் போய்விட்டால் என்ன செய்வது..... ஈசன் திருவாக்கால் அருளப்பட்ட ஆகமநூலைப் பெறுவது எத்தனை அரிதானது! எனஎண்ணிய மலையமான் உடனே, அரசமாதேவியைச் அந்தப்புரத்திற்கு செல்லுமாறு கட்டளையிட்டான். தத்தனை, ''நீசென்று வாயிலில் காவலிரு. ஒருவரையும் உள்ளே அனுமதியாதே...'' என்று பணித்தான்.


சிவனடியாரை உயர்ந்த இருக்கையில் அமர்த்தி, மலையமான் ஒரு பணிவான மாணவனைப்போல் அவர் தாள் பணிந்து நின்று, ''பெருமானே! எனக்கு ஈசன் அருளிய ஆகம நூலைப்பற்றி எடுத்துரையுங்கள்...'' என்று வேண்டினான்.

அங்கேவந்திருப்பதுசிவனடியாரல்லவே! பகைவன் முத்தநாதன்! மெய்த்தவ வேடத்திலிருந்தவாறே சுவடிக் கட்டினுள்ளே மறைந்திருந்த குறு வாளினை எடுத்து ஓங்கியவாறே, ''மன்னா! எழுந்திரு'' என்று கூறினான். எழுந்த மன்னன் வஞ்சகனின் குறுவாள் வீச்சில் குருதி கொப்பளிக்கும் மேனியனாய் நிலைதடுமாறி நிலத்தில் சரிந்தான்.

மெய்க்காவலன் தத்தனுக்கு இந்த வேடதாரி மீது ஆரம்பமுதலே சந்தேகம் இருந்தது. அவன் 'உம் தலைவர் ஈசன்' என்று ஈசனை அந்நியப்படுத்திப் பேசிய போதே அவன் கபட சந்நியாசி என்பதும் புரிந்து விட்டிருந்தது. ஆனாலும் அரசாணைக்கு அவன் கட்டுப்பட்டதாலேயே இந்த விபரீதம் சம்பவித்து விட்டது. தத்தன் நொடிப் போதில் வாளை உருவிக் கொண்டு உள்ளே பாய்ந்து கபடசந்நியாசியான முத்தநாதனை வெட்டி வெறிய முனைந்தான். ஆனால், அரசன் மலையமான் தத்தனைத் தடுத்து.

''தத்தா! அவரைக் கொல்லாதே. நீசனேயானாலும், ஈசன் பெயரால் இங்கு வந்திருக்கிறான் முத்தநாதன். அவனை இப்போது நான் பகை மன்னனாகவே கருதவில்லை. மேனி முழுவதும் வெண்ணீறுபூசிய சிவனடியாராகவே கருதுகிறேன். எந்த வேஷத்தை நாம் ஏற்றுக் கொள்கிறோமோ அந்த வேஷமே நம்மை மெய் வழிக்கு இட்டுச் செல்லும்: மனிதர்களில் எந்த வித்தியாசமும் இல்லை. ஏற்றுக் கொண்ட பாத்திரமாகவே ஜீவன் மாறிவிடுகிறது. இப்போது நீயும் — நானும் மனித இனம்தான். ஆனால் என்னை இந்த அரசவேடத்திற்காகத்தானே நீ பாதுகாவலன் என்ற வேடத்தில் காத்து நிற்கிறாய்! ஏற்ற வேடத்தை மதித்தாக வேண்டும். எம்மைப் பொறுத்தவரை முத்தநாதன் இப்பொழுது ஒரு சிவனடியார்

(XI ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி சிறுகதை

# "விருது"

## அளவையூர் கே. எஸ். சிவஞானராஜா

..'அஸ்வினி, காயத்திரி, சமலினி, மயூரி, பைரவி''... ஆம், அந்தப் பெரிய பாடசாலையில் எனது பெயர் ஒலிக்கும் பொழுது எனக்குள்ளே ஒருவித சந்தோஷம். அப்படியிருந்தும், எதிலுமே என்னால் முன்நிற்க முடியவில்லை என்பதான கவலையே என்னை வாட்டிற்று.

''கமலி! இருநூறு மீற்றர் ஓட்டப் போட்டிக்கு உம்மைப் போட்டிருக்கு. பிளீஸ்! ஓடிப்பாரும்! சரியா?...'' பைரவி சொல்லிவிட்டுப் போய்விட்டாள். என்னால் மறுக்கமுடியவில்லை. என்ன செய்வேன்? மெய்வல்லுநர் போட்டியன்று எனது சக்தியெல்லாவற்றையும் திரட்டி ஓடிக்கொண்டிருந்தேன்.

''கமலி...'கமலி...கமலி...'' எனது இல்லத்தைச் சேர்ந்தவர்கள் எனக்காக ஆரவாரம் செய்கிறார்களே என்ற அனுதாபத்தினால் ஓடினேன். பின்னால் யார் வருகிறார்கள் என்பதைக் கூடப் பார்க்கமுடியவில்லை. ஒரு மாதிரி ஓடி முடித்து விட்டேன். ஓடி முடித்த சந்தோஷத்தில் திரும்பிப் பார்த்தேன். யாருமே இல்லை ஆம்! என்னை யாருமே ஏனென்று கூடப் பார்க்கவில்லை. அம்மாவைக் கூடக் காணவில்லை. எனது அக்கா கூட வரவில்லை. ஏனென்றால் அவள் நன்றாக ஓடுவாள். நான் நன்றாகக் களைத்து விட்டேன். கடைசியாக வந்த வெட்கத்தினால் எனது இல்லத்திற்குப் போக முடியவில்லை, மற்றவர்களையெல்லாம் அவர்களது உற்ற தோழிகள் வந்து விழாதபடி கூட்டிச் செல்கின்றபோது, பைரவியோ, மயூரியோ யாருமே வரவேயில்லை.

''கமலியைப் போட்ட நேரம் கௌரியைப் போட்டிருக்கலாம். சீ... எங்களுக்கு வாறதெல்லாம்...'' எல்லோரும் என்னைப் பார்த்து இப்படித்தான் சொல்கிறார்கள். நான் என்ன செய்வேன்! எனக்கு ஆண்டவன் தந்தது இவ்வளவு தானே. எனது இல்லத்திற்குள் ஒருமாதிரிப் போய் உட்கார்ந்து விட்டேன். எமது இல்ல ஆசிரியர் என்னை இனங்கண்டு குளுக்கோசும், குளிர்பானமும் தந்து என்னைத் தேற்றிக்கொண்டார். தோல்வியைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொருவருக்குமாக அவரது ஆசிரியசேவை இற்றைவரை தொடர்கிறதே தவிர, அவரை இனங்காணக்கூடிய ஒரு திணைக்களம் இன்னுமே உருவாகவில்லையே. அவரை எண்ணியவளாய் நானும் தேறிக் கொண்டேன்.

அக்கா 'சாம்பியன் கப்' பெற்றுக்கொண்டு வீட்டுக்கு வந்தபோது உண்மையிலேயே நான் சந்தோஷப்பட்டேன்.

ஆனால் எனது சந்தோசத்தை அக்கா அங்கீகரிக்க மறுத்துவிட்டாள். அம்மா கூடத் தன்கௌரவம் ஏதோ பாதிக்கப்பட்டது போன்று என்னை அடுத்த வீட்டுப் பிள்ளையாகப் பதவி இறக்கி விட்டார்.

குடும்ப அட்டையில் நானும் ஒருத்தி என்ற தகுதி தான் என்னை வாழவைத்துக் கொண்டிருக்கிறது.

விளையாட்டுப் போட்டிகள் முடிந்தன. ஆங்கிலதினப் போட்டிகள் வந்தது. அதற்கும் என்னைப்போட வேண்டும். நான் முடியாது என்று சொல்லி விட்டேன்.

..."பின்னை! உம்மையும் போட்டிருக்கிறோம். கவனமாகப் பேசினீர் என்றால் உமக்குப் பிளேஸ் உண்டு. நீர் பேசும்...'' என்றார் ஆங்கில ஆசிரியர்.

...''ரீச்சர்! ரீச்சர்! கமலி பேசமாட்டா! எல்லாப் போட்டிகளுக்கும் சமலியைத் தான் போடுவினம். ஆனால் ஒரு பிளேஸ்ும் கிடைக்காது. பைரவியைப் போடுங்கோ ரீச்சர்!'' என்றாள் மயூரி.

ஆங்கில ஆசிரியர் புதிதாக வந்த காரணத்தினால் வகுப்பைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இருந்தாலும் என்னிடத்தில் ஓர் அனுதாபம் இருந்தது.

''கமலி! உமக்கு விருப்பமே இல்லையா?'' மௌனமாக இருந்ததனாலோ என்னவோ என்மீது உளக்கனிவு ஏற்பட்டது. எந்தவொரு மாணவனுக்கும் ஆசிரியர் களது ஆசீர்வாதம் இருக்க வேண்டும் என்று எனக்கு முன்பு கற்பித்த ஆசிரியர் அடிக்கடி சொல்லிக் கொள்வார்.

ஆம்! என்மீது ஏனையவர்களுக்கு ஏன் அதிக அதிக அக்கறை என்பதனை என்னால் புரிந்து கொள்ளக் கூடிய வயதும் எனக்கிருந்தது. எனக்கு நான் அழ இல்லை. ஆனால் மற்றவர்களுக்குப் பண்பினால் அழகுள்ளவளாக இருக்கின்றேன். தோற்றத்தில் உயர்தர வகுப்பு மாணவிபோல வளர்ந்திருந்தேன். கிரிப்பிலே வஞ்சகத்தையோ, நஞ்சையோ, நான் கொட்டவில்லை. திறமையில் மட்டும் என்னால் முன்னெடுக்க முடியவில்லை. வகுப்பிலே உள்ள கூட்டு மாணவர்களது தொகையும், எனது நிலையும் ஒன்றாகத் தான் இருக்கும். என் தங்கைகூட என்னைவிட எவ்வளவோ கெட்டிக்காரி, அவளுக்கு விளங்குகின்ற எத்தனையோ விடயங்கள் எனக்கு ஒரே சூன்யமாக இருக்கும். அக்காவையும் கேட்க முடியவில்லை; தங்கையையும் கேட்கமுடியவில்லை. நான் யாரிடம் கேட்பேன்? வகுப்பிலேயும் என்னால் நிமிர முடியவில்லை; வீட்டிலேயும் நிமிர முடியவில்லை.

ஆண்டவா! என்னைப் பார்த்து எல்லோரும் கேலி செய்கின்ற நிலையில் படைத்து விட்டாயே. எனக்கு ஒன்றுமே விளங்கவுமில்லை. புரியவுமில்லை. கணித ஆசிரியர் எப்படித் தான் விளங்கப்படுத்தினாலும் முழங்குவதுபோல இருக்கிறதே தவிர விளங்க முடியாமல் நான் தவித்துக் கொண்டிருக்கிறேன். பாடசாலை மாறவும் முடியவில்லை; மாறவிடவும் மாட்டார்கள். நான் ஒதுங்கி வாழ்வதைத் தவிர வேறு வழியே இல்லை. அடுத்த வருடம் பரீட்சை என்ன செய்வதென்றே புரியவில்லை. எனக்காக யார் தனியாக வகுப்பு எடுத்து என்னை மீட்கப் போகிறார்களோ தெரியவில்லை, பரிகாரக் கற்பித்தல் என்றெல்லாம் ஏதோ சொல்கிறார்கள். என்னைக் காப்பாற்ற முடியவில்லையே என்பது தான் என் கவலை.

...''கமலி! என்ன யோசிக்கிறாய்? உனக்கு ஏற்ற போட்டி ஒன்று வந்திருக்கிறது. நீ கட்டாயம் பங்குபற்றியே ஆகவேண்டும்...'' என்றாள் மயூரி.

''என்ன மயூரி! எனக்கு எப்போதாவது வெற்றி கிடைத்திருக்கிறதா? தயவு செய்து என்னைக் கேட்காதே! என்னை யாராவது மதிக்கிறார்களா என்று நீயே சொல்லு பார்க்கலாம்...?''

''என்னடி? நான் உன்னை மதிக்கவில்லை என்று உனக்கு எப்படித் தெரியும்? மதித்தபடியால்தானே உன்னிடம் வந்து இதைச் சொல்கிறேன். ஒன்றை மட்டும் உனக்குச் சொல்கின்றேன். மறுக்காமல் இந்தப் போட்டிக்கு விண்ணப்பித்துக்கொள் கமலி''... என்றாள் மயூரி.

எனக்குப் புரியாத அவசரத்துடன் என்ன போட்டி என்பதனை அந்தக் கொழும்புப் பத்திரிகையில் பார்த்தேன்.

''அனைத்துலகச் சித்திரப் போட்டி'' எனக் குறிப்பிடப் பட்டிருந்தது. பரிசுகளும் அறிவிக்கப்பட்டிருந்தது.

வீட்டுப் படலையறைக்குச் சென்று மனதாரக் கும்பிட்டேன். 'தனந்தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா மனந்தரும்' எனும் அபிராமி அந்தாதிப் பாடல் என் வாயிலிருந்து பாடலாக ஒலித்தது.

அம்மாவும், அப்பாவும் என்னருகில், வந்து ''என்னடி திடீரென''... என்றவாறு நகைத்தனர்.

''அப்பா! அம்மா! என்னை ஆசீர்வதியுங்கள்'' என்றேன்.

யோகர் சுவாமியின் படத்தின் மேலிருந்து பல்லியொன்று சொல்லிய ஆசீர்வாதம் அம்மாவைத் தடுமாறவைத்தது.

''என்னடி செய்யப்போறாய்?'' என்று மெதுவாகச் சொல்லக் கூடாதா? உரத்தா சொல்ல வேண்டும். எனக்குப் பிடிக்கவேயில்லை. அம்மா எனக்கு ஒருபோதுமே அன்பைத் தரவில்லை, என்னிடம் ஒருபோதுமே கருணையைச் சொரிந்ததேயில்லை. நான் தோல்வியுற்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் என்னைத் தேற்றி ஆறுதல் தருகின்ற இல்ல ஆசிரியரிடம் சென்று போட்டிக்கான ஆசீர்வாதத்தைப் பெற்ற போதுதான் நான் தலை நிமிர்ந்தேன்.

போட்டி விதிகளுக்கமைய, கவனமாக என்னை வழி நடத்தினாள் மயூரி. அனைத்துலகச் சித்திரப் போட்டியின் கருப்பொருளாக, ''மூன்றாம் உலக நாடுகளில் தோல்வியை நோக்கிச் செல்லும் கல்வி நடைமுறை'' என்பதனை வரைவதற்காக எனது கைகள் துடித்தன. எனது உள்ளக்குமுறல் எல்லாவற்றையும் வடிவமைத்தேன்.

''என்னடி! ஒரே கீறிக்கொண்டிருக்கிறாய்?'' அக்கா துள்ளி விழுந்தாள்.

''கமலி! நிப்பாட்டு. உதைவிட்டிட்டு புத்தகம் எடுத்துப் படியடி'' அம்மாவின் ஒரு ஷெல்—எனக்குப் பலத்த உட்காயத்தை உண்டாக்கியது.

''அம்மா அம்மா! கமலி அக்கா வடிவாகக் கீறி இருக்கிறா...'' தங்கை— மலர்ந்தாள்.

பாராட்டுக்கோ அனுமதியில்லை என் வாழ்வில்.

அப்பா ஒன்றுமே பேசவில்லை. நானும் ஒன்றுமே பேசவில்லை. துவண்டுவிட்ட எனக்குப் பக்கத்தில் தும்புத்தடி தென்பட்டது. வீடு ஒரே குப்பையாக இருந்தது. அவசர அவசரமாகக் கூட்டினேன். ''ஆண்டவன் உன்னைத் தேடி வருகின்றான்'' என்ற தலைப்பில் ஒரு கடதாசித் துண்டு மேசையின் கீழ் தும்புத்தடியின் வீச்சில் அகப்பட்டது. ஆம்! அந்த வார்த்தை எனது இரத்தத்தில் ஓடிக்கொண்டிருந்தது. விடு... யும், அதிகாரிகள்... ஒரு தும்புத்தடியின் கீழிருந்த கிழிந்த கடதாசியால் எனக்குத் தர முடிந்தது. அந்தக் கடதாசியை எடுத்துச் சுருட்டி கண்ணபிரானின் படத்திலே உபயம் செய்தேன். அவ்வேளை மாதாவின் கோவில் மணி அடித்த வண்ணம் இருந்தது. என் மனதில் தைரியமான ஆளுமை பிரகாசித்தது.

அக்காவும், தங்கையும் வேகமானவர்கள், விவேகமானவர்கள் என்பதனாலோ அல்லது நான் ஒரு மொக்கு என்பதனாலோ என்னவோ நானே தான் காலைச் சாப்பாடும் செய்து முடிக்க வேண்டியவளானேன். அது குசினிக்கு மட்டும் தான் தெரியும். அவசர அவசரமாகப் பாடசாலைக்குப் புறப்பட்டேன். மயூரியும் கூடவே வந்தாள். அதிபரின் அலுவலகத்திற்குச் சென்று போட்டிக்கான படத்தினை உறுதிப்படுத்திக் கொண்டோம்.

''Fantastic Art'' என்று சொன்ன அதிபரின் கருத்தினை மயூரி 'அற்புதம்' என்றாள். என் வாழ்வினில் கிடைத்த அங்கீகாரம் பெற்ற ஒருவரது பாராட்டு ஒன்றே எனக்குப் போதாதா? தானாகவே அதனை வாங்கி பவுத்திரமாக காப்பிட்டு மடியாத வண்ணம் சீராக உறையிட்டு பதிவுத் தபாலில் ஜப்பானிலுள்ள சர்வதேசச் சித்திரக் கலாசார மையத்திற்கு அனுப்பி வைத்து, அதற்கான பற்றுச் சீட்டினை என்னிடத்தில் ஒப்படைத்தார். மூலையில் இருந்த தும்புத்தடிக்கு ஒரு பற்றுச் சீட்டுக் கிடைத்தது.

அக்கா என்றேன்!

அம்மா என்றேன்.

அக்காவோ, அம்மாவோ எனது சித்திரப்படம் சம்பந்தமாக ஏதாவது ஆதரவாகச் சொல்ல மாட்டார்களா என்று ஆதங்கமான ஆவல் எனக்கு. பதிலே இல்லை. வழமை போல மூலையில் கிடந்த தும்புத்தடியை எடுத்துக் கூட்டத் தொடங்கினேன். வீட்டிலேயும் சரி. பாடசாலையிலும் சரி கமலிக்குத்தான் தும்புத்தடி சொந்தம்.

மூன்றாம் தவணைப் பரீட்சையும் நெருங்கியது. மயூரியும் என் வீட்டிற்கு மாலை நேரம் வந்து என்னுடன் கூடவே இருந்து சொல்லித் தந்த பாடங்கள் புரியக்கூடியதாக இருந்ததோ என்னவோ பதினாறாவது நிலைக்கு உந்தப்பட்டேன். மயூரியும் ஏழாவது நிலைக்கு உந்தப் பட்டாள். மயூரி சந்தோஷப் பட்டாள். என்னை மிஞ்சிய அன்பினால் அவளைக் கட்டியணைத்து அழுதேன். மயூரி விம்மினாள்,

தைப்பொங்கலுக்காக வீடு யாவும் கழுவிக்கொண்டிருந்தோம். அம்மாவுக்கு இயலாது என்பதனால் அப்பாவும் நானும் வியர்வையால் தோய்ந்திருந்தோம். அக்கா ரியூஷனுக்குப் போய் வரவில்லை. தங்கை நித்திய கல்யாணி மரத்திற்குக் கீழே ஏதோ பாடிக்கொண்டிருந்தாள். ஆறு ஏழு துவிச்சக்கர வண்டிகள்! ஆம்! ஆரவாரித்துக் கொண்டு வருமாப்போல்! எங்கள் வீட்டுக்குத்தான் வருகின்றார்கள். அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், மாணவ தலைவர்கள்.

''வாங்கோ! வாங்கோ!! வாங்கோ...''

அம்மா கழுவிய வீட்டுக்கால் தடல்புடலாக ஓடி வந்து.

''என்ன விசயம் சொல்லுங்கோ'' என்று சொன்னது பாதி சொல்லாது பாதியாக விறுவிறுப்பானார்.

''கமலியைக் கூப்பிடுங்கோ'' என்றார் அதிபர்.

''என்ன விசயம் பாருங்கோ?'' அம்மா பயந்து போனார்.

''கமலியைக் கூப்பிடுங்கோ?,'

''அவ வீடுகழுவிக் கொண்டு நிற்கிறா பாருங்கோ''

அப்பாவும் பயந்து போனார். எனக்கும் பயமாக இருந்தது. நிலை தளர்ந்து, மனமொடுங்கி வெளியேதலையை நீட்டியது தான்......

''கமலி! கமலி! கமலி! கமலி! கமலி! கமலி! கமலி! ......'' எல்லோரும் கூப்பிடுகிறார்கள்.

என்னென்றே புரியவில்லை!

புரியும் படியாகச் சொல்லவுமில்லை! என்னைக் கதைக்க விடுகிறார்களேயில்லை!

''Congratulations கமலி!''

அதிபரின் வாயிலிருந்து ஆங்கிலமே சொரிந்தது. எனக்குப் புரியவேயில்லை. ஞாயிறுவாரமலரை வெளியே எடுத்து, ''இலங்கை முதற் பரிசைத் தட்டிக் கொண்டது'' எனும் தலைப்பை உரத்து வாசித்தார்.

''வெல்கம்— ஆங்கில பாடசாலையைச் சேர்ந்த செல்வி கமலினிசெல்வராஜா என்பவர் ஜப்பானில் நடைபெற்ற அனைத்துலகச் சித்திரப் போட்டியில் முதற் பரிசான ஒரு லட்சம் ரூபாவையும் ஜப்பானில் கல்வி கற்கும் புலமைப் பரிசிலையும்பெற்று இலங்கைக்கு என்றும் அழியாப் புகழை ஈட்டியுள்ளார் ......'' எனவாசித்து முடித்தபோது......அம்மாவை இறுகக் கட்டிப்பிடித்துக் கொண்டேன்.

கமலியை அம்மாவால் விடமுடியவில்லை. தங்கைச்சி எனக்கும் அம்மாவுக்கும் இடையில் புகுந்து கொண்டாள். அக்கா ஓடோடி வந்து, கமலி...கமலி...என்று என்னையே தூக்கி விட்டாள். கனவா, நனவா, கற்பனையா உண்மைதானா... என்று என்மனம் வகுப்பறை மூலைக்குள் ஓடி ஒளித்தது.

உலகிலே இது போன்ற சுகம் யாருக்குக் கிடைக்கும்? எல்லோரையும் வணங்கிவழியனுப்பிவைத்தோம். அடுத்த நாள் பேப்பரில் எனது படம் பெரிதாகப் பிரசுரிக்கப்பட்டு கௌரவங்களும் வெகுமதிகளும், கொடுக்கப்பட்டிருந்தன. வீடு முழுவதுமாக அன்பளிப்புகள் நிறைந்தன. எல்லாவற்றையும் வைத்து கண்ணபிரானை நடுவில் இருத்தி அர்ப்பணித்தேன். மயூரிக்கு என் ஆசைதீருமட்டும் விரும்பியதெல்லாம் கொடுத்தேன். அக்கா, அம்மா, அப்பா, தங்கைக்கு என்ன எது அவசியமோ அவையாக நானிருந்தேன். தும்புத்தடியில் அகப்பட்ட அந்தக் கடதாசி, உன்னைத்தேடி இறைவன்வருகின்றான் என்பதற்கு, எனது கையில் அகப்பட்ட அந்தத் தும்புத்தடியே காரணம் என்பதனை கமலிமட்டும்தான் புரிந்து கொள்ள முடியும்.

நூற்றாண்டு விழாவைப் பூர்த்திசெய்த அந்தப் பாடசாலை, முன்பு எல்லாம் தோற்றுப்போன எனக்காக பெரும் எடுப்பில் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஊர் வலமாக அழைத்து வருவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்று வெளியானபத்திரிகைகளில் எனக்கு கௌரவம் அளிக்கப்பட்டிருந்தது. தெரியாதவர்கள். எல்லாம் கமலியைத் தெரிந்து கொண்டார்கள். மயூரி எனக்குப் பக்கத்திலேயே இருந்தாள். மகிழ்ந்தாள். ஓ! மண்டபத்தில் நுழைந்த போதுதான் தெரிந்தது— என்போன்ற சில மாணவர்களே இருந்தனர். மிகவும் வேதனையடைந்தேன். ஏனையவர்கள் ரியூஷனுக்குப் போய்விட்டார்கள். அப்போ இப்பெருமை ஜப்பான் நாட்டவர்களுக்குத்

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வடக்கன்' (மாடு)!

வண்டில் மாடு நான்; வடக்கன் என அறிவீர்
பண்டைப் பெருமை பஞ்சமில்லை என்றாலும்
முன்னாளில் என்றன் முடுக்கும் முறைப்புகளும்...
என்ன ஸ்மாட்; என்றன் இடிகொம்போ "ஸ்கட்" போலிதான்

நெடுந்தீவு மணலில் நெட்டைப் பசுக்களுடன்
சடுகுடுக்கள் ஆடிச் சாமை வயல்பூந்து
மூக்குமூட்டப் பிடித்து மூன்கோயில் உப்பூற்றுத்
தேக்கத்தில் இறங்கித் தேகம் நனைபட்டுப்
பாக்குமரத் தென்றல் பட்டுத் தலைஉணர்த்தி
ஆக்காட்டிக் குருவியோடு அலைபாடும் தாலாட்டைச்
சோக்காய் ரசித்தபடி சுகித்திருந்த காலங்கள்.........

அந்தப் பொற்காலம் ஆகா! பசுமைதான்
வந்தான்கள்! கயிறெறிந்து வசப்படுத்திக் கொண்டான்கள்
அன்று தொட்ட கயிறும் ஆரம்பத்தில் சற்று
என்றன் கழுத்துக்கு இதமாக இருந்ததுதான்
உண்ணிக் கடிநீக்க உதவி புரிந்ததுதான்.

புண்ணாக்கு ருசியும் புதுச்சலங்கைக் கிணுகிணுப்பும்
அண்ணாச்சி மாரின் ஆதரவுத் தடவல்களும்
நன்றாய் இருந்ததுதான் நானும் உணர்ந்திருந்தேன்

உப்பூற்றைக் குடித்து உருசிகெட்ட என்நாக்கும்
சப்புக் கொட்டியதே! சலுகைகளைக் கண்டவுடன்
ஊற்றுநீர்; கஞ்சி; உளுத்தங்கோ துத்தெளிகல்
ஊற்றியிட்ட அமுதம் உண்பதிலே வலுபுளுகம்.

கோரைதின்ற வாய்க்குருசிக் கொள்ளோடு புண்ணாக்கும்
கீரையடித் தண்டுமென்றால் கிளுகிளுப்பு வருந்தானே?

இந்தச் சொகுசுகனே இனிவாழ்வு என்றிருக்க
உந்தச் சொகுசெல்லாம் உகைப்புமழை போலாச்சே
வந்ததொரு தைப்பூசம் வார்த்தை நடுங்குதம்மா
கட்டினான் காளை காய்ச்சிவைத்த செங்கம்பி
பட்டையாய் என்னுடலைப் பதம்பார்த்த தம்மாவோ!
முட்டுகிற என்கொம்பை முடமாக்கி — மூலத்தைக்
கிட்டியினால் தட்டிக் கீழ்த்தனங்கள் செய்தாரே
சுதந்திரமாய்க் காற்றைச் சுவாசித்த என்மூக்கில்
சுதறச்சுதறக் கயிறோட்டி தைத்தாரே

பலப்பரீட்சை செய்தேன்; பதறி நிலங்கிழித்தேன்
சலம்பெய்த தோடு சரியென்றன் ஆத்திரங்கள்
அலறிவிட்டேன் அலறல் அதைக் கேட்க ஆளில்லை
கலப்பையொடும் வண்டியொடும் கட்டாயக் கலியாணம்
வண்டில் முணுமுணுக்கும்; வாய்க்குள் புறுபுறுக்கும்
பெண்டில் அதுதான்; பெருமூட்டை பிள்ளைகள்தான்
கண்றாவி என்வாழ்வு கடகடத்து ஓடுதுபார்!

நாணமுத கண்ணீர்; நடுறோட்டில் பெய்தசலம்;
நான் விட்ட பெருமூச்சு நாளைக்குப் பயனற்று
வீணாகிப் போகாது; விடைபகரும் உலகுக்கு
நான்வாங்கும் அடிகள் நம்பெருமான் வாங்கியதாய்
எல்லோர் முதுகிலுமே என்றோ திரும்ப விழும்
அதுவரையில்..........
புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகமாகிப் பாரஞ் சுமந்திருப்பேன்!

- ச. முகுந்தன்

# மீள் பயணம்!

அவசரமாய்ப் பாரதி இந்த
அவனிக்கு இறங்கி வந்தான்.
உபத்திரம் செய்யவென்று என்
ஊருக்குள் வந்து சேர்ந்தான்

வீட்டுக்கு வந்த அவனை
விருந்துகள் கொடுக்காது — உடனே
கூட்டிச் சென்று முகாமில் — பெயர்
கொடுத்துத்தான் பதிந்து வைத்தேன்!

அடையாள அட்டை இன்றி
'அது'பற்றி அறிவும் இன்றி
"கடையிலே கிடைக்கும் எனவே
காசுக்கு வாங்கு" என்றான்!

சைக்கிளில் பெண்ணைக் கண்டு
'சரியான வளர்ச்சி' என்றான்
'கைக்கிளை உண்டோ' என்றான் — சிலர்
'காதலை'க் கண்டு திகைத்தான்!

தலைமயிர் குறைந்த பெண்ணை,
'தம்பி'யென் றழைத்து வைத்தான்
குலைந்திடாக் கொண்டைகள் கண்டு
குறும்புகள் செய்ய நின்றான்!

'கவிதைகள் ஏதும் சொல்க' என்று — என்
கழுத்தினை அறுத்துக் கொண்டான்
கவிதைகள் என்று கொடுத்தேன் — அவை
கவிதையே இல்லையே என்றான்!

படிப்பினைப் பற்றிச் சொன்னான்
பறவைகள் பற்றிச் சொன்னான் — நீ
துடித்திட வேண்டா மென்றான்
துடிப்பொடு செயற்படு என்றான்.

ஊரடங்கு நேரம் பார்த்து
உலவவே வெளியில் சென்றான்
தீரனாய் வாழ்வேன் என்றான் — துவக்குச்
சூட்டிலே செத்துப் போனான்.

கி. வாயுபுத்திரன்
(யாழ். இந்துக் கல்லூரி)

# மகிழ்ச்சி பெற....!

நல்லவற்றைக் கூட்டிக் கொள்
தீயவற்றைக் கழித்துக் கொள்
அறிவு வளத்தைப் பெருக்கிக் கொள்
நேரம் தன்னை வகுத்துக் கொள்
இன்பம் துன்பம் இரண்டினையும்
சமமாய் மதித்துப் பழகிக் கொள்
வெற்றி தோல்வி இரண்டினையும்
ஒன்றாய் நோக்கப் பழகிக் கொள்
செலவைக் குறைத்து வரவுதனை
பெருக்கி வாழக் கற்றுக் கொள்
நிலவைப் போல அனைவர்க்கும்
நிதமும் அன்பைப் பொழிந்திடுவாய்
துன்பம் தன்னைப் போக்கிடுவாய்
துணிந்து செயல்கள் புரிந்திடுவாய்
இன்பம் மலர வாழ்ந்திடுவாய்
என்றும் மகிழ்ச்சி கொண்டிடுவாய்.

அ. விவேகா

# வெள்ளை மனம்

நல்ல மனமுடையோன்
எங்குண்டு.....?
விடை தேடுகையில்
முற்காலப் புதிரொன்று
நினைவுகளை
மீட்டுகிறது.
மனமது
வெண்மையென்றால்
அணைக்கலாம்
உன்
கரங்களால்
தீயினை என்றான்
ஒரு மகான்.
மனமது
ஒரு நிலையென்றால்
ஏந்தலாம்
தென்றலை
உன்
கரங்களால் என்றான்
இன்னொரு மகான்.
தீயினை
நெருங்கினேன்
முடியவில்லை
தென்றலைத் தேடினேன்
கிடைக்கவில்லை.
கலியுகமதில்
வெள்ளை நிறம்
என்பதெல்லாம்
போலிதான்!

ச. தியானேஸ்வர சர்மா

# மழைக்காலம்

மழைக் காலம் எங்கள்
மனை யெல்லாம் பஞ்சம்
"போர்" எல்லாம் பெருக
பொருளெல்லாம் விலையேற
உழைக்காத மக்கள்
தழைக்க வழியே இல்லை
மழைப் பெண்ணே-நீ
பிழைக்க வழி விடு!

குளமெல்லாம் நிறைந்து
வளவெல்லாம் மழை நீர்
தொடர்ந்து நீ பெய்தால்
இடர் தான் எங்களுக்கு
கடன் தான் மிஞ்சும்
உடன் நீ நின்றுவிடு!

போரால் வாடிய பயிர்களும்
நீரால் தேறு மென்று
உன் வரவைப் பார்த்து
ஊரெல்லாம் தேடினோம்
நாடிய வேளை இல்லாமல்
விடிய விடியப் பெய்கின்றாயே!
சற்றாவது ஆறி விடு
நெற்பயிராவது மிஞ்சட்டும்!

— ப. உதயகுமார் —

# சூழலுக்காய் ஓர் எழுச்சி

விண்ணிற்குச் சென்றவர்கள் விட்டெறிந்த குப்பையெல்லாம்
மண்ணிற்கு படையெடுத்து மண்டலத்தை சுத்துதடா!
புண்ணுக்குப் மருந்தடிக்க புகைபோக்கி இருந்தடிக்க
எண்ணத்து களங்கம்போல் இவ்வுலகில் குப்பையடா!

நகரம் என்றதும் நாறிடுங் கூவங்கள்
தகரம் எங்கணும் பங்கிடுஞ் சாதங்கள்
சிகரம் சிந்திடும் சிகரட்டின் சாரல்கள்
அகரம் என்பதற்குள் ஆர்உயிர் போகுமோ?

மைவிழியாள் 'சென்றடிக்க' மாப்பிள்ளைமார் காடழிக்க
பைவழியே பாலனுப்ப பாதரசம் சேர்ந்திருக்க
கைநழுவிப் போகுதடா! காடுகளும் வேகுதடா?
தையலவள் வெளிரிடையாய் தாஜ்மகாலும் ஆனதடா!

இன்னொரு உலகம் உண்டோ சொல்
இருப்பதைக் கெடுப்பது முறையோ சொல்
விண்வெளி உனக்கு விருந்தோ சொல்
உன்னிடம் காத்திட உழைத்தே நில்.

- நிஷா

# நியமத்தின்படியே நிகழும்

உன்மூக்குச் சுவாசிக்க இருக்கும் காற்றை
எவர்நின்று தடுத்திடுவார்? பகலோன் நித்தம்
உன்மீது பூசுமொளிப் பளிங்கை வேறார்
எடுத்தொளிப்பார்? உன்வாய்க்கு உணவாய் மாற
என்றோ, எங்கோ பிறந்து உன்னைச் சேரும்
இரை நெல்லை எவர் மறிப்பார்? புவியின் சொத்தில்
உன்பங்கை எவரெடுப்பார்? உனக்கென் றில்லா
என்னினை யார் உனக்கீவார்? சொல்வாய் தம்பீ!

தீவளர்த்தோன் நெய்விடுவான்! திசையைத் திக்கைச்
செய்தியாக்கி விட்ட மகன் ஓய்ந்தா போவான்?
பூ உதிர வைத்தவன் அப் பூவே மீண்டும்
பூக்க; அதைத் தாய்வேரில் எருவாய் மாற்றிப்
பார்த்திருப்பான்! விதைபிணக்க மழையாய் வந்தோன்
பயிர் வாடவா விடுவான்? கூறு பிள்ளாய்.
நீ எதற்கு உனை நினைத்துப் பதறுகின்றாய்?
நியமத்தின் படி எல்லாம் நிகழும்; காண்பாய்.

நீ விரும்பியா பிறந்தாய்? நினைத்த போது
நீ விரும்பினாற் போலா நிகழு தெல்லாம்?
நீ கேட்டா மரணமகன் உன்கை சேர்வான்?
நின் விருப்பம் போலா நின் அடுத்த தோற்றம்?
பேந்தேன் நீ புசத்துகிறாய்? 'நடப்பை'ப் பார்த்துப்
"பேசாமல் கிட" போதும்! கால தெய்வம்-
நீ செய்ய வேண்டியதைச் சொல்லும்; செய்வாய்!
நீர்த்துளி நீ...... தாமரை இலை வாழ்வில்....'ஆழ்வாய்'!

மரணத்தின் மொழி......நோய் வாய்ச் சத்தம்! இங்கே
மரணத்தின் வலை......"பிய்ந்து ஆறாக்" காயம்!
உறக்கந்தான் மரணத்தின் உவமானம்! ஆம்,
"உடைமாற்றல் போலிதென்னும்" ஆத்மா ஞானம்.
'கருப்பாதை' சமதர்மம்! எல்லார் வாழ்வின்
கருக்கலிலும் சமதர்மம்! புவியில் எல்லாம்
இறைவனுடன் சமமென்னும் மரணம்! பேந்தேன்
இறுதிவரைப் பொய்வேசம்? தெளிக நீயும்!

- தேரடிச் சித்தர்.

# மது என்ற ஓர் அசுரன்

மது என்ற ஓர் அசுரன்
மகுடம் தாங்கி வந்தானே
தரம் கெட்ட மனிதர் எல்லாம்
அவன்பின்னால் சென்றாரே
குடி கெடுக்க வந்துநின்ற
குடிவகையைச் சூழ்ந்தாரே
குடித்துவிட்டுக் கும்மாளம்
போட்டு நின்று மகிழ்ந்தாரே!

மது அருந்தி மதிகெட்டு
மாண்பிழந்து நின்றாரே
மனம் மறந்து வாய்பிதற்றி
வசைமொழியும் சொன்னாரே
கால் தளர்ந்து நடை ஓய்ந்து
வீதிதனில் விழுந்தாரே
இறைவன் தந்த இயற்கை உடல்
வெளிக்காட்டி நின்றாரே!

நம்பிவந்த மனைவியரும்
மனையதனில் காத்திருந்தார்
பெற்றுவிட்ட பிள்ளையரும்
பசியுடனே பார்த்திருந்தார்
துன்னுநடை தளர்வுற்று
தள்ளாடி வரும் வேளை
கைகொடுத்து அணைத்துநின்று
கட்டிலினில் விட்டாரே!

விளக்கில் விழுந்த விட்டில் பூச்சி
தான் மட்டும் சாகுமைய்யா
குடியதனில் நீ விழுந்தால்
உன் குடியே நாசமைய்யா
மற்றவர்க்கும் தொல்லை தரும்
மது அதனை மறந்திடய்யா
மாண்புமிகு மனிதனாக
தலை நிமிர்ந்து வாழ்ந்திடய்யா!

இ.சி. தெட்சணாமூர்த்தி

கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய அரங்குகளில் களைகட்டிய யாழ். மண்ணின் நாட்டுக் கூத்துக்கள்!

## மேற்குலக ரசிகர்களைக் கவர்ந்த வடலிக்கூத்தரின் கலைப்பயணம்

அன்று ஒக்ரோபர் 18 ஆம் நாள், 1997 ஆம் ஆண்டு, ஜேர்மனியின் "யூலிச்" நகரம் ஒளி வெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்க என் பார்வைகள் அந்த ஒரு நிகழ்வில் பதிவாகிப் போகின்றன. ஜேர்மனியின் ஒரு பகுதி இது. அந்த நகர மண்டபத்தை (Stad Hall) அண்மித்த இடங்களில் பலவர்ணக் கார்கள் தரித்து நின்றன. ஜேர்மனி நாட்டு மக்களும் புலம்பெயர்ந்து அங்கு வாழும் எம்மவர்களும் அந்த மண்டபத்தின் நாற்காலிகளை நிறைத்துக் கொண்டனர்.

குளிரின் ஆக்கிரமிப்பு எங்கும் வியாபித்து நின்ற காலமது. ஏன் இத்தனை மக்கள் கூட்டம்? எதற்காக இந்த ஏற்பாடு? இந்த மண்டபத்தில் நடந்து கொண்டிருப்பது என்ன?

நினைவலைகள் பின்நோக்கி நகர்ந்தன ......

1997 ஆம் ஆண்டு ஆவணி 27. அதிகாலை எட்டு மணிக்கு யாழ்ப்பாண மண்ணின் பாரம்பரிய கலை வடிவங்களான நாட்டுக் கூத்து, இசை நாடகம் இவற்றோடு நவீன நாடக கலைப் பண்புகளையும் ஒன்று திரட்டித் தம்முடன் எடுத்துக்கொண்டு பயணத்தை ஆரம்பித்தவர்கள் தான் இந்த வடலிக் கூத்தர்: முதலில் இலங்கையில் கலைப்பாலம் நிகழ்வுகளில் இவர்கள் கால் பதித்துக் கொள்கிறார்கள். ஒவ்வொரு கலைஞர்களும் தம்மிடையே உள்ள வேறுபாடுகளை மறந்து, ஏற்றத் தாழ்வுகளைத் துறந்து, தனித்துவங்களை உடைத்து கூட்டு வாழ்க்கைக்கு தம்மை அர்ப்பணிக்கலாயினர்.

பஜனை வழிபாடுகளுடன் இவர்களின் ஒவ்வொரு நாளும் தொடங்கும். நாடக ஒத்திகைகள் பக்குவமாக நடைபெற்று முடியும். கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "கலைப்பாலம்" நிகழ்விற்கூடாக இவர்கள் சாதி, சமய, இன மொழி வேறுபாடுகளைத் துறந்து தம் கலை நிகழ்வுகளை மேடையேற்றினர். திருகோணமலை, வவுனியா, அப்புத்தளை, இரத்தினபுரி எனப் பல்வேறு இடங்களிலும், கொழும்பில் பல்வேறு நகரங்களிலும் இவர்களின் கலைப்படைப்புக்கள் இதழ் விரித்து நின்றன.

சத்திய வேள்வி (மயான காண்டம்), ஞான சவுந்தரி, பெண்ணியம் பேசுகிறது, சாகாத மனிதம், ஜெனோவா, ஒற்றுமையே பலம் போன்ற நாடகங்களோடு எம் மண்ணின் இன்றைய நிலையைப் புலப்படுத்தும் வகையில் திடீர் தயாரிப்பு நாடகங்களும் (புத்தளிப்பு நாடகங்கள்) அவ்வப்போது மேடையேற்றப்பட்டன. மலையக தோட்டத் தொழிலாளர்களோடும் இவர்கள் அளவளாவி அவர்களின் இன்னல்களை உள்வாங்கி அதற்கேற்ப கலைப்படைப்புக்களையும் அங்கு மேடையேற்றி மலையக மக்களின் மனங்களில் ஆழமாக ஒட்டிக்கொண்டு விட்டார்கள்,

### திருப்புமுனை

1997 இன் ஒக்ரோபர் 10 ஆம் நாள். கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வடலிக் கூத்தர் ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்திற்கு காத்திருக்கின்றனர். நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குப் பின்னர் பரீஸ் மாநகரம் நோக்கிப் புறப்படவிருக்கும் விமானத்துக்குள் நுழைந்து கொள்கிறார்கள். முகங்களிலெல்லாம் புதியதொரு உற்சாகத்தின் தழும்புகள் படர்ந்து கிடந்தன. ஐரோப்பிய நாடுகளிலும் யாழ். மண்ணின் பெருமையை பறைசாற்றப்போகிறோம் என்ற மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சியில் எல்லோரையும் விட இயக்குநர் அருள்திரு நீ. மரிய சேவியர் அடிகளாரில் ஒருவித திருப்தியைக் காண முடிந்தது. யாழ். நகரின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையல்லவா இது!

விமானம் பறந்துகொண்டிருந்தது.

பல மணி நேர பயணங்களின் முடிவில் பரீஸ் நகர விமான நிலையத்தில் வடலிக்கூத்தர். பரீஸ் திருமறைக் கலாமன்ற உறுப்பினர்கள் இவர்களை வரவேற்கின்றனர். அவர்களில் சிலர் யாழ். திருமறைக் கலாமன்றத்தின் முன்னாள் மூத்த உறுப்பினர்கள்.



வெளிநாட்டில் அரங்கேறிய கலைவடிவங்களில் ஒன்றின் காட்சி இது.

சொற்ப நேரத்தில் வடலிக்கூத்தருடன் வாகனங்கள், சுறுசுறுப்புடன் இயங்கும் பரீஸ் நகரினை ஊடறுத்துச் சென்று கொண்டிருந்தது. இவர்களின் முதல் மேடையேற்றம் ஜேர்மனியில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. பயணக் களைப்புக்களையும் பொருட்படுத்தாமல் அன்றைய தினமே இரவு 9 மணிக்கு ஜேர்மனி நோக்கி வடலிக்கூத்தர் விரைகின்றனர்.

ஒளி வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கும் பரீஸ் நகரின் எல்லைகளைத் தாண்டி பெல்ஜியம் ஊடாக ஜேர்மனி சென்றுகொண்டிருந்தனர்.

### ஜேர்மனியில்

ஜேர்மனி வாழ் மக்கள் இவர்களை மிக அன்போடு வரவேற்று நின்றனர். டட்டண்ட், டோட்முண்ட், யூலிச் போன்ற இடங்களில் வடலிக்கூத்தரின் சாகாத மனிதம், ஜெனோவா, மயான காண்டம் போன்ற நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. ஏ. வி. ஆனந்தனின் (சிற்ப ஜோதி) சிற்பக் கண்காட்சியும் அந்தந்த இடங்களில் நடைபெற்று முடிந்தது.

புலம் பெயர்ந்து வாழும் எம்மவர்களை நீண்ட கால இடைவெளியின் பின்னர் கண்ட பூரிப்பும், கலைப்படைப்புக்களினூடாக தங்கள் மண்ணின் நிலையை பெருமையைப் பேசிப் பார்த்த ஆனந்தமும் மேவிட தம் உறவுகள் உட்பட அனைவரிடமும் வடலிக்கூத்தர் ஒன்றித்துப் போயினர்.

நாடக நிகழ்வுகளில் பார்வையாளர்களின் கை தட்டுதல்கள் கலைஞர்களை உற்சாகமூட்டின. தமிழ் மக்களின் சிதைக்கப்பட்ட வாழ்வுகளைப் புலப்படுத்திய "சாகாத மனிதம்" போன்ற நாடகங்களின் போது மேற்புலத்தில் வாழும் எம்மவர்கள் கண்ணீர் ததும்ப அவற்றைப் பார்வையிட்டமையை காணக்கூடியதாக இருந்தது. ஜேர்மன் இனத்து வெள்ளையர் கூட எம் பாரம்பரியக் கலையில் உள்ள ஆடல்களை, அபிநயங்களை மிகவும் ரசித்தார்கள். நேரிலே வந்து பாராட்டினார்கள்.

சிறுவயதிலேயே புலம் பெயர்ந்து அங்கு சென்ற சிறுவர்கள் இன்று வளர்ந்து இளைஞர் யுவதிகளாக கலைப்படைப்புக்களைப் பார்வையிட்டனர்.

யூலிச் நகரில் கலைஞர்கள் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. திருமறைக்கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் நீ மரியசேவியர் அடிகளுக்குப் பொன்னாடை போர்த்தி "கலைத்தூது" எனப் பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பட்டது.

ஜேர்மன் மண்ணிலிருந்து வடலிக்கூத்தர் விடைபெறும் நேரம் இது. அங்கு வாழும் எம்மவர்கள் சோகை இழந்து நின்றனர். கண்ணீர் மெல்லமெல்ல அரும்பிவரத் தொடங்கியது. இறுதியாக அங்கு வாழ் அனைவருக்கும் வடலிக்கூத்தர் நன்றி தெரிவிக்கின்றனர். ஒருவரை ஒருவர் இறுக அணைத்து முத்தமிட்டுப் பிரியாவிடை பெறுகின்றனர்.

### பரீஸில்

ஜேர்மனியில் இருந்து மீண்டும் மின் விளக்குகளின் ஒளிகளில் குளித்து பரீஸ் நகரின் எல்லைகளை தடவிக் கொண்டு சென்றன வடலிக் கூத்தரின் வாகனங்கள். குளிரின் ஆக்கிரமிப்பில் இருந்து கலைஞர்களின் உடல் நலத்தைப் பாதுகாக்க இயக்குநர் தந்தை வேண்டிய மருந்துகளை வாங்கிக் கொடுத்த வண்ணமே இருக்கின்றார். கலைஞர் மேலும் கலையின் மேலும் அவர் கொண்டுள்ள பற்றுதலின் வெளிப்பாடு இது.

அடுத்தடுத்த நாள்களில் பிரபல்யமான நாடகக் குழு ஒன்றினையும், அவர்களின் நாடக அரங்கினையும் பார்வையிடுவதற்கு வடலிக் கூத்தர் இயக்குநர் தலைமையில் செல்கின்றனர். சாதாரணமாக எவரும் உட்செல்ல முடியாத நாடக அரங்கு அது. இயக்குநரின் தளராத முயற்சியினால் பிரான்ஸ் தேசத்து கலாசார அமைச்சின் அனுமதியுடன் அங்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

"Chateaude Uincenes" என்ற இடத்திலுள்ள 'Theatre dusoleil' (ஆதவன் அரங்கு) என அழைக்கப்படும். இந்த நாடக அரங்க குழுவுக்கு அரியானா என்ற பிரான்ஸ்தேசத்துப் பெண்மணி ஒருவர் பொறுப்பான வராவார். இங்கு மேடையேற்றப்படும் நாடகங்கள் இவருடையவைதான். 65 கலைஞர்களைக் கொண்டு இயங்கும் இந்நாடகக்குழு ஒரு கூட்டு வாழ்வுப் பின்னணியோடு இயங்கி வருகின்றது. இந்த மார்கழி மாதம் மேடையேறவுள்ள மிகப்பெரிய நாடகம் ஒன்றுக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆற்றுகைக்குத் தேவையான சகல அம்சங்களும் அவர்களாலேயே தயாரிக்கப்படுகின்றன. இசைக்கருவிகள், வேடஉடுப்புகள், முகமூடிகள், காலணிகள், திரைச்சீலைகள், மேடையமைப்புகள், காட்சிப் பொருள்கள், ஒப்பனைப் பொருள்கள் எனச் சகலதும் இவர்களின் கைவண்ணத்தில் உருப்பெற்றுக் கொள்கின்றன.

இறுதியாக வடலிக்கூத்தர் அரியானாவைக் கண்டு உரையாடிய பின்னர் அவரின் வேண்டுகோளுக்கு இணங்க தம் பாரம்பரிய கலைவடிவங்களிலிருந்து ஒருசிலவற்றை நிகழ்த்திக் காட்டினர். அக்குழுவின் அனைத்துக் கலைஞர்களும் கண்வெட்டாமல் அதை ரசித்தனர்.

### அரியானாவின் பாராட்டு

அந்த நிகழ்ச்சியின் முடிவில் "தெற்காசிய கலை வடிவங்களில் நாம் ஆர்வம் கொண்டவர்கள். உங்களுடைய இந்த வடிவத்தை இதுவரை நாம் பார்த்ததில்லை. இதன் ஆற்றுகைத் தன்மை எம்மை மிகவும் கவர்ந்தது" என்று குழுவின் தலைவர் அரியானா தெரிவித்தார். தொடர்ந்து தம்முடன் மதிய உணவு அருந்தும்படி அழைத்தனர். கலைஞர் என்ற வரம்பில் அனைவரும் ஒன்றாக ஐக்கியப்பட்டமை இன்னும் நினைவில் நிற்கின்றது.

**-ம.சாம்.பிரதீபன்-**

இன்னுமொரு சந்தர்ப்பத்தில், தற்போது நவீன நாடகத் துறையில் அதிகமாகப் பேசப்படும் மேல்நாட்டு நாடகவியலாளர் பீற்றர் புறூக்என்பவருடைய "TheManWho" என்ற நாடகம் ஒன்றினைப் பார்வையிடுவதற்காக வடலிக்கூத்தர் சென்றனர். பரீட்சார்த்த நாடகங்களை மேடையேற்றும் இந்த அரங்கின் பல வடிவங்களையும் இவர்கள் நுணுக்கமாகப் பார்வையிட்டனர். "பீற்றர் புறூக்கின் நாடகக் கலைஞர்களைச் சந்தித்து அவர்களுடன் நாடக முயற்சிகள் தொடர்பாக உரையாடினர் நாடகக் கலைபற்றி மேலும் மேலும் அறியும் ஆவல் அவர்களிடம் மிகுந்து காணப்பட்டது. மேல்நாட்டு நாடகவியலை இதுவரை பாடத்தில் மாத்திரம் படித்தவர்கள், அதனை செயல் முறையில் காண முடிந்தது.

### நெதர்லாந்தில்

26-10-97 இல் பரீஸ் நகரில் எமது நாடகங்கள் மேடையேற்றப்பட்டதோடு சிற்பக்கண்காட்சியும் இடம் பெற்றது. பரீஸ் நகரிலும் வடலிக்கூத்தருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதோடு அவர்களில் மூத்த கலைஞர் அறுவருக்கு பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப் பட்டது. பின்னர் நெதர்லாந்திலும் மேடையேற்றும்படி இயக்குநருக்கு கிடைத்த அழைப்பின் பெயரில் 27-10-97இல் அங்கும் வடலிக்கூத்தர் தமது ஆற்றுகையை நிகழ்த்தினர்.

பலே, கபிறே, குவிஸ்றி, போல்றூம் மற்றும் பிறேக் போன்ற ஆட்டங்கள் நடைபெற்று வரும் மேல்நாட்டு மேடைகளில் இம்முறை யாழ். கலைஞர்கள் தமது பாதங்களையும் முத்தமிட வைத்துள்ளனர். அடவு கட்டி ஆட்டம் போட்டுள்ளனர். எம் மண்ணின் ஆட்ட முறைகளுக்கும் ஒரு கட்டியம் கூறியுள்ளனர். கூத்தாடிக்காட்டி ஐரோப்பியரை குதூகலிக்க வைத்துள்ளனர். நமது மண்ணின் இன்றைய நிலைமையை நாடகமாடிக் காட்டி அவர்களைச் சிந்திக்க வைத்தனர்.

ஐரோப்பிய கலைப்பயணத்தின இறுதி நாள், 29-10-97 ஆகும். பிரான்ஸ் தேசத்து அன்பு நெஞ்சங்களின் பாசப் பிடிப்பிலிருந்து பிரியாவிடை பெறும் நேரம். இரவு 11 மணி. "ஓர்லி" விமானநிலையத்திலிருந்து கொழும்பு நோக்கி விமானம் பறக்கின்றது. கலைப் பயணத்தினை வெற்றியுடன் முடித்த திருப்தியில் தாய்நாட்டு நினைவுகளோடு வடலிக் கூத்தர் விமானத்தில் அயர்ந்தனர்.

ஈழத் தமிழர்களின் கலை வழி இன்னும் ஒருபடி வளர்ச்சி பெற்றாயிற்று. ஈழத்துத் தமிழ் நாடக வரலாற்றில் புதிய பக்கமொன்று எழுதப்பட்டாயிற்று. யாழ் மண்ணின் பெருமை ஐரோப்பிய நாடுகளிலும் கொடியேறியது என்று செம்மண் புழுதிகளெல்லாம் குதூகலிக்கின்றன. எங்கள் பனைகளும் வடலிகளும் ஒருமுறை தலைநிமிர்த்திக் கொள்கின்றன.

இந்தப் பெருமைகள் அனைத்தும் "கலைவழி இறைபணி" என்ற மகுட வாக்கோடு இவர்களை வளர்த்து வரும் திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் நீ மரியசேவியர் அடிகளாரையே சாரும். இன்று நேற்றல்ல 35 ஆண்டுகளாக இம் மண்ணில் கலைப்பணியாற்றி வரும் அடிகளார் இம் மண்ணின் கலைக் குரவர். தமிழ் மக்களின் துன்ப துயரங்கள் மத்தியிலும், இன்னல் இடிபாடுகளிடையேயும் தமது பாரம்பரிய கலைவடிவங்களையும் புதுமை புகுத்தப்பட்ட நவீன கலை வடிவங்களையும் வளர்த்து வருகிறார் அவர்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வெள்ளம்

எல்லோராலும் அறஞ் செய்ய இயலுமா என்ற கேள்வி பலரிடம் எழுகிறது. எனது உழைப்பு எனக்கே போதாது; இதற்கிடையில் அறம் செய்ய முடியுமா என நினைக்கலாமா?

அறஞ் செய்ய நேரமும் இல்லை; கோடிக்கணக்காய்ப் பணமும் இல்லை; உடல் வலிமையும் உதவியும் இல்லை என்றெல்லாம் பலர் சாட்டுகளைத் தேடுகிறார்கள்.

நோய் நொடி வாட்டுகின்றது எனது துன்பத்தையே தாங்க இயலவில்லை. அடுத்தவருக்காக கவலைப்பட என்னால் இயலுமா என நினைப்பவர்களும் இருக்கிறார்கள்;

இவை எல்லாம் பிழையான நினைப்புகள் என்கிறார் வள்ளுவர். உன்னால் இயலாததைச் செய்ய வேண்டாம். தண்ணீரில் தத்தளிக்கும் எறும்பைக் கரையேற்றிவிடு அது போதும். இப்படிச் சிறுகச் செய்யப்பழகு. இயலுமானதைச்செய். ஓயாதுசெய். இடைவிடாதே. செல்லுமிடமெல்லாம் செய்.

இல்லறவழி நின்றால் பொருளைக் கொடு. துறவற வழி நின்றால் அருளைக் கொடு. எவ்வழி நின்றாலும் அன்பைக் கொடு. மனதாலும் செய். உடலாலும் செய்.

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்.

—0033

அறத்தைச் செய் என்றுவிட்டால் போதுமா? எது அறம் எனச் சொல்லாமல் விடுவதா?

நடிப்பு அறமாகாது. புகழ் விரும்பும் கொடைகள் அறமாவதில்லை. ஊர் உலகம் அறிய விளம்பரம் செய்து பிரபல்யமடையும் எண்ணத்துடன் செய்வதெல்லாம் அறமல்ல. இவ்வாறு தெளிவுபட விளக்கியவர் வள்ளுவர்.

மனமது தீயதாக — எண்ணங்கள் கெடுதலாக — நீறுபூத்த நெருப்பாக உள்ளே களங்கம் குடியிருக்க — வெளியே நாலுபேர் புகழ வாழும் போலி வாழ்வில் அறம் பலிக்காது. வேடம் என்றோ ஒரு நாள் கலைந்தே தீரும், சுயரூபம் உலகின் முன் வெளிப்படும்.

மனம் மாசில்லாமல் தூயதாக இருந்துவிட்டால் அது ஒன்றே போதும். நீ செய்வதெல்லாம் அறமாகிவிடும். பிற அறங்களைத் தேடிச் செய்ய வேண்டிய அவசியம் இருக்காது.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற

(அறன் வலியுறுத்தல்) —0034

-அம்பிகைபாகன்-

# இந்த வார இராசி பலன்

(13 - 12 - 1997 முதல் 19 - 12 - 1997 வரை)

| | | | |
|---|---|---|---|
| சனி | | சந் | |
| கே | இராசிச் சக்கரம் | | |
| செ வி வெ | | | ரா |
| | சூ* புத | | |

மாற்றம்!

அரசியலில் கீழ்-மேல் நிலைகள், புதிய கட்டுப்பாடுகள் - மாற்றங்கள் வரும் - தேர்தல் சூடுசர்வசாதாரணமாகும். சீதோஷ்ண நிலை மாறுபடும். வெள்ளப்பெருக்கு வரலாம். மக்கள் விழிப்பாக இருந்து தெய்வ வழிபாடுகளைச் செய்து கொள்ளவும்.

இந்தியாவில் அரசபீடமாற்றம் - தேர்தலால்வரும். புதியதலைவர்கள் உருவாகுவார்கள். காங்கிரஸ் ஆட்சிபீடத்தைப் பிடிக்கச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். 1998இல் நடைபெறப்போகும் மாற்றங்களுக்கு பல புதிய நிகழ்வுகள் தற்பொழுது ஏற்படும். சில பழைய தலைவர்கள் விலக்கப்படவோ அல்லது கொலைசெய்யப்படவோ இடம் உண்டு.

உலகில் - கிழக்கு நாடுகளின் போக்கு மேற்கு நாடுகளுக்குப் பிடிக்காது. ஐ.நா. ஒரு தலைப்பட்சமாக நடந்துகொள்ளும். மத்தியகிழக்கு நாடுகளில் சமயப்போர் நிகழும். புதிய அழிவுகளும் இயற்கை - செயற்கை முறையில் வர இடம் உண்டு. அமெரிக்கத் தலைவருக்கு நல்லதல்ல - இங்கிலாந்து அரசபீடத்தவர்களுக்கு எதிர்ப்புக்கள் அதிகரிக்கும்.

**மேடம்:** நீங்கள் எந்த விஷயத்திற்கும் மனச் சோர்வு அடையக் கூடாது. புதிய மாற்றங்கள், திட்டங்கள் தீட்டுங்கள். அடுத்து வரும் வருஷத்திலிருந்து நன்மைகள் முன்னேற்றங்களுக்கு இப்பொழுதே ஆரம்பக்கல் போடுவீர்கள். எந்த விஷயங்களையும் தொழில் ஸ்தானத்தில் சாதிக்கும் திறமையுள்ளவர் நீங்கள். குடும்பத்தில் சலசலப்பு, செலவு, அலைச்சல், பிடிவாதப் போக்குகள் இருக்கச் செய்யும். உங்களிடம் இனஜனங்களில் சிலர் உதவி நாடி வருவர். எதிர்பாலாருடன் அபிப்பிராயபேதங்கள் ஏற்படும். மறைகாலமாகையால் சனி, கைகால் விறைப்பு எதிர்ப்புக்கள் உருவாகும். எதிர்ப்பாலாரின் வேண்டுகோளாலும் உங்கள் ஆசையாலும் தவறுகள் நடக்கலாம். அவதானமாகச் செயற்படவும். படிப்படியாகக் காரியங்கள் கைகூடிவரும். புகழும் வரும். அதிக செலவும் வரும். பாவபுண்ணியத்துக்கு அஞ்சாத நீங்கள் மார்கழி மாதத்தில் அவதானமாக இருத்தல்வேண்டும். வியாபாரத்திலும், பொதுக் காரியங்களிலும் ஈடுபாடு உள்ளவர்கள் புதிய திட்டங்களால் நன்மைகள் அடைய இடம் உண்டு. பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

★ அதிர்ஷ்ட நாள்: வியாழன், வெள்ளி.

**கடகம்:** எல்லோருடனும் அன்பும், பண்பும் கொண்டு பழகிவரும் இயல்புள்ள நீங்கள், பொருள் விஷயங்களில் அவசரப்பட்டு சில எதிர்ப்புக்களைச் சம்பாதித்துக்கொள்வீர்கள். இவ்வுலகில் நல்லவர்களாக வாழவேண்டுமாயின் எதையும் தாங்கி நடக்கத் தெரியவேண்டும். பலருடைய ஏச்சும், பேச்சும் கேட்டுத்தான் வாழவேண்டும். தொழில் ஸ்தானத்தில் புதிய அலைகள் வீசும். நன்மைகளை எதிர்பார்க்கலாம். வயிறு, கண் ஆகிய இடங்களில் பாதிப்புக்கள் வரலாம். சிலருக்கு இடமாற்றங்கள் அல்லது தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள்வர இடம் உண்டு.

★ அதிர்ஷ்ட நாள், - வெள்ளி.

## சோதிட சஞ்சீவி

கொடுக்கும். அடிக்கடி இக்காலங்களில் சுடுநீர் பாவித்து வரவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.

**இடபம்:** உங்களுக்கு பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதையாக இருக்கும். நீங்கள் ஒருவருக்கு உதவி செய்யப் போய் அதனால் இழப்புக்களையும் சந்தித்து வீண் குற்றங்களையும் கேட்பீர்கள். அமைதியாக இருக்க முயலவும். தொழில் ஸ்தானத்தில் சுய திட்டப்படி நடவுங்கள். நாலுபேரின் அபிப்பிராயப்படி நடவாதீர்கள். விஷபீடைகள், எதிர்பாராத சம்பவங்கள், அடிக்கடி அலைச்சல் எதிர்ப்பாலாரால் அதிக யோசனைகள் என்பன கொடுக்கும். சந்தர்ப்பங்கள் அறிந்து செயற்படவும். அவசரத்தாலும், திடீர் உணர்ச்சியாலும், விதிவழியாலும் தவறுகள் நடக்கும். பலன்கள் காணப்படுவதனால் தெய்வ வழிபாட்டுடன் செயற்பட்டு வரவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.

**மிதுனம்:** ஏன் தவறுகள் நடக்கின்றன? ஆசையே துன்பத்திற்குக் காரணம். மனிதம் ஆசைப்படாமல் இருந்தால் துன்பங்கள் [illegible] லவா? மறை[illegible]

## மகாதேவா ஜோதிடம்


நல்லூர்

**சிங்கம்:** எங்கும் எதற்கும் நீங்கள் முன்னுக்கு நிற்பீர்கள். உங்களை புறமுதுகில் குத்தும் சிலரின் செயற்பாடுகளினால் உங்கள் முன்னேற்றங்களில் தடை, தாமதங்கள் வரச்செய்யும். ஆயினும் உங்கள் விடாமுயற்சியால் வெற்றி வரும். தொடர்ந்து முன்னேற்றகரமான முயற்சிகளைச் செய்துகொண்டு இருக்கவும். தொழில் ஸ்தானத்தில் நல்ல வரவேற்பு இருக்கும். [illegible]

(X ஆம் பக்கம் பார்க்க)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 28



சொற்சிலம்பம் இல. 28
சஞ்சீவி,
861, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்

பெயர் ............................................

விலாசம் ............................................

............................................

------------ இங்கே வெட்டுக ------------

முடிவு திகதி: 19 - 12 - 1997

**இடமிருந்து வலம்**

1. நடிப்பு. 4. பிரி. 6. தாடையில் வளர்வது. 7 சரிக்கட்டுவது. 10. பெறுபேறு. 11. நட்புக்கு எதிர் 12 அற்பமான நிலை 14. சர்ப்பம் பின்னால் இறந்துவிட்டது. 15. பட்டு நூல் 16. இந்த வழியே நல்லது. 18. இப்போது இங்கு பொழிவது இது. 20. களவிலிருந்து காப்பாற்ற இதுதேவை. 22. செல்வம். 23. மல்லிகைக்கு இப்படியும் பெயர். 24. இறந்துபோ. 25. பதில்.

**மேலிருந்து கீழ்**

1. கால்முதல் குடுமி வரை. 2. தாழி. 3. சுகம். 4. காற்று. 5. சேரி. 8. வேகமாக ஓடக்கூடிய விலங்கு. 9. நெருப்பின்றி வராது. 10. மரத்தை அரிந்து பெறுவது. 13. அரசு விதிப்பது 14. சிவனின் மனைவி 16. முதல் இந்தியப் பிரதமர். 17. பயந்தவன் 18. பிறக்கும்போது இருக்காது! பிறகு வருவது. 19. நெருங்கி. 20. உடலைத் தாங்கி நிற்பது. 21. நோவு.

## சொற்சிலம்பம் இல. 26 விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சாதகம். 4. பசளி. 6. கரடி. 7. தண்டு 8. சகுந்தலை. 10. திசை. 12. துடுப்பு. 14. நரை 15. பாரதி. 17. பாகு. 19. வியாதி. 21. தகவின்மை. 23. கண். 24. சாலை. 25. செம்மை.

**மேலிருந்து கீழ்**

1. சாகசம். 2. தரகு. 3. கடிந்துரை. 4. பண். 5. சடுதி. 7. தலை. 9. தடு. 11. வசதை. 13. புரவி. 14. நருக. 16. தியாகம். 17. பாதம். 18. பன்மை. 20. தின்மை. 22. விசா.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதலாம் பரிசு:- க. பிருந்தாபன், குறும்பன்வளவு, ஏழாலைமேற்கு.

★ இரண்டாம் பரிசு:- ஜே. ஜெனிசிராஜிகா, சென். ஜேம்ஸ், இளவாலை.

★ மூன்றாம் பரிசு:- நீ. மரியகொறற்றி, துரையன் தோட்டம் நெல்லியடி.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி பணியாளர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | | |
|---|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. | 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. | 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. | 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம். 27 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "விருது"....

(V ஆம் பக்கத் தொடர்)

தான் உரியதோ! இல்லை... அப்பெருமையை எம்நாட்டவர்களால் இல்லை...சிங்களவரால் ஜீரணிக்கமுடியவில்லை.

"ஒரு பிள்ளை பாடசாலைக்கு ஏதாவது துறையில் புகழீட்டிக்கொடுப்பதான ஆவணம் ஐம்பது வருடங்களுக்குப் பின்னர் தான் உணரப்படுகிறது. அதுவரை மறக்கப்படுகிறது. கமலியைப் பொறுத்தவரை, அவள் ஜப்பான் நாட்டுக் குழந்தை" என்றார் என்னைத் தேற்றிய எமது இல்ல ஆசிரியர்.

"இப்பொழுது கமலி பேசுவார்" என்றார் அதிபர்.

"எனது அழுகைக்கும், ஆனந்தத்திற்கும், விருதிற்கும், ஜப்பானுக்கும்காரணம் என்னருகில் இருக்கும் மயூரியே. தும்புத்தடியாய் இருந்த என்னைத் தூக்கி வைத்தவள் மயூரி. என்னால் கூட்டமுடிந்தது. அவளால் ஊட்டமுடிந்தது. அந்தத் தும்புத்தடியில் இருக்கிற தெய்வீகம் எனக்கு மட்டும் தான் புரியும். நான் தினமும் கூட்டிய அந்தத் தும்புத்தடியை நான் மயூரியிடம் ஒப்படைக்கின்றேன். ஏனென்றால் அவள் அடுத்த வருடம் இப்போட்டியில் இந்த நாட்டிற்குப்பெருமை தேடித் தருவாள்! இது கமலியின் ஆசை" என்றுகூறி மயூரியைப் பார்த்தேன். மயூரி மேடையிலிருந்து கீழிறங்கி நடந்து சென்று கொண்டிருந்தாள். அவளை என்னால் தடுக்கமுடியவில்லை "மயூரி! மயூரி!" என அழைத்தபடி நானும் மேடையிலிருந்து கீழிறங்கி அவளை நோக்கியபடி பின்தொடர்ந்து சென்றேன். மயூரி எங்குமே போகவில்லை. எங்கள் வகுப்புக்கே சென்று கொண்டிருந்தாள். அந்த மூலையில் நானிருந்த மேசையில்தலையைவைத்து, ஆம்...விம்மி, விம்மி அழுது கொண்டிருந்தாள் மயூரி. ஓ! தும்புத்தடி முறிக்கப்பட்டிருந்தது... தான் யாருக்குச் சொல்லி அழுவேன்?

மயூரியை தூக்கி அணைத்துக் கொண்டேன்.

தும்புத்தடியைத் தூக்கியவாறு 'கமலி! கமலி, மயூரி...' என அதிபர் அழைத்தபோது தான் அது முறிக்கப்பட்ட உண்மை தெரிந்தது... அந்த மாணவன் கோபத்தினாலோ பொறாமையினாலோ அதைச்செய்யவில்லை, எனது பிரிவை அவனால் தாங்கமுடியவில்லை. அதுதான் அவனும் அழுதுகொண்டிருந்தான். அவன் வேறுயாருமல்ல! என்னுடன் சேர்ந்து குப்பையள்ளும், எழுதவே தெரியாத, வறுமையோடு வாழுகின்ற ஏழாம் ஆண்டு மாணவன் விருத்தாசலம். இவர்களுக்கு யார்துணை? அதற்கான விடையே எனது விருதிற்கான வினா! ★

# கொலரா...

(III ஆம் பக்கத் தொடர்)

கணிப்பீடு செய்து வழங்குதல் வேண்டும்.

மருந்துகள் தேவைப்படும் பட்சத்தில் மட்டும் வைத்திய ஆலோசனைப்படி உள்ளெடுக்க வேண்டும்.

நோய் மற்றவர்களுக்கும் பரவுவதை தடுக்க:-

★ நோயாளியைத் தனிமைப்படுத்தல் வேண்டும்.

★ நோயாளியின் அழுக்கடைந்த உடைகளை தொற்றுநீக்கியில் இட்ட பின்னர் துவைத்தல் வேண்டும்.

★ வெளியேறும் மலம், வாந்தி, மற்றும் கழிவுகளை தொற்று நீக்கிய பின் அழித்தல் வேண்டும்.

★ பராமரிப்பு செய்பவர் தொற்றுநீக்கி மற்றும் சவர்க்காரமிட்டு கைகளைக் கழுவுதல் வேண்டும்.

★பொதுச்சுகாதார பரிசோதகரின் கவனத்திற்கு விடயத்தைக் கொண்டு வருதல் வேண்டும்.

★ நோய் பரவும் பகுதிகளில் உள்ள வைத்திய சாலைகளில் தேவையான மருந்துவகைகளை ஆயத்த நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

★ நோய்பரவியுள்ள பகுதிகளில் உள்ள உணவுவிடுதிகள், சிற்றுண்டி விற்பனை நிலையங்களில் சுகாதார பரிசோதனைகள் கடுமையாக மேற்கொள்ளப்படவேண்டும். தேவையேற்படின் மூடிவிடவும் முடியும். அத்துடன் அப்பகுதியில் உள்ள தெருவோர உணவு விற்பனை நிலையங்களை மூடிவிடுதலும் நலம்.

★ பதப்படுத்திய உணவு வகைகளையே எப்போதும் கொள்வனவு செய்ய வேண்டும்.

★ நீர் சேமிப்பு இடங்கள், விநியோக முறைகளை கண்காணித்தல் சகல கிணறுகளுக்கும் குளோரின் இடல்.

★ குடிநீரை கொதிக்க வைத்து அருந்துமாறு அறிவுறுத்தல்.

★ நோய்பரவும் பகுதிகளில் உள்ள சனசமூகநிலையங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், மற்றும் நிறுவனங்கள் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

★ நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் சுகாதார உத்தியோகத்தர்கள் மக்கள்—நிறுவனங்கள் இணைந்து ஒரு குழுவாக செயலாற்றல்.

வருமுன்காப்பது எவ்வாறு?

குடாநாட்டில் தற்போது நிலவும் நலிவுற்ற பொருளாதார—சமூகசூழல், சுகாதார, வைத்திய சேவைகளில் உள்ள மருந்து, ஆளணி தட்டுப்பாடு ஆகியவற்றுக்கு நடுவில் இந்த நோய் தலையெடுத்தால் அது காட்டாற்று வெள்ளம்போல் மரண பேரழிவுக்கு இட்டுச் செல்லும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அடிப்படையில் மூன்று எளிய வழி முறைகள் மூலம் நோய் நம்மை நெருங்குவதை தவிர்த்துக்கொள்ளலாம்.

1. உணவைச் சமைத்தல்.
2. நீரைக் கொதிக்கவைத்தல்.
3. கைகளைக் கழுவுதல்.

இவற்றை விவரமாக ஆராய்ந்து பார்ப்போம்.

## உணவு

★ உங்கள் உணவை சமைத்தபின் உண்ணுங்கள்.

★ நன்குசமைத்த இறைச்சி, மீன், ஓடுள்ள கடல் உணவுகள் மரக்கறிகளை உண்ணவும்.

★ உணவு சூடாக உள்ள போதே உண்ணுங்கள்.

★ நேரம் தாமதித்து உண்பதானால் அதற்கு முன்பு உணவை மீளவும் நன்கு சூடாக்குங்கள்.

★ பச்சை உணவுகளும், சமைத்த உணவுகளும் கலப்பதை தவிர்க்கவும்.

★ உணவை தயாரிக்க, பரிமாற முன்பு கைகளை நன்கு சவர்க்காரமிட்டுக் கழுவவும்.

★ உணவை ஈ மொய்க்காது மூடிவையுங்கள்.

★ உணவை தயாரிக்கும், பரிமாறும் பாத்திரங்களை நன்கு சவர்க்காரம் அல்லது வேறு அழுக்குநீக்கிகள் இட்டு கழுவவும்.

★ உணவை வைத்து வெட்டும் பலகை, நிலம், சாக்கு மற்றும் சமையலறை என்பவற்றை சவர்க்கார நீர் கொண்டு கழுவவும்.

★ உண்பதற்கு முன்பு புதிதாக தோல் நீங்கிய பழவகை

(XI ஆம் பக்கம் பார்க்க)

# இந்த வார இராசி....

(VIII ஆம் பக்கத் தொடர்)

களும் நல்லதைச் செய்வார்கள். மாற்றங்கள் சகஜமாகும் யோசனை கவலைகள் —உடல்நிலைப்பாதிப்பு — மூலநோகம்—கைகால் உளைவுகள் என்பன இருக்கத்தான் செய்யும். அடுத்துவரும் காலங்களில் நல்லபலன்கள் நடக்கும். தெய்வவழிபாடும், சனீஸ்வரனின் பிரீதியும் தாக்கங்களைக் குறைத்துக் கொண்டிருக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்:- புதன், வியாழன்.

**கன்னி:** உங்களுக்கு செல்வாக்கான காலமாகும். எதையும் எதிர்கொண்டு காரியமாற்றுவதில் சூரர்கள் பிறர் சொல்வதை நம்பாதீர்கள். உங்கள் கருமத்திலேயே கண்ணாக இருந்து செயற்படுவதனால் பலகாரியங்களை வெற்றி கரமாக நிலை நாட்டுவீர்கள் தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி பொத்திக்கொண்டு வரும் கோபத்தை கொஞ்சம் நிதானப்படுத்திக் கொள்ளுங்கள். அயலவர்கள் என்னசெய்து விடுவர்? ஆத்திரப்பட்ட நெஞ்சங்களில் அவதிகள்தான் மிஞ்சும். கைகால் விறைப்பு சிலருக்கு வரும். மழை, காற்றுக் காலமாகையால் அவதானமாக இருக்கவும். எதிர்ப்பாலாரால் அடிக்கடி செலவுகள் ஏற்படும். புத்திரராலோ அல்லது நண்பர்களாலோ அலைச்சல் இருக்கத்தான் செய்யும்.

★ அதிர்ஷ்ட நாள்:- புதன், வெள்ளி.

**துலாம்:** அதிக போட்டிகள் ஆபத்தில் முடியும் உள்ளதை, தெரிந்ததை வெளிப்படையாக பேசுகிறீர்களாம். அதனால் வீணாக எதிர்ப்புக்களைச் சம்பாதித்துக் கொள்ளுகின்றீர்கள், வாழ்ந்தாலும் பேசும் — தாழ்ந்தாலும் ஏசும் இவ்வுலகில் நிதானத்துடன் நடந்துகொள்ளுங்கள். தொழில் ஸ்தானத்தில் குருவிகள் நுழைவது மாதிரி சிலர் துன்பங்களையும், வேண்டாத பழிச்சொற்களையும் உங்களைப்பற்றி புகுத்தி பல கஷ்டங்களைத் தருவார்கள். கண்ணில் நோ ஏற்படும். பொருள் விஷயத்தில் பலர் உங்களை ஏமாற்ற முனையலாம் தூரதேசப் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்: உங்களுடன் ஒட்டி உறவாடுபவர்களை எட்ட வையுங்கள்; அல்லதுநீங்கள் விலகிச் செல்லுங்கள். அவர்களால் கஷ்டங்கள் ஏற்படலாம்.

★ அதிர்ஷ்ட நாள்:- புதன், வெள்ளி.

**விருச்சிகம்:** நீங்கள் எதிர்நீச்சலடித்தே முன்னேறும் இயல்புள்ளவர்கள். படபடப்பு விடாமுயற்சி, புத்தி சாதுரியம் என்பனவற்றால் படிப்படியானமுன்னேற்றத்தை அடைய இடம் உண்டு. தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் மாற்றங்களைச் செய்ய விரும்புவீர்கள். சமுதாயத்தில் பலதரப்பட்டவர்களின் அபிப்பிராயத்திற்கு அடிக்கடி ஆளாகுவீர்கள் பயப்படாமல் தொடரவும் காய்த்த மரத்திற்குத்தான் கல்லெறி விழும் என்பதற்கிணங்க உங்கள் அபிப்பிராயத்தையும், செயற்பாடுகளையும் சிலர் எப்பொழுதும் கவனித்தபடியே இருப்பார்கள். உஷ்ணபீடைகள் உடம்பில் கொடுக்கும். சில விஷயங்களில் கலகம் பிறந்து நியாயம் பிறக்கும். கேட்டை நட்ஷத்திரத்திரகாரர் கொஞ்சம் கவனமாக இருந்தால் நன்று.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

**தனுசு:** உங்களுக்கு மனப் போராட்டங்கள் ஏற்படும். இருக்கும் இடத்தில் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டு பல கஷ்டங்கள் கொடுக்கும். மறைமுக எதிராளிகளால் சில வேண்டாத தொல்லைகள் கொடுக்கலாம். சுயகௌரவம் —உறுதிப்பாடு — விடாத போராட்ட உணர்வுகளால் அடிக்கடி உந்தப்படும். நீங்கள் தொழில் ஸ்தானத்தில் பொதுவில் அவதானமாக இருத்தல் வேண்டும். இம் மாற்றங்கள் நன்மைகள் கொடுக்கும். சளி, முட்டு, கைகால் விறைப்பு வரலாம். எதிர்ப்பாலரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகாமல் பார்த்துக்கொள்ளவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.

**மகரம்:** உங்களுக்கு எதிர்பாராத விதிவசப்பட்ட பலன்கள் நடக்கலாம். சந்தர்ப்பங்கள் அறிந்து செயற்படுங்கள். தொழில் ஸ்தானத்தில் குறை, குற்றங்கள் கேட்க நேரிடும். மேலதிகாரிகளுடன் கொஞ்சம் பணிவாக நடந்து கொள்ளுங்கள். அதனால் பல அனுகூலங்கள் ஏற்படும். சளி, சலம். இரத்தம் சம்பந்தமான நோய்களால் வருந்த இடம் உண்டு திடீர் கோபம் —உணர்வுகளால் வீண் பிரச்சினைகள் கொடுக்க இடம் உண்டு சகோதரங்களுக்காக ஓடியாடித் திரிய நேரிடும். குடும்பத்தில் கலகலப்புக்கள் காணப்படும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்.

**கும்பம்:** ஒருவரை பொருளைக் கொண்டோ அல்லது அவரது பதவி, பணத்தைக் கொண்டோ நிறைபோட முடியாது. எல்லாவற்றையும் விட அவரது அருள் செறிந்த தெய்வீகநிலை வேலானது. அதை எல்லோராலும் அறியமுடியாது. அதேபோன்ற நிலையில் உள்ளடக்கமாக நீங்கள் இருப்பீர்கள் தொழில் ஸ்தானத்தில் நன்மை, தீமை கலந்த பலன்கள் நடக்கும். கைகால் விறைப்பு—குடல் இரத்தசம்பந்தமான பீடைகள் கொடுக்கும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். எதிராளிகளாலே, போட்டி வழக்குகளாலோ, உங்களை வெல்ல முடியாது தூரதேசச் செய்திகள் ஆறுதல் தரும். ஏழைகளுக்குத்தானம் கொடுக்கவும்.

★ அதிர்ஷ்ட நாள் :- திங்கள் வியாழன்.

**மீனம்:** உங்களுக்கு கலகம் பிறந்து நியாயம் பிறக்கும். நாளும் கோளும் என்ன் செய்யும். நாதன் நம்மில் இருக்கையில்; எதையும் எதிர்கொண்டு சரிபிழைகாண்போம். கிரகங்களால் சுற்றிவளைக்கப்பட்டிருக்கிறீர்கள். சற்று நிதானத்துடன் போகவேண்டும். கொடுக்கல் வாங்கலிலும் உடல் நிலைமாற்றங்களிலும் தொழில் ஸ்தானத்திலும் நிதானத்துடன் இருக்கவும். குல தெய்வவழிபாடு முக்கியமாகும் அவசரப்பட்டு இடமாற்றங்களைச் செய்யவேண்டாம். தூரதேசத்துச் செய்திகள் ஓரளவு ஆறுதல்தரும். கவலையைக் குறைக்க தெய்வ வழிபாடுகளைச் செய்துவரவும். ஏழைகளுக்கு தானங்கள் கொடுத்து வரவும். பொருள்களை அவதானமாக வைத்திருக்கவும். தெற்கு வடகிழக்கு திசைகளில் செல்லும் போது அவதானமாக இருக்கவும்.

★ அதிர்ஷடநாள்:-திங்கள்.

# வயிறு கோபம்.....

(III ஆம் பக்கத் தொடர்)

புண்ணில் இரத்தக்கசிவு உண்டென்பதைக் காட்டும்.

இப்படி ஆளுக்கு ஆள் வேறுபடும் அறிகுறிகள் சாதாரண சமிபாடின்மையிலிருந்து வயிற்று வலிவரை நீண்ட நாள் நிலைத்தால் வைத்தியரை அணுகுவது சிறந்தது.

குடற்புண்கள் ஏற்படுவதற்கு சில வகைக் கிருமிகளின் தாக்கமும் காரணமாகிறது. அதைத்தவிர 'அஸ்பிரின்', 'இன்டோசிட்' போன்ற மருந்துகளை வைத்திய ஆலோசனையின்றி கண்டபடி பாவித்தல், மற்றும் உள நெருக்கீடு. அவதி, உணர்ச்சிக்கொந்தளிப்புகள், புகைத்தல், ஒழுங்கற்ற உணவுமுறைகள், மதுப்பாவனை போன்ற காரணிகளும் புண் உருவாக உதவுகின்றன. இரத்தவகை "O" உள்ளவர்களில் "அல்சர்" இன் தாக்கம் அதிகளவில் ஏற்படுகிறது:

"உங்களுக்கு வேறை சோதனை ஏதானும் செய்தவையே?"

"ஓம், வயித்துக்குள்ளை குழாய் விட்டுப் பார்த்தவை"

கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை. வயிற்றுப்புண்ணுக்கு வளையக்கூடிய மெல்லிய நீண்ட குழாய் வில்லைகள் கண்ணாடிகளுடன் தேவை. இருண்ட குடல் மற்றும் இரைப்பையின்உட்புறங்களை அந்தக்குழாயின் முனையிலுள்ளகுமிழ் ஒளியூட்ட, மறுமுனையில் மருத்துவர் கண் வைத்து உணவுக்கால்வாய்ச் சுவரை கவனமாக ஆராய்வார். குடலில் புண் இருக்குமிடத்தை — புண்ணின் தன்மையை— அறிவார்.

"பயமாயிருக்கேல்லையே"

"பயப்பட ஒண்டுமில்லை. காலமை சாப்பிடாமத் தண்ணிகுடிக்காம வெறும் வயித்தோட உள்ளுக்குள்ள போனன். வாய்க்குள்ள மருந்து பூசி, குழாய் நுனியிலும் பூசி, ஒரு சின்ன குழாயை கடிக்கத்தந்து அதனூடாக மெல்லித் தொண்டைக்குள்ள இந்தக் குழாயைவிட்டு விழுங்கச் சொன்னார்கள். ஒன்றும் யோசிக்காமல் விழுங்க உள்ளை இறங்கிச்சுது.



ஆனால் ஓங்காளிச்சுது. உவள் அவிக்கிற புட்டை விழுங்குற எனக்கு அது பெரிசில்லை. உள்ளை பாத்திட்டு புண் இருக்கு எண்டிச்சினம். வெளியில் குழாயை எடுத்து அனுப்பினாப்பிறகும் 2 மணித்தியாலம் தண்ணி சாப்பாடு எடுக்கக்கூடாதெண்டிச்சினம். சிம்பிள் சிதம்பரம் சிம்பிள்!"

"மருந்து என்னமாதிரி?"

"குளிசை புண் மாற — அமிலச் சுரப்பைக் குறைக்க— கிருமிகளை கொல்ல—தந்தவை."

"மாஸ்ரர் அதை ஒரு துண்டிலை எழுதித் தாங்கோவன். கடையிலை வேண்டி நானும் போட்டுப்பாப்பம்...."

"பொறுங்கோ ... குஞ்சு இஞ்சை வா! உவள் என்ரை மூத்தது. மெடிசின் படிக்குது. சொல்லணை மாமாவுக்கு."

"கடையிலை வேண்டிப் போடுறதுக்கு இதென்ன வெத்திலையே மாமா? தகுந்த வைத்திய ஆலோசனை இல்லாமல் — நோயைத் தீர்மானிக்காமல் — மருந்துக்களை கண்டபடி பாவிப்பது உடலுக்கு திமைதான் தரும். அதோடு தகுந்த சிகிச்சை பெறாவிட்டால் சிலவேளை இரைப்பைக் குடல் சுவர்கள் தொடர்ந்து அரிக்கப்பட்டு ஓட்டை விழலாம், அது அவசர சிகிச்சை தேவைப்படும் நிலையாகும்"

"தங்கச்சி இந்தப் போத்திலை உள்ளுக்குள்ளை எடுத்துவை. சரி. மாஸ்ரர் நான் வாறன்."

"உங்களுக்கேன் உந்த வேலை? வீண் செலவு!"

சிதம்பரம் போய் விட்டார்.

"என்னப்பா அது பேப்பரிலை சுத்தி சிதம்பரம் வைச்சுட்டுப் போகுது. என்னமாவே?" — மாஸ்ரர் கேட்டார்.

"இல்லையப்பா, மிளகாய்த்தூள். அவர் மிளகாய்த் தோட்டம் வைத்திருக்கிற ரெல்லே"பவளம் சொன்னாள்

கார உணவு வேதனை தரலாம்; புகைத்தல் புண்மாறுவதை தடுக்கும். ஓர் அமைதியான — ஒழுங்கமைந்த — வாழ்க்கை, உணவு ஒழுங்குமுறைகள் இவை மூலம் வயிற்றுப்புண் வருவதை தடுக்கலாமே! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமயத்தை வென்ற....

(VI ஆம் பக்கத் தொடர்)
எனினும் ஹோல் போன்ற அனுபவமிக்க பல மலை மன்னர்கள் கூட திணறித் தான் போனார்கள். இவரை இழுத்துப்பறிக்காத குறையாக முகாமுக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள். ஒருவரின் கண்பார்வை பறி போய்இருந்தமை பரிதாபத்துக்குரியது.

11ஆம் திகதி விடியல் மிகச் சோகமாக இருந்தது. பலர் முகாம் திரும்பவில்லை தேடித் துணிந்து ஏறிப்போன வர்களை காணவில்லை. குழுத்தலைவர்கள் கூட கண்ணில் படவில்லை. ஹோல் என்ன ஆனான் எனப் புரியவில்லை. நிச்சயம் மேலே எல்லாரிடமும் ஒட்சிசன் தீர்ந்து போயிருக்கும். விழுந்தால் — கீழே கிடந்தால் — பனிப்படை ஆளை மூடிவிடும்; உடல் விறைத்து விடும். மேலே திரும்பாமல் இருக்கும் பலரில் ஒருவர் பிழைத்தாலும் அது ஓர் உலக அதிசயம் ஆகி விடலாம்.

மீண்டும் ஏறி நண்பர்களைக் காணப் புறப்பட்டான் கிறகோர். சிறிது தூரம் ஏறவும் நிலைமை இடம் கொடுக்காமல் திரும்பி விட்டான்.

அண்டியை உச்சியில் ஏற்றி விட முயன்ற ஹோலினால் 4-00 மணிக்கே அதைச் சாதிக்க முடிந்தது. தன் குழுவுக்கு விடுத்த 2-00 மணி காலக்கெடுவை தாண்டி தானே தனது நிபந்தனையை மீறி செயற்பட்டவன் அவன். பாவம். காலநிலை கை கொடுக்கவில்லை.

இறங்கி வருகையிலே இருவரின் நிலைமையும் மோசமடைந்தது. ஆனை ஆள் பிரிந்தும் விட்டனர். ஹோல் தனது தொலைத்தொடர்பு கருவி மூலம் நடக்கத் தன்னால் இயலவில்லை என்ற செதியையும், ஒட்சிசன் தேவை என்பதையும் மேல் மட்ட முகாமுக்கு அறிவித்தான். திறமை மிக்க தமது எசமானைத் தேடி வலை விரித்தனர் ஷேபாஸ் ஆள்கள்! ஆனால் ஹோலைத் தேடிக் கண்டுபிடித்து தேவையான விநியோகத்தை வழங்க முடியாமற் போய் விட்டது.

பன்னிரண்டு நாள்கள் கழித்து அந்த மலையேறும் வழிகாட்டி நிபுணனின் சடலம் பனிப்படலத்தில் விறைத்திருக்கக் கண்டு பிடிக்கப்பட்டது. தலைவனின் நிலையே இதுவென்றால் நம்பி வந்தவர்களின் கதி?......

சிலரைக் காணவில்லை; சிலர் மயக்க நிலையில் மீட்கப்பட்டு அவசரமாக கீழே இறக்கப்பட்டனர்.

தயாராக இருந்த முதலுவிச் சிகிச்சைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. ஷேபாஸ் ஆள்களினதும் கிறகோரினதும் தேடல் முயற்சிகளின் போது பல குழுக்களையும் சேர்ந்த பலரும் 26 ஆயிரம் அடிக்கும் மேலே மீட்கப்பட்டனர். குழுத்தலைவர்களையே இழந்த நிலைமையில் இழப்புக்களின் எண்ணிக்கையை சரிவரக் கணிக்க இயலவில்லை.

பலருக்கும் அவசர மருத்துவ உதவிகள் தேவைப்படும் நிலையில் அவர்களை மீண்டும் அடித்தள முகாமுக்குக் கொண்டு வந்து சேர்ப்பது பெரும்பாடு ஆகி விட்டது. அடித்தள முகாம் ஒரு வைத்தியசாலை போல கோலம் பூண்டது. அங்கும் காற்று தன் கோரத்தை காட்டிக் கொண்டே இருந்தது.

ஆபத்தான கட்டத்தை அடைந்தவர்கள் அவசரம் அவசரமாக அங்கிருந்து ஹெலிக்கொப்டர் மூலம் நேபாள நகரமான காட்மண்டுவுக்கு அனுப்பப்பட்டனர். பின்னர் எஞ்சிய ஏனையோரும் ஹெலிக்கொப்டர் மூலமே அங்கிருந்து காட்மண்டுவை வந்தடைந்தனர்.

இமயம் கண்டிராத இச்சோக வரலாறு இனியும் தொடருமா? வழிகாட்டிகளின் உழைப்பிலும் பிழைப்பிலும் மண் தூவிய இந்த மே 96ஐ மலையேறும் பிரியர்கள் மறந்து விடுவார்களா!

மலையேறப் புறப்படுபவர்களுக்கு கிறகோர் விடுத்த சேதி இதுதான். எந்த மாவீரனையும் நம்பிப் பணம் கொடுத்தும் மலை ஏறிவிடல் முடியாது. இயற்கை தவறும் போது ஆளைக்கும் அடிசறுக்கும். அவலச் சாவு அணு அணுவாய் கொல்லும்போது அந்த உயரத்தில் உடலைத் தொடக்கூட யாரும் வர மாட்டார்கள்.

காட்மண்டுவை அடைந்த பின்னும் தான் உயிரோடு தான் இருக்கிறான் என்பதை கிரகோரினால் நம்ப முடியவில்லை.

(முற்றும்)

# யாழ். உள்ளூராட்சி...

(II ஆம் பக்கத் தொடர்)
திணித்து அதனை நடத்தி முடித்து விட்டால் —

இங்கு இயல்பு நிலை முழுமைக்கு வந்து விட்டது என்றும் ஜனநாயகம் நிலவுகிறது என்றும் பிரசாரம் செய்து வெளிநாடுகளை ஏதோ ஒரு வகையில் சாந்தப்படுத்தி நிதி உதவியைப் பெறலாம் என்ற நம்பிக்கையுடனேயே, — திட்டத்துடனேயே — திடீர் தேர்தல் அறிவிப்பு வந்தது.

வடக்கின் புனர் நிர்மாணம் இப்போது நடைபெறுகிறதோ இல்லையோ அதன் பெயரில் நிதி உதவி கிடைத்தால் தானே அரசின் பணக் கஷ்டம் தீரும்?

## இரண்டாவது காரணம்

யாழ்ப்பாணத்தில் தேர்தல் ஒன்றை நடத்தும் திட்டத்துக்கு இரண்டாவது பிரதான காரணமும் உண்டு.

அரசாங்கம் முன் வைத்துள்ள அதிகாரப் பரவல் திட்டம் குறித்து தமிழ்க் கட்சிகள் ஒரேகுரலில் எதிர்ப்புத் தெரிவிக்காமல் கன்னை பிரிந்து நிற்க வேண்டும் என்பதே அரசின் விருப்பம், தான் தீர்மானிக்கும் தீர்வை- அது, தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றாத அரைவேக்காட்டுத் தீர்வாக இருப்பினும் கூட— தமிழ்க் கட்சிகள் பிளவுபட்டு நின்றாலேயே நுழைத்து விடலாம் என்பது அரசுக்குத் தெரியாதா என்ன?

இப்போதைய அனுபவமும் அதுவே. ஆம்; அரசின் தீர்வு யோசனைகுறித்து அதனிடம் இதனைத் தான் செய்ய வேண்டும் என்று உறுக்கிக் கூறும் நிலையில் தமிழ்க்கட்சிகள் இல்லை! ஒற்றுமையுடன் ஒரே குரலில் ஒலித்தால் அத்தகைய நிலையை எய்தலாம். தமக்குள்ள நாடாளுமன்ற வாக்குப் பலத்தை தக்கபடி, தமிழர் நலன் கருதி, பயன்படுத்தினால் அரசிடம் உறுக்கிச் சொல்லலாம். ஆனால் அவை திக்கு ஒன்று மூலை வேறாகப் பிரிந்து நிற்கின்றனவே!

இது தமிழர்களுக்கு உள்ள பாரம்பரிய குறைபாடு; பழமையான பலவீனம். இந்தப் பலவீனத்தை அதிகரிக்க யாழ்ப்பாண உள்ளூராட்சித் தேர்தல் மிகப் பெரிய அளவில் உதவும் என்று அரசு கணக்குப் போட்டது.

அந்தக் கணக்கு சரியானதே என்று தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் நாளாந்தம் நிரூபித்து வருகிறார்கள்! மக்களுக்கு சிறிதும் அக்கறை இல்லாத விடயத்தில் தமது தலைகளைப் போட்டு அடித்துக் கொள்கிறார்கள்; முட்டி மோதிக் கொள்கிறார்கள்!

ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தும் சந்திரிகாவின் உத்தி இது.

யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடைபெற்றால் போட்டியிடப் போகிறவர்கள் தமிழ்க் கட்சியினரே என்பது அரசுக்குத் தெரியும். எனினும் அவர்கள் தேர்தலுக்குத் தயாராக இருக்கிறார்களா என்பதனை அறியாமலே தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

தேர்தல் அறிவிப்பு வந்தவுடன் தம்மைக் கலந்தாலோசிக்காமல் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்படுவதற்கான திகதி அறிவிக்கப்பட்டமை குறித்து எந்தக் கட்சியும் அரச உயர்பீடத்திடம் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை

ஆனால் யாழ். தேர்தல் குறித்து மௌனம் சாதித்த ஒரு தமிழ்க் கட்சியின் தலைவர்களை ஜனாதிபதி அழைத்துத் தேர்தலில் போட்டியிடுமாறு ஆலோசனை கூறியதாக கொழும்பில் தகவல்கள் கசிந்துள்ளன!

தேர்தல் விடயத்தில் மட்டுமல்ல, எல்லா விடயங்களிலுமே ஜனாதிபதி உறுக்கிப் பேசுபவராகவும், தமிழ்க் கட்சித் தலைவர்கள்கைகட்டி வாய் பொத்திக் கேட்டுக் கொண்டு வருபவர்களாகவுமே உள்ளனர்.

தமிழ் அரசியலில் இத்தகைய காட்சிகள் அரங்கேறும் போது, தமிழர் பிரச்சினைக்கு அவர்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் நியாயமான தீர்வு கிடைக்கும் என்று எவ்வாறு எதிர்பார்க்கலாம் என்று ஸ்ரீமான் பொது ஜனம் கேட்டதில் நியாயமில்லை என்று கூறமுடியுமா?

★

# பகைவனுக்....

(IV பக்கத் தொடர்)
தான். சிவனடியாரைக் கொன்ற பாவத்திற்கு நாம் ஆளாக வேண்டாம், பத்திரமாகக் கொண்டு சென்று திருக்கோவிலூர் எல்லையில் இந்தச் சிவனடியாரை விட்டு விட்டுவா!" என்று கனிவு சிறக்க கட்டளையிட்டார்.

நகரமக்கள் செய்தியறிந்து ராஜமாளிகை முன்றிலில் கூடிவிட்டனர். முத்தநாதனைப் பழிக்குப்பழி வாங்க மக்கள் துடித்தனர். ஆனால், தத்தன் அவர்களுக்கு அரச கட்டளையை எடுத்தியம்பி, பாதுகாப்புடன் முத்தநாதனை எல்லைவரை கொண்டு சென்று விட்டுவிட்டுத் திரும்பினான்.

அவன் வந்து, 'அந்த சிவனடியார் பத்திரமாக எல்லை தாண்டினார்' என்று தெரிவிக்கும் வரை காத்திருந்த மன்னன் மலையமான் இன்முகத்துடன், "நமசிவாய வாழ்க!நாதன்தாள் வாழ்க!' என்றவாறே ஆவிதுறந்தார்: பகைவனுக்கும் பண்புடன் அருளி, இறைவனின் திருப்பதம் சேர்ந்த அம்மாமன்னனை உலகம் இன்றளவும் 'மெய்ப்பொருள் நாயனார்!' என்று போற்றித் துதிக்கின்றது!

-கௌதம நீலாம்பரன்-

## விடைகள்

IX ஆவது பக்கத்தில் சிறுவர் சுடர் பகுதியில் வெளியாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

### இயலுமா?


அ) பிராணி. ஆ) நகரம் இ) விடுதலை ஈ) கவலை. உ) பகமை.

### வார்த்தை விளையாட்டு

1. தனது. 2. நமது. 3. தனம். 4. தவி. 5. தனம். 6. தகனம். 7. மனம். 8. மனது. 9. மதம். 10. மலம். 11. மது. 12. மகம். 13. மதி. 14. விதம். 15. விதி. 16. கவி. 17. கலம். 18. கதம். 19. கலவி. 20. கனம். 21. கமலம். 22. கலகம். 23. கதி. 24. கனதி. 25. கமம். 26. துவி. 27. துதி. 28. தினம். 29. திகதி 30. திலகம். 31. திதி.

### கண்டுபிடியுங்கள்

I.




II. இருபது தடவைகள் வரும். (9, 19, 29, 39, 49, 59, 69, 79, 89, 90, 91, 92, 93, 94, 95, 96, 97, 98, 99)

III.




IV) இரண்டாவது பறவையே. அதன் இறகு சற்று நீளமாக உள்ளதைக் கவனிக்குக.

# கொலரா...

(III ஆம் பக்கத் தொடர்)
களையே உண்ணவும் (வாழைப்பழம், தோடை, மாம்பழம்).

★ சாப்பாட்டு கடைகளில் உணவு, தேநீர் அருந்துவதை குறைக்கவும். இயலுமானால் நிறுத்துவது நல்லது.

## நீர்

உங்கள் தேவைக்கான நீர், பார்ப்பதற்கு நீர் தெளிவாக இருப்பினும் அது கிருமியை கொண்டிருக்கலாம்.

★ நீரை கொதிக்க வையுங்கள். கொதிப்பதால் கொலரா கிருமி அழிகிறது. கொதித்தாறிய நீரையே அருந்துங்கள். நன்கு சூடாகவுள்ள நீருக்குள் சூடு ஆறுவதற்காக பச்சைத் தண்ணீர் கலந்து குடிப்பது பிழையான நடைமுறையாகும்.

பாதுகாப்பாக சேமிக்கப்படாத நீராலும் தொற்று ஏற்படலாம். சிறிய வாயையும், மூடியையும் கொண்ட பாத்திரத்தில் சேமித்து ஒரு நாளுக்குள் பாவித்தல் வேண்டும்.

★ சேமிக்கும் பாத்திரத்தினுள் குவளையை வைத்து அள்ளாமல் ஊற்றி எடுக்கவும்.

★ சுத்தமான கிணற்றிலிருந்து அல்லது குழாய் மூலம் நீரைப்பெறுவதுடன், பொதுக் கிணறுகளை சுத்தமாக பேண வேண்டும். நீர் அள்ளுவதற்கு எல்லோரும் ஒரே வாளியைப் பாவித்தல் நன்று.

★ கிணறுகளுக்கு குளோரின் போடுவதற்கு உங்கள் பகுதி பொது சுகாதார பரிசோதகரை அணுகவும்.

## கைகள்

அனேக அழுக்குகள் கொலரா கிருமியை கொண்டிருப்பினும் கண்ணுக்குத் தெரிவதில்லை. நாம் அறியாதவாறு இவை எங்களால் காவப்படுகின்றன.

எனவே எப்போதும் உங்கள் கைகளைக் கழுவுங்கள்:

★ மலசல கூடத்திற்கு போய் வந்த பின்பு —

★ குழந்தையைத் துப்பரவுப்படுத்திய பின்பு —

★ உணவு தயார் செய்ய முன்பு —

★ [illegible] உண்பதற்கு முன்னர் —

★ குழந்தைக்கு உணவூட்ட முன்னர் — தவறாது கை கழுவுங்கள்.

கழுவுவதற்கு நல்லமுறை சவர்க்காரம் அல்லது சாம்பல் போட்டு அதிகளவு நீரைப்பயன்படுத்தி இயன்ற வரை கையின் எல்லா பாகங்களையும் கழுவுதலாகும். மண் போட்டு கழுவுதல் பிழையான முறை ஆகும்.

## மலசலகூடம்

★ நீர் — அடைப்பு மலசல கூடம் ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் கட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

★ வசதியில்லாதவர்கள் தற்காலிக குழி மலசலகூடங்களை அமைத்தல் வேண்டும்.

★ எப்போதும் மலசல கூடத்திலேயே மலம், சலம் கழித்தல் வேண்டும். காட்டுப்பகுதியில் அல்லது பற்றைகளில் மலசலம் கழித்தல் அப்பகுதி மக்களை பல வழிகளில் நிச்சயமாகப் பாதிக்கும்.

★ மலசல கூடத்தை சுத்தமாக வைத்திருப்பதுடன் குழந்தைகளின் மலக்கழிவுகளையும் அதனுள்ளேயே இடுதல் வேண்டும். அல்லது வெட்டிப் புதைக்க வேண்டும்.

★ பாதணிகளை பாவிப்பதுடன், மலசலகூடத்தை பாவித்த பின்னர் கைகளைச் சவர்க்காரமிட்டுக் கழுவ வேண்டும்.

நீங்கள் உங்கள் வீட்டில், சனசமூக நிலையத்தில், நிறுவனத்தில், பொதுச்சுகாதார பரிசோதகரிடம், வைத்தியரிடம் அல்லது குடும்பநல மாதுவிடம் கொலரா பற்றி கதைத்ததுண்டா? சிந்தியுங்கள்.

வருமுன் காப்பதே நல்லது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் தொங்கு நாடாளுமன்றை நோக்கி இந்தியா!

## அறுதிப் பெரும்பான்மை பெற எக்கட்சிக்கும் வாய்ப்பு இல்லை

இந்திய நாடாளுமன்றம் கடந்த 4 ஆம் திகதி கலைக்கப்பட்டு விட்டது.

அடுத்த வருடம் பெப்ரவரி இறுதியில் அல்லது மார்ச் முற்பகுதியில் தேர்தல் நடைபெறும் என்று இந்தியாவின் பிரதம தேர்தல் கமிஷனர் எம். எஸ். கில் அறிவித்துள்ளார்:

ஜெயின் கமிஷன் அறிக்கையைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் நெருக்கடி காரணமாக நவம்பர் 28 ஆம் திகதி குஜ்ரால் அரசு பதவி விலகியது.

மாற்று அரசு ஒன்றை அமைப்பதற்கு பிரதான கட்சிகளான காங்கிரஸ் கட்சியும், இந்து தேசியவாதக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியும் முயற்சித்தன. அந்த முயற்சி வெற்றி அளிக்கவில்லை.

15 கட்சிகள் அங்கம் வகிக்கும் ஐக்கிய முன்னணியை உடைத்து அதில் உள்ள சில கட்சிகளின் ஆதரவுடன் அரசு அமைக்கலாம் என்பதே காங்கிரஸினதும், பாரதீய ஜனதாவினதும் திட்டம்.

எனினும் ஐக்கிய முன்னணியை அவற்றால் உடைக்க முடியவில்லை. ஐக்கிய முன்னணி உடையாததால் எதிர் வரும் தேர்தலில் காங்கிரஸுக்கும் பாரதீய ஜனதாவுக்கும் நிகராக ஐக்கிய முன்னணியும் தேர்தலில் நிற்கப்போகிறது. இதனால் நஷ்டம் அடையப் போவது காங்கிரஸே.

### ஐக்கிய முன்னணியின் நிலை

ஜெயின் கமிஷன் அறிக்கையினால் எழுந்த அரசியல் நெருக்கடியின்போது குஜ்ரால் அவற்றைக் கையாண்ட முறைகளால் ஐக்கிய முன்னணி சில அரசியல் லாபங்களைச் சம்பாதித்துக் கொண்டதுதான்:


ஆனால் இந்த விவகாரம் எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய முன்னணிக்கு வாக்குகளை அள்ளிக் கொடுக்கும் என்று சொல்வதற்கில்லை.

ஐக்கிய முன்னணியில் உள்ள பிரதான கட்சியான ஜனதா தள் கட்சியால் எதிர்வரும் தேர்தலில் பீஹார், ஒரிஸா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் குறிப்பிட்ட அளவு வெற்றிகளை ஈட்ட முடியுமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. இந்த மூன்று மாநிலங்களிலும் தற்போதுள்ள பலத்தைத் தக்கவைத்துக் கொண்டாலே ஜனதா தள்ளுக்கு அது பெரும் வெற்றி என்று அரசியல் அவதானிகள் கருதினர்.

மேற்கு வங்காளம், கேரளா, பீஹார் ஆகிய மாநிலங்களில் இடதுசாரிகள் ஈட்டும் வெற்றியிலும் —

தமிழ் மாநில காங்கிரஸ், தி.மு.க., தெலுங்கு தேசம், அசாம் கணபரிசத், சமாஜ்வாடி, பஹுஜன் சமாஜ் ஆகிய பிராந்தியக் கட்சிகள் ஈட்டும் வெற்றியிலுமே அடுத்த தேர்தலில் ஐக்கிய முன்னணியின் பலம் தங்கி இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

தற்பொழுது கலைக்கப்பட்ட 11ஆவது நாடாளுமன்றத்தில் ஐக்கிய முன்னணிக்கு 177 ஆசனங்களும், பாரதிய ஜனதாவுக்கு 162 ஆசனங்களும், காங்கிரஸுக்கு 140 ஆசனங்களும் இருந்தன.




உலக உலா
என்.பி.சீலன்

### தனிக்கட்சியாக மீண்டும் பாரதிய ஜனதா

எதிர்வரும் 12 ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் தற்போது உள்ளதை விட கூடுதல் ஆசனங்களை பாரதீய ஜனதா கைப்பற்றலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் 545 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் லோக சபையில் பாரதீய ஜனதா அறுதிப் பெரும்பான்மை பெறமாட்டாது என்பதே தற்போதைய அரசியல் கணிப்பீடு.

தேர்தல் நடக்க இன்னும் இரு மாதங்கள் இருப்பதால் அதற்குள் புதிய கூட்டணிகள் உருவாகலாம் என்றும்—

அப்படி உருவானால் இந்த நிலைமை மாற்றம் அடையலாம் என்றும் — கூறுகிறார் C.M.S. எனப்படும் (Centre For Media Studies) இந்தியாவின் பிரபல கருத்துக் கணிப்பு அமைப்பு ஒன்றின் தலைவர் கலாநிதி என். பாஸ்கரராவ்.

கடந்த 4ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டவுடன் இந்த அமைப்பு மேற்கொண்ட கருத்துக் கணிப்பின்படி அடுத்த பொதுத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி 195 முதல் 235 ஆசனங்களையும் —

ஐக்கிய முன்னணி 160 முதல் 190 ஆசனங்களையும் —

காங்கிரஸ் கட்சி 80 முதல் 120 ஆசனங்களையும் —

சுயேச்சை உறுப்பினர்கள் 35 முதல் 60 ஆசனங்களையும் — கைப்பற்றுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர்களை அதிகமாகக் கொண்ட உத்தரப் பிரதேசம், பீஹார், மகாராஷ்டிரம், மத்திய பிரதேசம், ஆந்திரா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் இந்த அபிப்பிராய கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

இந்திய நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் இந்த ஆறு மாநிலங்களில் இருந்தும் தெரிவாகின்றனர்.

### காங்கிரஸ் தனித்துப் போட்டி

எதிர்வரும் தேர்தலில் கூட்டுச் சேராது தனித்துப் போட்டியிடப் போவதாகக் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

எனினும் பலம் வாய்ந்த பிராந்தியக் கட்சிகளுடன் அது கூட்டணி அமைப்பதில் வெற்றி பெற்றால் நிலைமை ஓரளவு மாறலாம் என்று நம்பப்படுகிறது.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை தி.மு.க. தொடர்ந்து பலம் வாய்ந்த நிலையிலேயே இருந்து வருகிறது.

தி.மு.க. கூட்டணியிலிருந்து தமிழ் மாநில காங்கிரஸை உடைத்து தமிழ் மாநில காங்கிரஸுடனும் அ.தி.மு.க வுடனும் கூட்டணி அமைப்பதில் காங்கிரஸ் வெற்றி பெறுமானால் தி.மு.க. வின் பலத்தை ஒழிக்க முடியும்.

ஆனால் தமிழ் மாநில காங்கிரஸ் காங்கிரஸுடன் சேர்ந்தாலும் அ.தி.மு.க வுடன் சேரும் நிலை அறவே கிடையாது.

தமிழ் மாநில காங்கிரஸ் [illegible] சோனியா காந்தியை அடிக்கடி சந்திப்பது தி.மு.க. — தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணியின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி வருகிறது. காங்கிரஸுக்கு சோனியாவின் தலைமையை மூப்பனார் விரும்புகிறார்.

பிரதம தேர்தல் கமிஷனர் எம். எஸ். கில் (M. S. Gill) எதிர்வரும் 22 ஆம் திகதி இந்தியாவின் 7 தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளையும்— 23 ஆம் திகதி 38 பிராந்தியக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்திக்கிறார். அதன் பின்பே தேர்தல் நடைபெறும் உத்தியோக பூர்வ திகதி அறிவிக்கப்படும்:

திகதி அறிவிக்கப்பட்ட பின்பு இந்தியாவில் "தேர்தல் ஜுரம்" உச்சக்கட்டத்தை அடையும்.

### 60 கோடி மக்கள் வாக்களிப்பு

எதிர்வரும் தேர்தலில் 60 கோடி மக்கள் வாக்களிக்க முடியும். 45 லட்சம் தேர்தல் அதிகாரிகள் நியமிக்கப்பட உள்ளனர். நாடு முழுவதும் 8 லட்சத்து 50 ஆயிரம் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

இந்திய பொருளாதாரம் தற்பொழுது சிறிது சிறிதாக வளர்ந்து வரும் நிலையில் குறுகிய காலத்துக்குள் மற்றொரு தேர்தல் இந்தியாவுக்கு பெரும் பொருளாதாரச் சுமைதான் என்பதில் சந்தேகம் இல்லை

மீண்டும் தொங்கு நாடாளுமன்றம் (Hung Parliament) ஒன்று ஏற்பட்டு ஸ்திரமான ஆட்சி ஏற்படாவிடில் இந்தியா போன்ற ஒரு நாட்டுக்கு மற்றும் ஒரு தேர்தல் பெரும் சுமையாகவே இருக்கப் போகிறது. ★

---

இந்திய அரசியல்வாதிகள் 18 மாத காலத்துக்குள் பொதுமக்களிடம் மீண்டும் வாக்குப் பிச்சை கேட்கும் நிலையை தற்போதைய திடீர் தேர்தல் உருவாக்கி இருக்கிறது.

எதிர்வரும் தேர்தலுக்கு 750 கோடி ரூபா (இந்திய ரூபா) செலவிடப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற தேர்தலுக்குச் செலவான பணத்தை விட இது அதிகம்.

கடந்த தேர்தலுக்கு 600 கோடி ரூபாவே செலவானது.

ஜனநாயகத்துக்காக தேர்தல் நடக்கும் போது செலவீனத்தை பார்க்க முடியாது என்கிறார் பிரதம தேர்தல் கமிஷனர் எம். எஸ். கில்

---

இந்தியாவின் 11 ஆவது நாடாளுமன்றம் சுமார் 18 மாதகாலமே பதவியில் நீடித்தது. இந்தியாவின் வரலாற்றில் மிகக் குறுகிய காலம் (12 நாள்கள்) அரசு ஒன்று ஆட்சியில் இருந்ததும், எதிர்கட்சியைச் சேர்ந்த சபாநாயகர் ஒருவர் பதவியில் அமர்த்தப்பட்டதும் இந்த 11 ஆவது நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தில்தான்.

1996 மே 14 ஆம் திகதி இந்த நாடாளுமன்றம் உருவாக்கப்பட்டது. 1997 டிசம்பர் 4 ஆம் திகதி கலைக்கப்பட்டது.

★ மே 14 — 1996: பதினோராவது நாடாளுமன்றம் உருவாக்கப்பட்டது.

★ மே 16: பாரதீய ஜனதாக்கட்சியின் தலைவர் வாஜ்பாய் பிரதமராகப் பதவி ஏற்றார்.

★ மே 23: பி.ஏ சங்மா சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார். எதிர்க்கட்சியில் இருந்து தெரிவான முதலாவது சபாநாயகர் அவர்.

★ மே 28: நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு பாரதீய ஜனதா அரசு தோற்கடிக்கப்பட்டது. பிரதமர் வாஜ்பாய் இராஜினாமாச் செய்தார். இந்திய வரலாற்றில் மிகக் குறுகிய காலம் ஆட்சி செய்த அரசு இதுதான்.

★ ஜூன் 1: தேவகௌடா தலைமையில் ஐக்கிய முன்னணி அரசு அமைக்கப்பட்டது. காங்கிரஸ் வெளியில் இருந்து ஆதரவு வழங்கியது.

★ மார்ச் 30 — 1997: தேவகௌடா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசுக்கு வழங்கிய ஆதரவை காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரி விலக்கினார்.

★ ஏப்ரல் 11: நம்பிக்கைத் தீர்மான வாக்கெடுப்பில் ஐக்கிய முன்னணி அரசு தோல்வி கண்டது. தேவகௌடா இராஜினாமாச் செய்தார்.

★ ஏப்ரல் 21: ஐ. கே. குஜ்ரால் பிரதமராகப் பதவி ஏற்றார்.

★ ஏப்ரல் 22: நம்பிக்கைத் தீர்மான வாக்கெடுப்பில் குஜ்ரால் அரசு வெற்றி கண்டது

★ நவ. 9: ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கை வெளியானது. ராஜீவ் காந்தி கொலையின் பின்னணியில் தி.மு.க. அரசின் பங்கு குறித்து தெரிவிக்கப்பட்ட விடயங்கள் காங்கிரஸுக்குள் பெரும் புயலைக் கிளப்பின.

★ நவ. 20: ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது. ஐக்கிய முன்னணி அரசில் இருந்து தி.மு.க. வெளியேற்றப்பட வேண்டும் என்று காங்கிரஸ் கோரிக்கை விடுத்தது. தி.மு.க. வெளியேற்றப்படாவிட்டால் ஐக்கிய முன்னணி அரசுக்கு அளித்து வரும் ஆதரவை விலக்கிக் கொள்ளப் போவதாகவும் காங்கிரஸ் அறிவித்தது.

★ நவ. 24: நாடாளுமன்ற நடவடிக்கைகளை காங்கிரஸ் குழப்பியதை அடுத்து சபாநாயகர் நாடாளுமன்றக் கூட்டத்தை ஒத்தி வைத்தார். தி.மு.க. வெளியேற்றப்பட வேண்டும் என்ற காங்கிரஸின் கோரிக்கையை குஜ்ரால் நிராகரித்தார்.

★ நவ. 26: தி.மு.கவை வெளியேற்ற வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டில் இருந்து விட்டுக் கொடுக்க காங்கிரஸ் மறுத்தது

★ நவ. 28: ஐக்கிய முன்னணி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை காங்கிரஸ் விலக்கிக் கொண்டது. ஐக்கிய முன்னணி அரசு பதவி விலகுவதாக குஜ்ரால் அறிவித்தார்.

★ டிச. 4: ஜனாதிபதி நாராயணன் 11 ஆவது லோக சபையை கலைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடியுங்கள்!


I.




முதலாம் இலக்கத்திலிருந்து புறப்பட்டு இரண்டாம் இலக்கத்தை அடைவதற்கு உங்களுக்கு வழிதெரிகின்றதா? கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

II. ஒன்று தொடக்கம் நூறு வரையான எண்களில் ஒன்பது என்ற இலக்கம் எத்தனை தடவைகள் வரும்?

III.




மேற்படி படத்தில் 5 ஆம் இலக்கத்துக்கு அருகில் வர வேண்டிய அம்புக்குறி எப்படியிருக்க வேண்டும்.

IV.




மேற்படி படத்தில் ஒரு பறவை மட்டும் சற்று வித்தியாசமானது. அது எது என்பதை உங்களால் கண்டுபிடிக்க முடிகின்றதா?

(விடை XI பக்கத்தில்)

# தென்னாலிராமனின் மதியூகத் தீர்ப்பு!

நான்கு திருடர்கள் தாம் திருடிய நகைகள், வைரங்கள் போன்றவற்றை பாதுகாப்பாக ஒளித்து வைக்கத் தீர்மானித்தார்கள். அவற்றைத் தோண்டி போன்ற ஒரு தவலையில் போட்டு மேலே மூடி முத்திரையிட்டனர்.

பின்னர் தோண்டியை, தாங்கள் வாடிக்கையாக உணவருந்தும் விடுதியின் சொந்தக்காரியான பாட்டியிடம் எடுத்துச் சென்றனர். பாட்டிக்கு முன்பாக விடுதியின் கொல்லைப்புறத்தில் தோண்டியைப் புதைத்தனர். பாட்டியிடம் "பாட்டி! இந்தத் தோண்டியில் இருக்கும் பெறுமதியான பொருள்கள் எல்லாம் எங்கள் நால்வருக்கும் பொதுவானவை. ஆகையால் நாங்கள் நாலு பேரும் ஒன்றாக வந்து கேட்டால்தான் இதை எடுக்க நீ அனுமதிக்க வேண்டும். எங்களில் தனியாக ஒருவரோ அல்லது இருவரோ அல்லது மூவரோ வந்து கேட்டால் இதை நீ எடுக்க அனுமதிக்கக் கூடாது"—என்று அவர்கள் நிபந்தனையும் விதித்தார்கள்.

சில நாள்கள் போயின.

ஒரு நாள் நான்கு திருடர்களும் விடுதியின் வெளித் திண்ணையில் அமர்ந்து சுவாரசியமாகச் சூதாடிக் கொண்டிருக்கும் போது தெருவில் ஒருத்தி நீர்மோர் விற்றுக்கொண்டு சென்றாள். மோர் சுவையாய் இருந்ததால் மோர் முழுவதையும் ஒரு தவலையில் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டுமென்று நான்கு திருடர்களும் ஆசைப்பட்டார்கள். அவர்கள் தங்களில் ஒருவனை நோக்கி 'அடே! உள்ளே போய் பாட்டியிடம் கேட்டு நீர்மோர் வாங்குவதற்கு ஒரு தோண்டி எடுத்துக்கொண்டுவா!" என்றனர்.

அந்தத் திருடன் அதுதான் சமயமென்று விடுதிக்காரியான கிழவியிடம் சென்று "பாட்டி! புதைத்து வைத்திருக்கும் நகை, வைரம் உள்ள தோண்டியை எடுத்துவரச் சொன்னார்கள் என் நண்பர்கள்!"—என்று புளுகினான்.




உடனே பாட்டி வெளித் திண்ணைக்கு வந்து மற்ற மூன்று பேர்களிடமும் "தோண்டி எடுத்துக் கொடுக்கச் சொன்னீர்களா?" என்று கேட்டாள். அவர்களும் "ஆமாம் பாட்டி! சீக்கிரம் அவனிடம் தோண்டியை எடுத்துக்கொடு!" என்றனர்.

கிழவி உள்ளே வந்து நான்காவது திருடனிடம் ஒரு கடப்பாறையை எடுத்துக் கொடுத்து "சீக்கிரம் தோண்டி எடுத்துக்கொண்டு போ அப்பா: என் பொறுப்பு தீர்ந்தது!" என்றாள்.

அவன் கொல்லைப்புறத்தில் புதைத்து வைத்திருந்த பொன் பொருளுடைய தோண்டியை எடுத்துக் கொண்டு கொல்லைப்புறமாகவே நழுவி ஓடிவிட்டான்.

சற்று நேரத்தில் நடந்த மோசத்தையறிந்த மற்ற மூன்று சகாக்களும் "பாட்டி! நீதான் அந்த நஷ்டத்தைக் கொடுக்க வேண்டும்!" என்று கூறி அவள்மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள்.

வழக்கு தென்னாவிராமன் முன்னால் விசாரணைக்கு வந்தது. ராமன் நடந்ததை விசாரித்தான். பாட்டி குற்றமற்றவள் என்பதை உணர்ந்து கொண்டான். அதற்கேற்ப தீர்ப்பு வழங்கினான்.

"சட்டரீதியாக தான் ஒப்புக்கொண்டபடி பாட்டி நடந்தே ஆகவேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். நீங்கள் நான்கு பேரும் ஒன்றாகச் சேர்ந்து வந்து கேட்டால்தான் தோண்டியை நிலத்திலிருந்து தோண்டி எடுத்து பாட்டி தர வேண்டும். இப்போது நீங்கள் மூன்று பேர்தான் ஒன்றாக வந்திருக்கிறீர்கள் நான்காவது நபரையும் கூட்டிக் கொண்டு நீங்கள் வந்தால் தோண்டியை எடுத்துத் தரும்படி பாட்டிக்கு உத்தரவிடலாம்"—என்று தீர்ப்பளித்தான் ராமன்.

வழக்குத் தொடர்ந்த மூன்று திருடர்களும் வேறு வழியின்றி திருதிருவென்று முழித்தார்கள். நகை மற்றும் வைரங்களைச் சுருட்டிக்கொண்டு தலைமறைவான நான்காவது திருடன் வராமல் தாங்கள் பாட்டியை எதுவும் செய்ய முடியாது என்பதை உணர்ந்த திருடர்கள் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு நடையைக் கட்டினார்கள்.

தொகுப்பு:
மு. அகிலானி
(உடுப்பிட்டி)

# இயலுமா?

பின்வரும் தகவல்களை வைத்து உரிய சொல்லை உங்களால் கண்டுபிடிக்க முடிகிறதா பார்ப்போம்.

(அ) இந்த மூன்றெழுத்துச் சொல் உயிரினங்களைக் குறிப்பது. இறுதி இரண்டு எழுத்தும் அரசியைக் குறிக்கும். அந்த அரசியின் பேரில் ஒரு புகழ்பெற்ற சவர்க்காரமும் உண்டு. அந்தப் பெயர் என்ன.

(ஆ) இது நான்கு எழுத்து உலோகப் பொருளாக முதல் இரண்டெழுத்தும் இழக்க மதுப்பொருளாகும் முதல் எழுத்து நீங்க உடல் உறுப்பாகிவிடும். இரண்டாம் எழுத்து நீங்க வகுப்பைக் குறிக்கும். அந்த உலோகப் பொருள் எது?

(இ) இப்போது பாடசாலைகளுக்கு இந்த நான்கு எழுத்துக் காலம். மாணவருக்கு அதனால் கொண்டாட்டம். இச் சொல்லின் இறுதி இரண்டெழுத்தும் மனித உடலின் முக்கிய அவயவம் ஆகின்றது. முதல் எழுத்தும் கடைசி எழுத்தும் சேர விற்பனையாகும் பொருளுக்கு நிர்ணயிக்கப் படும் ஒன்று பிறக்கும். அந்த நான்கு எழுத்துச் சொல் யாது?

(ஈ) இழப்பால் வரும் இந்த மூன்று எழுத்துச் சொல் மனதில் குடிகொள்ளக் கூடியது. முதலெழுத்தை நீக்கிவிட்டு மீன் பிடிக்கலாம். நடு எழுத்தை நீக்க சங்கீதம் அடங்கும் ஒரு துறை பிறக்கும். மனதில் குடிகொள்ளக்கூடிய அச் சொல் யாது?

(உ) மழை பெய்ததால் நமது சூழல் இந்த மூன்றெழுத்துச் சொல்லால் பச்சை நிறமாகிவிட்டது. இச் சொல்லின் முதல் எழுத்தை நீக்க பாரமாகும். முதல் இரண்டு எழுத்தும் சோமாதா. கடைசி எழுத்து பேனைக்குத் தேவைப்படுவது. அந்த மூன்றெழுத்துச் சொல் என்ன?

தொகுப்பு:- உளம்பாடி,
யோ. தினேஸ்குமார்,
கரவெட்டி.

(விடை XI ஆம் பக்கத்தில்)

# அணில் குஞ்சுத் தம்பி


அணில் குஞ்சுத் தம்பியார்
ஆகாயத்தில் பாய்கிறார்
அம்பிப்பயல் பார்க்கவே
அடுத்தடுத்துக் கத்துறார்.

வாலை வாலை ஆட்டுறார்
மாமரத்தில் பாய்கிறார்
கையைப் போலக் காலினால்
கனியைத் தூக்கித் தின்னுறார்.

வாயை வைத்துக் கடிக்கிறார்
மரத்தின் கீழே போடுறார்
நாயைக் கண்டு பயத்திலே
உச்சிக் கொப்பில் தாவுறார்.

சண்முகப்பிரியா கனகரத்தினம்,
ஆண்டு-4,
(புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்தக் கல்லூரி.

# வார்த்தை விளையாட்டு




சிறுவர், சிறுமியரே!... இது ஒரு வார்த்தை விளையாட்டு. மேலே உள்ள வட்டத்தில் ஒன்பது எழுத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த ஒன்பது எழுத்துக்களையும் நீங்கள் முன்னும் பின்னுமாக எப்படிவேண்டுமானாலும் எத்தனை தடவை வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதன் மூலம் உங்களுக்கு நிறையத் தமிழ் வார்த்தைகள் கிடைக்கும். குறைந்தது இருபத்தியைந்து வார்த்தைகளாவது உங்களால் உருவாக்க முடியுமா என்று பாருங்கள்.

(விடை XI ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org